بسم الله الرحمن الرحيم

“

அன்றியும் உங்களுக்கிடையில் ஒருவர் மற்றவரின் பொருளை சாப்பிடாதீர்கள். மேலும் நீங்கள் அறிந்து கொண்டே பிற மக்களின் பொருள்களிலிருந்து எந்த ஒரு பகுதியையும், அநியாயமாகத் திண்பதற்காக அதிகாரிகளிடம் (இலஞ்சம் கொடுத்க) நெருங்காதீர்கள்.

அல்குர்ஆன் 2 : 188

”


ஜல்லிக்கட்டும் போராட்டமும் - 6

காற்றில் விடப்பட்ட ஊடக தர்மம் - 12

காவல்துறை அதிகாரிகள் என்ன கைதுகளுக்கும் அப்பாற்பட்டவர்களா? - 14

அரசு நடத்திய வன்முறை - 16

காந்திஜி கொலை - 26

எஸ்.எம்.முஷ்ரிஃப் கூற்று உண்மையானது - 31

உளவுத்துறை : அஜித் ஷாகியின் குற்றப்பத்திரிகை - 34

முஸ்லீம்களின் வீழ்ச்சியால் உலகம் இழந்ததென்ன ? - 47

எது முதலில் ? - 50

கற்காலம் ஒரு வரலாற்றுப் பொய் - 55

பாபர் மசூதியில் ராமன் குதித்த வரலாறு - 59

நிர்வாக இயலின் தந்தை செர்ஷா சூரி - 64



பிப்ரவரி - 2017

# வைகறை வெளிச்சம்

ஜமாதுல்அவ்வல்-1438

ஆசிரியர்

மு. குலாம் முஹம்மது, M.A.,
Journalism & Mass Communication

துணை ஆசிரியர்

கே.எம். இலியாஸ் ரியாஜி, M.A.,

தனி இதழ் : ரூ. 20 /-
ஆண்டுச் சந்தா
உள் நாடு : ரூ. 240 /-
வெளி நாடு : ரூ. 1500 /-
பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்
**DARUL ISLAM FOUNDATION TRUST**
என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

விளம்பரங்களுக்கு 81481 29887



All disputes arising out of any publication in this monthly will come under the jurisdication of Chennai courts.



http:/www.facebook.com/vaigarivelicham

**VAIGARAI VELICHAM**
52/1, Mannady Street, Room No. 7, Mannady,
Chennai - 600 001. Tel : 81481 29887
Email : darultrust@yahoo.com
Web : www.darulislam.in

# ஒற்றைக் கலாச்சார திணிப்பிற்கு எதிரான போர்

என்ன ஆச்சர்யம்! சென்னை மெரினாவில் கூடிய போராட்டக்காரர்கள் அத்தனை பேரும் இளைஞர்கள். அத்தனை பேரும் அறிவாளிகள். ஆனால் இராணுவ கட்டுப்பாடுடன் காணப்பட்டார்கள்.

அதேபோல் இளம்பெண்கள் என்ன எழுச்சி, என்ன கட்டுப்பாடு அன்னையர்போல் அன்பு காட்டி வந்த உணவை அனைவருக்கும் ஊட்டிக் கொடுத்தார்கள்.

ஒழுக்கம், விழுப்பந்தரலில், அது உயிரினும் ஓம்பப்பட்டது என்ற வரிள் மெரினா போரில் எழுந்து உயர்ந்து நின்றது.

துண்டு பிரசுரம், விண்ணைத் தொடும் பாதாகைகள், இவை இன்றி லட்சக் கணக்கில் குவிந்தனர் இளைய சமுதாயத்தினர்.

தாங்கள் காட்டிய கட்டுப்பாட்டால் ஒற்றுமை உணர்வால் உலகையே உலுக்கி னார்கள். உலகத்தை தங்கள் போருக்கு அணியாய் ஆக்கிக் கொண்டார்கள். அமெரிக்காவின் வீதிகளே அலறின.

இப்படி அணிதிரண்ட மக்களின் இல்லை காளைகளின் அணியில் ஒரு கட்டத்தில் 12 லட்சம் பேர்.

“மனித தலை பெருத்ததால் கடல் சிறுத்ததோ” என்பவை கவிதைகளாக இருக்க வில்லை, கண் குளிர் காட்சியாய் உண்மைப் படுத்தப்பட்டது மெரினாவில்.

இத்தனையும் எதற்காக, டெல்லியிலே இந்து, ஹிந்தி, இந்து ராஷ்டிரம் என்ற கொள்கையைக் கொண்டவர்கள், தமிழர்களின் கலாச்சாரத்தை முதலில் பின்னுக்குத்தள்ளவும், பின்னர் இல்லா மலாக்கவும், மேற்கொண்ட முயற்சியை முறியடிக்கத்தான்.

இவர்கள் ஒற்றைக் கலாச்சாரத்தை மொத்த நாட்டிலும் நிலை நாட்டிட முயற்சி செய்கின் றார்கள். இதனால்தான் தமிழர் விழாக்களின் ஓர் அங்கமாக அமைந்த, ஜல்லிக்கட்டுத் தடை விதித்தார்கள். அதனை விலக்குங்கள் என ஓடிய தமிழக முதல்வரையும், தமிழக மக்களின் ஆர்ப்பணிக்கும் போராட்டத்தையும் புரிந்து கொள்ளவில்லை. டெல்லியிலே ஆட்சி செய்து கொண்டிருந்த ஒற்றைச் கலாச்சார திணிப் பாளர்கள். எங்களால் எதுவும் முடியாது என்றார் கள், கையை விரித்தார்கள். அத்தோடு நிற்காமல் பொங்கலுக்குப் பொது விடுப்பு இல்லை, விருப்பப்படுபவர்கள் வேண்டுமானால் விடுப்பு எடுத்துக் கொள்ளலாம் என்றொரு அறிவிப்பைச் செய்தார்கள். காலப்போக்கில் அதுவும் இல்லை என அறிவிக்கலாம் என்பது டெல்லியின் திட்டம்.

ஆயிரம் போர்ப் பிரகடனங்களைப் பின் வாங்கிக் கொண்டார்கள் தங்கள் அறிவில்லை, பதுங்கிப் பாயும் பாசிஸ்ட்டுகள்.

இதில் தோற்றவர்கள் ஜல்லிக்கட்டுக் கலாச்சாரத்தை சிதைக்க வேண்டும் என கங்கனம் கட்டி நின்றவர்கள். ஒற்றைக் கலாச்சாரத்தைத் திணிக்க எடுக்கும் முதல் படியிலேயே உங்களை வீழ்த்திக்காட்டுவோம் என மாணவர்கள் அணி திரண்டார்கள், எழுச்சியை இலட்சியப் பிடிப்பை அணையா விளக்காய் காப்பாற்றிக் கொண் டார்கள்.

பொறுக்க இயலவில்லை, ஒற்றைக் கலாச் சார திணிப்பாளர்களால் அரசுக்கு இல்லாத பொல்லாத அழுத்தங்களைத் தந்து, வெண்ணை திரண்டு வரும்போது தாழியை உடைத்து விட் டார்கள் நமது மாநில அரசு.

அமைதியில் அறவழியில் திரண்ட இளை ஞர்கள் அடித்து நொறுக்கிப் போட்டு விட்டார் கள். அனைத்தையும் தாங்கிய அந்த இலட்சிய வீரர்கள் தங்கள் உடல்கள் ரண மாக்கி இலட்சியத்தை அடைந்தே விட்டார்கள்.

தமிழக அரசுதான் தீராத அவப்பெயரை சம்பாதித்துக் கொண்டது. தனது வரலாற்றில் முகத்திலும் கரியை வாரிப் பூசிக்கொண்டது.

இந்த போராட்டக்காரரின் இலட்சியத்தை டெல்லியிலே இருப்பவர்கள் நன்றாகப் புரிந்து

கொள்ள வேண்டும். அது நீங்கள் ஒற்றைக் கலாச்சாரத்தை – இந்துக் கலாச்சாரம் என நீங்களே படுத்துக்கொண்ட கலாச்சாரத்தை திணிக்க வேண்டும் என நினைத்தால் அதில் நிச்சயமாகத் தோற்றுப் போவீர்கள். இது நீங்கள் படிக்க வேண்டிய முதல் பாடம்.

அடுத்து, இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான அநியாயங்கள், அத்து மீறி போனபோது சிங்கள அரசு திமிர்ப்பிடித்து நின்றபோது ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் இப்படி அறிவுரைக் கூறினார். “பல மொழியை நாம் அங்கீகரித்தால் இலங்கை ஒன்றாக இருக்கும். ஒரே மொழியைத் தான் அங்கீகரித்தால் நாடு பலவாகும்”

அங்கே மொழி, இங்கே கலாச்சாரம், டெல்லியிலே இருப்பவர்களுக்கு இதில் சிறந்த பாடம் இருக்கின்றது. நாட்டில் நடப்பிலிருந்து பல கலாச்சாரங்களையும் அங்கீகரித்தால்தான் நாடு ஒன்றாய் ஒற்றுமையாய் இருக்கும்.

ஒற்றைக் கலாச்சாரத்தை திணிக்க முயன்றால் அது இந்தியாவின் ஒற்றுமைக் கும், ஒருமைப் பாட்டுக்கும் செய்யும் மிகப்பெரும் துரோகமாக அமையும். நீங்கள் சுதந்திர போராட்ட நாள்கள் முதலே இந்த நாட்டுக்குத் துரோகம் செய்த வரலாற்றுச் சொந்தக்காரர்கள் என்பதை மக்கள் நன்றாக அறிந்திருக் கின்றார்கள் என்பதை மெரினாவில் கூடிய மக்கள் காட்டி இருக்கின்றார்கள் எச்சரிக்கை.

இந்தியாவை முஸ்லிம்கள் 800 ஆண்டுகள் ஆண்டார்கள், ஸ்பெயின் நாட்டை 800 ஆண்டு காலம் ஆண்டார்கள் என்ற வரலாறு நமக்கு ஆச்சரியத்தை தந்தபோது அது எப்படிச் சாத்தியமான து என்பதை வரலாற்று ஆய்வாளர்கள் விளக்கியுள்ளார்கள்.

அது முஸ்லிம்கள் மக்கள் பின்பற்றி வந்த ஒற்றைக் கலாச்சாரங்களையும் அங்கீரித் தார்கள். எல்லா மொழிகளையும் அங்கீ கரித் தார்கள் எல்லாவற்றிற்கும் மேலாக எல்லா மக்களையும் ஒன்றுபோல்– சமமாக – சமத்துவமாக நடத்தினார்கள். இதனால் அவர்கள் 800 ஆண்டுகள் ஆட்சி செய்தார்கள்.

எந்த மக்கள் கிளர்ச்சியுமில்லாமல் உங்களால் 2½ ஆண்டுகள் கூட ஆட்சி செய்ய முடியவில்லை. நீங்கள் இஸ்லாமிய வரலாற்றை நீங்கள் விழுந்து, விழுந்து படித்துப் பாடம் பயின்றிட வேண்டும்.

இறைவன் கூறுகின்றான் :

“மனிதர்களில் சிலரை, சிலரைக் கொண்டு அல்லாஹ் தடுக்காதிருப்பின், ஆசிரமங்களும், கிருஸ்தவ ஆலயங்களும், யுதக்கோயில்களும், அல்லாஹ்வின்திருநாமம்அதிகமாகக்கூறப்படும், பள்ளிவாசல்களும்இடிக்கப்பட்டிருக்கும்” *22:40*

அத்தோடு நம்பிக்கைக் கொண்டோரே..

நீதி செலுத்துங்கள் – “ஒரு கூட்டத்தார் மீது நீங்கள் கொண்டுள்ள பகைமை நீதியோடு நடந்து கொள்ளாமலிருக்க உங்களைத் தூண்ட வேண்டாம்” *5:8*


## வேர்கள் வெளியீட்டகத்தின் நூல்கள்

| | |
|---|---|
| 1. சிறையில் எனது நாட்கள் - ஜெய்னப் அல் கஸ்ஸாலி - பக்கம் : 212 | ரூ. 90.00 |
| 2. ஆஃப்கானிஸ்தான் முஜாஹித்களின் தியாக வரலாறு - மு. குலாம் முஹம்மது | ரூ. 100.00 |
| 3. சாதி ஒழிந்தது - டி.எம். மணி, ஐந்தாம் பதிப்பு - பக்கம் 132 | ரூ. 50.00 |
| 4. End of Casteism T.M. Mani பக்கம் -134 | ரூ. 50.00 |
| 5. அஹமதாபாத் குண்டுவெடிப்புகள் - மு. குலாம் முஹம்மது, பக்கம் -48 | ரூ. 10.00 |
| 6. டெல்லி குண்டுவெடிப்புகள் - மு. குலாம் முஹம்மது, பக்கம் - 48 | ரூ. 10.00 |
| 7. நாடாளுமன்ற தாக்குதல் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள், மு. குலாம் முஹம்மத் | ரூ. 25.00 |
| 8. மால்கம் எக்ஸ் - மு. குலாம் முஹம்மது, பக்கம் -231 | ரூ. 80.00 |
| 9. தீண்டாமையை கற்பிக்கும் கடவுளை மாற்றுவோம், டி.எம். மணி, பக்கம் -31 | ரூ. 20.00 |
| 10. செந்தமிழ்நாட்டுச் சேரிகள்- டி.எம். மணி, பக்கம்:94 | ரூ. 40.00 |
| 11. கர்கரேயை கொலை செய்தது யார்? பக்கம் 453 | ரூ. 250.00 |
| 12. சிந்திப்பீர் செயல்படுவீர், நா. கோதண்டபாணி, பக்கம் 47 | ரூ. 15.00 |
| 13. ஒரு நீதிபதியின் விடுதலை முழக்கம், ப. கோபால கிருஷ்ணன், பக்கம்-84 | ரூ. 40.00 |
| 14. சாதி ஒழிந்தது- ஹிந்தி - டி.எம். மணி, பக்கம் - 148 | ரூ. 50.00 |
| 15. நாம் பிரிந்து விடவேண்டாம், பேராசிரியர் கா.மு. இல்யாஸ் ரியாஜி, பக்கம்-292 | ரூ. 175.00 |
| 16. தாலிபானின் பிடியில், மு. குலாம் முஹம்மது, பக்கம் - 202 | ரூ. 90.00 |
| 17. பாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு, மு. குலாம் முஹம்மது பக்கம்-163 | ரூ. 110.00 |
| 18. பாபரி மஸ்ஜித் அடிப்படை தகவல்கள், மு. குலாம்மது, பக்கம் -143 | ரூ. 90.00 |
| 19. இஸ்லாமிய நாகரிகம் - முஸ்தஃபா அல் சிபாய், பக்கம் - 206 | ரூ. 130.00 |
| 20. கஷ்மீரின் பாதி விதவைகள், மு. குலாம் முஹம்மது, பக்கம் - 140 | ரூ. 70.00 |
| 21. எது முதலில்? டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவீ, தமிழில் கா.மு. இல்யாஸ் ரியாஜி | ரூ. 50.00 |
| 22. சாதி ஒழிந்தது - கன்னடம், | ரூ. 50.00 |
| 23. அண்ணல் அம்பேத்கரின் மதமாற்றம் பின்னணி? டி.எம். உமர் ஃபாரூக் | ரூ. 20.00 |
| 24. கசாப்-ஐ இரகசியமாகத் தூக்கிலிட்டது ஏன்? மு. குலாம் முஹம்மது பக்கம்:48 | ரூ. 30.00 |
| 25. முஹம்மத் (ஸல்) அவர்கள் ஓர் சகாப்தம், பக்கம் 30 | ரூ. 15.00 |
| 26. இஸ்லாமும் இதர பொருளாதார கொள்கைகளும், பக்கம் - 120 | ரூ. 50.00 |
| 27. இஸ்லாம் வழங்கும் தண்டனைகள் | ரூ. 40.00 |
| 28. இஸ்லாமும் விஞ்ஞானமும் | ரூ. 70.00 |
| 29. இஸ்லாம் அடிமைத்தனத்தை அங்கீகரித்ததா? | ரூ. 60.00 |
| 30. இஸ்லாமும் பெண்களும் | ரூ. 70.00 |
| 31. இஸ்லாம் இன்றைய கொள்கைகளை வெல்லுமா? | ரூ. 70.00 |
| 32. தேசப்பிரிவினைக்கு யார் காரணம்? | ரூ. 30.00 |
| 33. 26/11 -நீதித்துறையும் மயங்கியது ஏன்? | ரூ. 220.00 |
| 34. ஒரு தலித் போராளியின் வாழ்வும், அவர் காட்டிய வழியும் | ரூ. 20.00 |

**வேர்கள் பதிப்பகம்,** 52/1, மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை - 600 001.
தொடர்ப்புக்கு : 8148129887




– அ.மார்க்ஸ்

# ஜல்லிக்கட்டு போராட்டமும்

## ஜல்லிக்கட்டுப் போராட்டம் - இறுதி நாட்களில் நடைபெற்ற காவல்துறை அத்துமீறல்கள்: உண்மை அறியும் குழு அறிக்கை

ஜல்லிக்கட்டுத் தடையை நீக்கக் கோரி சென்னை மெரினா கடற்கரையிலும், தமிழகம் முழுமையிலும் இந்த மாதம் 17ம் தேதி முதல் இளைஞர்கள் பொதுவெளிகளில் கூடி இரவிலும் பகலிலும் அகலாமல் அமர்ந்து முற்றிலும் அமைதி வழியில் போராடினர். எந்த ஒரு குறிப்பான கட்சி அல்லது இயக்க வழிகாட்டலும் இன்றி தன்னெழுச்சியாகவும் முற்றிலும் அமைதியாகவும் நடைபெற்ற இந்தப் போராட்டம் பல வகைகளிலும் 2011- 12 களில் நியூயார்க்கில் நடைபெற்ற 'வால்ஸ்ட்ரீட் அமர்வு' போராட்டத்தை நினைவூட்டியது.

அனைத்துத் தரப்பினரின் ஆதரவுடன் நடைபெற்ற இப்போராட்டம் கொடுத்த அழுத் தத்தின் விளைவாக தமிழக அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க நேர்ந்தது. மத்திய அரசை வற்புறுத்தி அவசரச் சட்டம் ஒன்றை இயற்ற வைப்பதில் தோல்வியுற்ற தமிழக அரசு சென்ற ஜன 21 அன்று ஜல்லிக்கட்டுத் தடையை நீக்கும் வகையில் மிருக வதைத் தடைச் சட்டத்தில் உரிய திருத்தங்கள் செய்து அவசரச் சட்டம் ஒன்றை இயற்றியது. அடுத்த நாளே மதுரை அலங்காநல்லூரில் ஜல்லிகட்டுப் போராட்டம் நடத்தப்படும் எனவும் முதலமைச்சர் அதில் கலந்து கொள்வார் எனவும் அறிவிக்கப்பட்டது.

எனினும் தமிழகமெங்கும் இருந்த இந்த அமர்வுப் போராட்டத்தினர் நிரந்தரச் சட்டம் வேண்டும் எனவும், தமிழகத்தைப் பாதிக்கும் பிற பிரச்சினைகள் குறித்துக் கவனத்தை ஈர்த்தும் தம் இடங்களைவிட்டு அகல மறுத்தனர்.

அலங்காநல்லூர் மக்களும் கூட ஜல்லிக்கட்டு நடத்தவிட மாட்டோம் என்றனர். இந்நிலையில் சென்ற ஜன 23 அன்று சென்னை, சேலம், கோவை, வேலூர், புதுக்கோட்டை, அலங்காநல்லூர் முதலான இடங்களில் கூடியிருந்த மக்களைக் காவல் துறையினர் வன்முறையாக வெளியேற்றத் துவங்கினர். வெளியேற மறுத்தவர்கள் தாக்கப்பட்டனர்.

காவல்துறையினரே வாகனங்களைக் கொளுத்துகிற படங்கள் சமூக ஊடகங்களில் வெளியாகத் தொடங்கின. மெரினாவில் சாலை ஓரங்களில் நிறுத்தப்பட்டிருந்த போராட்டக்காரர்களின் வாகனங்களைப் போலீசாரே தாக்கி உடைத்தனர். சில இடங்களில் அவை எரியூட்டவும் பட்டன. காலைக் கடன்களை முடிப்பதற்காக அருகிலுள்ள நடுக்குப்பம் போன்ற பகுதிகளுக்குச் சென்ற போராட்டக்காரர்களுக்கு, குறிப்பாகப் பெண்களுக்கு அப்பகுதியில் வசித்த அடித்தள மக்கள் உதவினர். அப்படி வந்தவர்களைத் துரத்தி வந்து காவல்துறையினர் தாக்கியபோது நடுக்குப்பம், வி.ஆர்.பிள்ளைத் தெரு முதலான பகுதிகளில் இருந்த மீனவர் மற்றும் தலித் மக்கள் அவர்களுக்குப் பாதுகாப்பும் அளித்தனர்.

கோவை முதலான தமிழகத்தின் பல பகுதிகளில் கூடியிருந்த மக்கள் மீதான காவல்துறை தாக்குதல் கடுமையாக இருந்தது. நிரந்தரச் சட்டம் இயற்ற உள்ளதை ஏற்றுச் சில பகுதிகளில் மக்கள் கலையவும் செய்தனர்.

இதற்கிடையில் ஜன 23 அன்று தொடங்கிய சட்டமன்றக் கூட்டத்தில் மாலை 5 மணிக்குக் கூடிய சிறப்பு அமர்வு மிருகவதைச் சட்டத்தில் உரிய திருத்தங்களைச் செய்து ஜல்லிக்கட்டின் மீதான தடையை நீக்கி நிரந்தரச் சட்டத்தை அனைத்துக் கட்சிகளின் ஆதரவுடன் இயற்றியது. இன்னொரு பக்கம் வன்முறையாக அமர்வுப் போராளிகள் வெளியேற்றப்படுதலும் தொடர்ந்தது.

**ஐஸ்ஹவுஸ் மற்றும் அம்பேத்கர் பாலம் அருகில் உள்ள குடியிருப்புகளில் காவல்துறை நடத்திய தாக்குதல்**

சுமார் 12 மணி அளவில் யாரோ சில சமூக விரோதிகள் ஐஸ்ஹவுஸ் காவல் நிலையத்தைச் சுற்றி நிறுத்தப்பட்டிருந்த வாகனங்களுக்குத் தீ வைத்தனர். சற்று நேரத்தில் அந்தத் தீ பெரிய அளவில் மற்ற பகுதிகளுக்குப் பரவாமல் அணைக்கப்பட்டது. காவல் நிலையத்திற்குள் இருந்த பெண் போலீஸ் ஒருவரும் ஆபத்தின்றி காப்பாற்றப்பட்டார்.

பிற்பகலில், சுமார் மூன்று மணிக்குப் பிறகு ஐஸ் ஹவுசுக்கு அருகிலுள்ள மீனவர் மற்றும் தலித் குடியிருப்புப் பகுதிகளில் நுழைந்த காவல்துறையினர் மிகக் கொடூரமாக அம்மக்கள் மீது தாக்குதலைத் தொடங்கினர்.





ஒட்டி அமைந்துள்ள மீன் மார்கெட் முற்றிலும் எரித்துச்சாம்பலாக்கப் பட்டுள்ளது.

இலட்சக் கணக்கான மதிப் புள்ள மீன்கள், இறால்கள் கொளுத்தி நாசமாக்கப்பட்டுள் ளன. மோட்டார் சைக்கிள்கள், ஒரு ஸ்கார்பியோ உள்ளிட்ட சில கார் கள், ஆட்டோக்கள் தாக்கப்பட்டு நொறுக்கப்பட்டுள்ளதோடு இவற்றில் பல முற்றிலுமாய் எரிக் கவும் பட்டுள்ளன. ஏதோ ஒரு தூளைத் தூவி (பாஸ்பரஸ்?) எரியூட்டியதாக மக்கள் கூறினர்.

சிறுவர்கள் உள்ளிட்ட கையில் அகப்பட்ட ஆண்களை அடித்துப் போலீஸ் வாகனங்களில் ஏற்றிச் சென்று 'ரிமான்ட்' செய்தனர். இந்த அத்துமீறல்கள் எங்கள் கவனத்திற்கு வந்தபோது இது குறித்து ஆராய்ந்து அறிக்கை அளிக்க கீழ்க்கண்டவாறு குழு ஒன்று அமைக்கப்பட்டது.

**குழுவில் பங்கு பெற்றோர்:**

பேரா.அ.மார்க்ஸ் முனைவர் ப. சிவகுமார், பேரா. மு..திருமாவளவன், வீ.சீனிவாசன், நட்ராஜ், பெரியார் சித்தன், முனைவர் ஜெ. கங்காதரன், பேரா.கோ.கார்த்தி, அகமது ரிஸ்வான்.

**பார்வையிட்ட பகுதிகள்:**

1. நடுக்குப்பம் எனும் மீனவர் குடியிருப்பு மற்றும் அவ்வை சண்முகம் சாலையில் உள்ள மீன் மார்கெட் 2. அம்பேத்கர் பாலத்திற்கு அருகில் உள்ள ரூதர்புரம் எனும் தலித் குடியிருப்பு 3. அம்பேத்கர் பாலத்திற்கு அருகில் உள்ள மீனாம்பாள்புரம் எனும் தலித் குடியிருப்பு 4. வி.ஆர்.பிள்ளைத் தெரு மற்றும் கால்வாய்த் தெரு. 5. முனுசாமி நகர் 6. அனுமந்தபுரம் 7. ரோட்டரி நகர்

**நாங்கள் கண்டவை :**

**1. நடுக்குப்பம் :** பெண்கள் சிறுவர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளனர். வீடுகள் தாக்கிக் கண்ணாடிகள் உடைக்கப்பட்டுள்ளன. கதவுகள், தொலைக்காட்சிப் பெட்டிகள் நொறுக் கப்பட்டுள்ளன. இராணி மேரிக் கல்லூரியை

சிங்காரவேலர் பிறந்த இந்த நடுக்குப்பத்தில் இத்தகைய வன்முறைகளைக் கண்டதே இல்லை எனப் பலர் உணர்ச்சிவயப் பட்டுக் கூறினர். தமது வாழ்வாதாரமே அழிக்கப் பட்டு விட்டது எனப் பெண்கள் அழுதனர். போலீசார், குறிப்பாகப் பெண் போலீசார் தம்மை அடித்தும் கற்களை வீசியும் தாக்கியதோடு மிக மோசமான வார்த்தைகளில் இழிவாக ஏசியதாக வும் கூறினர்.

ஆண் போலீசார் தங்கள் முன் காற்சட்டை 'ஸிப்' களை அவிழ்த்து ஆபாசமாகப் பேசியதாக வும் குற்றம் சாட்டினர். மெரினாவிலிருந்து அடி பட்டு ஓடி வந்த இளைஞர்களுக்கும் பெண்களுக் கும் உதவியதைத் தவிர நாங்கள் என்ன பாவம் செய்தோம் எனக் குமுறினர்.

**2. ரூதர்புரம்:** அம்பேத்கர் பாலத்தை ஒட்டி இரண்டு வேன்களும் தெருவை ஒட்டி ஒரு ஆட்டோவும் எரிக்கப்பட்டிருந்தன. தெரு நுழைவில் நிறுத்தப்பட்டிருந்த 6 ஆட்டோக்கள், 8 பைக்குகள், 2 சைக்கிள்கள், 1 சோஃபா செட் எரிந்து கிடந்தன. ஏன் உங்கள் பிள்ளைகளை மெரீனா போராட்டத்துக்கு அனுப்பினீர்கள் எனக் கேட்டுப் பெண் போலீஸார் தம்மைத் திட்டியதாகப் பெண்கள் குமுறினர்.

அங்கிருந்த சுமார் 100 பேர் திரண்டு சென்று 'சிட்டி மால்' அருகில் நின்று. "எங்கள் மாணவர்களை அடிக்காதீர்கள்" என முழக்கம் எழுப்பியதாக ஞானம்மாள் என்பவர் கூறினார். அப்போது ஒரு வாகனத்தில் வந்து இறங்கிய

போலீசார் கற்களையும் பாட்டில்களையும் வீசித் தாக்கியதாகவும் வாகனங்களைத் தீவைத்துக் கொளுத்தியதாகவும் ஒருவர் கூறினார்.

**3. மீனாம்பாள்புரம் :** லேடி வெலிங்டன் பள்ளியில் +2 படிக்கும் தன் 18 வயது மகன் கிருபாகரனை பள்ளியிலிருந்து வந்துகொண்டிருந்தபோது அடித்து இழுத்துச் சென்றதை அழுது கொண்டே சொன்னார் சிவகாமி (33) க/பெ தினகரன். காவல் நிலையத்திலிருந்த அவனுக்கு இரவில் சோறூட்டச் சென்ற போது அவன் கைகள் வீங்கி இருந்தன என்றார் அவர். அவனை விட்டு விடுவதாகச் சொன்ன போலீசார் இறுதியில் ரிமான்ட் செய்து புழல் சிறையில் அடைத்துள்ளனர்.

ரமேஷ் மனைவி கீதா சொன்னது: "எங்க வீட்டுக்காரருக்கு 45 வயசு. தூய்மைப் பணி நிறுவனம் ஒன்றில் தெருக்கூட்டுபவராக வேலை செய்கிறார். வேலை முடிஞ்சு வரும்போது போலீசுங்க அவரை மிருகத் தனமா அடிச்சுப் போட்டு இருக்காங்க."

வேலு மனைவி பொற்கொடி (35): "என் மவனைத் தேடிப் போனேன். ஒரு பெண் போலீஸ் என்னை அடிச்சதுல என் கை முறிஞ்சு போச்சு" எனத் தன் வீங்கிய கையைக் காட்டினார்.

கணவரை இழந்து வாழும் தமிழரசி (40): "வீட்டுக்குள்ள நுழைஞ்ச போலீஸ் என் புடவையைக் கிழிச்சாங்க" எனச் சொல்லிக் கிழிந்த தன் புடவையைக் காட்டினார்.

குப்பன் மனைவி காந்தா (60): "வீட்டுக் கதவை உடைசிச்சுட்டாங்க. மோட்டார் சைகிளையும் நொறுக்கிட்டாங்க. பாத்ரூமுல இருந்தவங்களை எல்லாம் 'சீக்கிரம் வாங்கடீ.'"ன்னு சொல்லி கத்துனாங்க.."

**4.வி.ஆர்.பிள்ளை தெரு:** போலீஸ்காரர்கள் போராட்டக்காரர்களைத் துரத்திவந்தபோது தாங்கள் அதைப் பார்த்துக் கொண்டு நின்றதாகவும், பின் திடீரென வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த இவர்களையே போலீஸ் துரத்தித் தாக்கியதாகவும் பெண்கள் கூறி அழுதனர். பின் சுமார் 100 பேர் திரண்டு இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த போது போலீசார் அவர்களை அசிங்கமாகத் திட்டினர் என்றனர்.

மீன்வளத்துறையில் பணியாற்றும் பழனி (58), "நாங்க எல்லாரும் மிரட்டப்பட்டோம். பெண்களை ரொம்ப மோசமாப் பேசுனாங்க. ஊரே பயந்து கிடக்கு.." என்றார்.

**5. முனுசாமி நகர்:** ராஜீவ் என்பவரின் மனைவி தேவி (36): "என் வீட்டுக்காரர ஒரு பெயின்டர். வீட்டில இருந்தவரைப் போட்டு அடிச்சுட்டாங்க. கையில் புத்தகப் பையோடு வந்த மாணவர்களையேல்லாம் துரத்தி அடிச்சாங்க. சம்மந்தமில்லாத எல்லாரையும் அடிக்க ஆரம்பிச்சாங்க. எங்க தெரு பொம்பளை ஒருத்தரோட 5 பவுன் சங்கிலியையும் அறுத்துட்டுப் போயிட்டாங்க.." அடிபட்டிருந்த அவரது கணவரையும் பார்த்தோம்.

**6. அனுமந்தபுரம் -** கால்வாய்த் தெரு: ஆட்டோ டிரைவர் கார்திக் (45); "நான் நேத்து வேலைக்கிப் போகல. ஆட்டோ வாசல்ல நின்னுச்சு. உள்ளே நுழைஞ்ச போலீஸ் என்னைக் கடுமையா அடிச்சுட்டாங்க.." அவர் உடலெங்கும் காயம். கட்டுகள் இருந்தன. வெளியில் நின்றிருந்த அவரது ஆடோ தாக்கப்பட்டுக் கண்ணாடி உடைந்திருந்தது. "ரெண்டு பிள்ளைங்கள நான் காப்பாத்தியாவணும். எப்ப எனக்கு இந்தக் காயங்கள் ஆறும், எப்பிடி நான் இந்த ஆட்டோவை சரி பண்ணி ஓட்டப்போறேன்னு ஒண்ணும் தெரியல.." என்று அவர் அழுதார்.






கட்டுமானப் பணி செய்யும் தங்கவேலு (33) உடலெங்கும் காயங்கள். அவர் காலொன்று உடைந்து கட்டு போடப்பட்டிருந்தது. வீட்டில் அடித்ததோடு போலீஸ் வேனில் ஏற்றிச் சென்று லேடி வெலிங்டன் பள்ளியில் வைத்து மீண்டும் அடித்ததாக அவர் கூறினார். பின் இன்னொரு இடத்திற்குக் கொண்டு சென்று அங்கும் அடித்தனராம். பின் அவர்களில் சுமார் 10 பேர்களைக் கொண்டு சென்று ஒரு இடு காட்டில் தள்ளிச் சென்றுள்ளனர். அவர்களின் வீட்டார்கள் அவர்களைக் கண்டுபிடித்து மருத்துவமனைக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

**7.ரோட்டரி நகர்:** பெருங்கூட்டமாகத்திரண்டு வந்த பெண்கள் தாங்கள் எவ்வாறெல்லாம் அசிங்கமாகத் தூற்றப்பட்டோம் எனச் சொல்லி அழுதனர். அவர்களில் ஒருவரின் கை உடைந் திருந்தது.. பெண் போலீசாரே இப்படிச் செய்ததாக அவர்களும் கூறினர்.

இறுதியாக நாங்கள் மயிலாப்பூர் காவல் நிலையத் துணை ஆணையர் வி.பாலகிருஷ்ணன் I.P.S அவர்களைச் சந்தித்தோம்.

தான் மெரினாவில் கண்காணிப்புப் பணியில் இருந்ததாகவும் இங்கு நடந்தவை குறித்து அதிகம் தெரியாது எனவும் காவல்துறை அத்துமீறல்கள் பற்றி நிரூபணங்களுடன் சொன்னால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இனி யாரையும் கைது செய்யும் உத்தேசம் தமக்கு இல்லை எனவும் அவர் கூறினார்.

சில ஆண்டுகள் முன் இரட்டைக் கொலை ஒன்று இப்பகுதியில் நடந்ததாகவும் அதைப் புலனாய்ந்த ஒரு காவல்துறை அதிகாரியே தற்கொலை செய்து கொள்ள நேர்ந்ததாகவும் அதனால் இப்பகுதி மக்கள் காவல்துறைமீது கோபம் கொண்டவர்களாகவே உள்ளதால்தான் காவல் வாகனங்களையெல்லாம் இவர்கள் கொளுத்தினர் எனவும் அவர் கூறினார்.

**எமது பார்வைகளும் கேள்விகளும்**

1984-ல் எம்.ஜி.ஆர் முதல்வராக இருந்த போது இப்பகுதி மக்கள் மீது தொடுக்கப்பட்ட தாக்குதலுக்குப் பிறகு இதுதான் இம்மக்கள் சந்திக்கும் மிகப்பெரிய காவல்துறை அத்துமீறல். காவல்துறை மீது இப்பகுதி மக்களுக்கு ஒரு பகையும் கோபமும் இருந்ததாக துணை ஆணையர் கூறுகிறார். அது உண்மையோ பொய்யோ காவல்துறைக்கு இப்பகுதி அடித்தள மக்களின் மீது ஒரு பகையும் கோபமும் இருப்பது இன்று அரங்கேறியுள்ள கொடும் வன்முறைகளில் வெளிச்சமாகிறது.

போராட்டக்காரர்களுக்கு இம்மக்கள் ஆதரவு காட்டியதையும் அவர்களால் ஏற்க முடியவில்லை. மெரினாவிலிருந்து போலீஸ் காரர்களால் துரத்தப்பட்டு ஓடி வந்த ஒரு பெண் ஓடிக் கொண்டிருக்கும்போதே கருச்சிதைவுக்கு ஆளாகியதையும் அவரை ரோட்டரி நகர் பெண்கள் காப்பாற்றியதையும் அவர்களில் ஒருவர் கூறினார்.

மெரினாவில் அமைதியாக அமர்ந்து போராடிக் கொண்டிருந்த இளைஞர்களிடம்

முதலமைச்சரும் அவரது சக அமைச்சர்களும் நேரடியாக வந்து பேசி உறுதி அளித்திருந்தால் இந்தப் போராட்டம் அமைதியாக முடிந்திருக் கும். இறுதிவரை காவல்துறையினர்தான் அரசுத் தரப்பில் போராட்டக்காரர்களுடன் பேசினரே ஒழிய முதலமைச்சர் வந்து பேசாததே இத்தனை வன்முறைகளுக்கும் கொடுமைகளுக்கும் காரணம்.



நிரந்தரச் சட்டம் இயற்றிய பின்னும் அது குறித்த முழு விவரங்களையும் போராட்டக்காரர் களுக்கு அதிகாரபூர்வமாகத் தந்து விளக்கி இருக்க வேண்டும். ஏன் அதில் தயக்கம் காட்டப்பட்டது எனத் தெரியவில்லை.

தமிழகமெங்கும் 23 ந்தேதி மேற்கொள்ளப் பட்ட தாக்குதல் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டிய ஒன்று. இதே போன்று நடந்த வால்ஸ்ட்ரீட் அமர்வுப் போராட்டத்தின்போது அமெரிக்க அரசு இப்படி நடந்துகொள்ள வில்லை. பலமாதங்கள் தொடர்ந்து நடந்த போராட்டம் அது. சர்வாதிகாரிகளின் ஆட்சிக்கு எதிராக நடந்த அரபு வசந்தப் போராட்டங்கள் கூட இப்படி ஒடுக்கப்பட வில்லை. அடிப்படை ஜனநாயகப் பண்பு அற்ற அரசுகளாகவே நமது அரசுகள் உள்ளன என்பதற்கு இந்த அடக்கு முறை இன்னொரு சாட்சியாக உள்ளது.

ஜன 23 அன்று பள்ளி திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டுப் பின் அன்று நடந்த இந்த தாக்குதல்களின் ஊடாகப் போக்குவரத்தை நிறுத்திப் பள்ளிப் பிள்ளைகளுக்கும் பெற்றோர் களுக்கும் உருவாக்கப்பட்ட சிரமங்கள் இந்த அரசின் பொறுப்பின்மையையும் திறமை இன்மையையுமே காட்டுகின்றன.

**பரிந்துரைகள்**

மெரீனாவை ஒட்டியுள்ள தலித் மற்றும் மீனவர் குடியிருப்புகளில் மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்கு தலை விசாரிக்க நீதிபதி ஒருவர் தலைமையில் ஆணையம் ஒன்று அமைக்க வேண்டும்.

மீன்வளத்துறையின் மூலம் உடனடியாக தீப்பிடிக்காத கூரை யுடன் கூடிய மீன் மார்கெட் ஒன்றை நடுக்குப்பத்தில் அரசு கட்டித் தர வேண்டும்.

3. நடுக்குப்பத்தைச் சேர்ந்த மீன் வணிகம் செய்து கொண்டிருந் தவர்களுக்கு உடனடியாக இடைக் கால நிவாரணமாக ஒவ்வொருவருக் கும் உடனடியாக ரூ 25,000 அளிக்க வேண்டும்.

தலித் மற்றும் மீனவர்களின் வீடுகள், வீட்டுப் பொருட்கள் மற்றும் வாகனச் சேதங்களை ஒரு மாதத்திற்குள் உடனடியாக மதிப்பிட்டு உரிய இழப்பீடுகளை அரசு வழங்க வேண்டும்.

கைது செய்யப்பட்டுள்ள அனைவரையும் எந்த நிபந்தனையும் இன்றி உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்.

இந்த அத்துமீறல்கள் குறித்த விசாரணை முடியும்வரை உயரதிகாரிகள் உட்பட இதற்குப் பொறுப்பானவர்களைக் கட்டாயக் காத்திருப் பில் வைக்க வேண்டும். வன்முறையிலும் தீ வைப் பிலும் ஈடுபட்ட காவல்துறையினர் உடனடியாக சஸ்பென்ட் செய்யப்படவேண்டும்.

பெண் போலீசார் இப்படிப் பெண்கள் மீதே வன்முறையாக நடந்து கொண்டது குறித்துக் காவல்துறையும் அரசும் கவனம் கொள்ள வேண்டும். அவர்களுக்கு உரிய உணர்வூட்டும் பயிற்சிகள் அளிக்க வேண்டும். **– அ.மார்க்ஸ்**

# காற்றில் விடப்பட்ட ஊடக தர்மம்

**டாக்டர் வசந்தி தேவி**
உண்மை அறியும் பெண்கள் குழு

ஆறு நாட்களாக அமைதியாக நடந்து வந்த ஜல்லிக்கட்டு போராட்டத்தை ரத்தக்கோலமாக மாற்றியது காவல்துறை. எந்த ஒரு அசம்பாவிதமும் நடந்திடாமலே மக்களின் மீது கண்மூடித்தனமாக தாக்குதலை தொடுத்ததனர். பெண்களை கொடூரமாக தாக்கி மானபங்கப்படுத்தினர் முதியவர் குழந்தைகள் என்றும் பாராமல் எல்லோரின் மீதும் தடியடி, லத்தியை கொண்டு மாணவர்களின் மண்டையை உடைத்தனர் இப்படி எல்லா விதமான அடாவடித்தனங்களையும் அட்டூழியங்களையும் ஆரம்பித்தது யார் ?

போலீஸ்காரர்களா? போராட்டக்காரர்களா? பின்னர் இந்த எல்லா அநியாயங்களையும் நியாயப்படுத்திடுவதற்கு வாகனங்களை உடைத்தது வாகனங்களுக்கு தீ வைத்தது யார் என்பதற்கு வலைத்தளங்களில் உலா வரும் வீடியோ சாட்சி.

சமூக விரோதிகள் ஊடுருவி விட்டார்கள் போராட்டம் திசை மாறிவிட்டது என்று போராட்டத்தை ஆதரித்தவர்கள், அரசியல் வாதிகள், காவல்துறையினர் கொடுத்த பேட்டி எதை அடிப்படையாக கொண்டது?

காவல்துறை வாகனங்களுக்கு தீ வைத்தது என்பதை ஊர்ஜிதம் செய்யும் வீடியோவை பற்றி ஊடகங்கள் வாய் திறக்காமல் இருப்பது ஏன்? எங்கே சென்றது உங்கள் ஊடக தர்மம் ? ஆறு நாட்களாக இந்த போராட்டத்தை முழுமூச்சாக நின்று உலகறியச்செய்தது ஊடகங்கள் தான் என்பதை நாங்கள் மறக்கவில்லை, மறுக்கவில்லை.

ஆனால் இப்போது உண்மை என்னவென்று தெரிந்த பின்பும் ஏன் ஊசலாட்டம் இப்போதாவது சொல்லுங்கள் சமூக விரோதிகள் யார் போராட்டக்காரர்களா? போலீஸ்காரர்களா? நம்முடைய இந்த கேள்விக்கும் கூட போராட்டக்காரர்களே என்று தலைப்பிட்டு பிறகு ஒரு ஓரத்தில் எழுத்து பிழை ஏற்பட்டுவிட்டது என்று ஏளனமாய் கூறும் தரங்கெட்ட ஊடகங்களும் உண்டு நாம் அவர்களை கருத்தில் கொள்ளவில்லை.

நாம் கருத்தில்கொள்வது கவலைப்படுவதெல்லாம் ஆரம்பம் முதலே இந்தப்போராட்டத்தை உலகறியச்செய்த நடுநிலையான செய்தி சேனல்கள் இப்போது அடாவடித்தனங்களின் வழி அசாதாரணமான சூழ்நிலையை ஏற்படுத்தியவர்கள் யார் என்று தெரிந்தும் அடையாளம் காட்டிட மறுப்பதை பற்றித்தான். போராட்டத்தின் நடுவில் ஊடுருவிவிட்ட சமூக விரோதிகள் தேவையற்ற கோஷங்களையும் கோரிக்கை







களையும் முன்வைத்தனர் ஒரு படி மேலே போய் அவர்கள் தேச துரோகிகள் என்று கூறியவர்களின் வார்த்தைகளை தலைப்பு செய்தியாக்கிய ஊடகங்களே ? அப்படி அந்த தேச துரோகிகள், சமூக விரோதிகள் எழுப்பிய கோரிக்கைகள் கோஷங்கள் தான் என்ன ?

1) தினசரி வறட்சியால், வாங்கிய வட்டி கடனை திருப்பி செலுத்திட இயலாமலும் தற்கொலை செய்து கொள்ளும் விவசாயிகளுக் காக குரல் கொடுத்தால் அது தேச துரோகமா?

2) அநியாயமாக இலங்கை அரசால் சிறைப்பிடிக்கப்படும் இழப்புகளுக்கு உள்ளா கும் மீனவர்களுக்கு குரல் கொடுத்தால் அதற் காக கோரிக்கை வைத்தால் அது தேசதுரோகமா?

3. ரூ.500 மற்றும் ரூ.1000 செல்லாது என்று அறிவிப்பு செய்து அடிதட்டு மக்களின் அடிவயிற்றில் அடித்ததற்கு எதிராக கோஷங் களை எழுப்பினால் அது தேச துரோகமா?

இப்படி மக்களின் பிரச்சனைகளை பேசினால் அதற்காக போராடினால் தேச துரோகம் என்று முத்திரை குத்துவது ஆங்கிலேயர்களின் ஆட்சிமுதலே இருந்து வரும் வழக்கம்.

ஆனால் சுதந்திரம் அடைந்ததாக சொல் லப்படும் இந்த நாட்டில் சுதந்திரமாக உலா வரும் ஊடகங்கள் ஊசலாட்டத்திற்கு இடம் கொடுக்காமல் உண்மையை உலகறிய செய்வதில் உறுதியாக இருந்திட வேண்டுமல்லவா!

காவல்துறை அதிகாரி ஒருவர் வாகனங்களுக்கு தீ வைத்தார் என்று உளவுத்துறை சொன்னதை என்னால் நம்பமுடியவில்லை என்னை அதிர்ச் சிக்குள்ளாக்கியது என்று காவல்துறை ஆணையர் ஜியார்ஜ் சொல்வது காவல்துறை தீ வைத்த சம்பவத்தையா? அல்லது அந்த சம்பவம் சாமர்த்தியமாக வீடியோ எடுக்க பட்டிருப்பதை பற்றியா? என்பது மில்லியன் டாலர் கேள்வி. எப்படியேனும் அதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என்று கூறிவிட்டு 26 நபர்களை கைது செய்துள்ளனர்.

தீ வைத்த காவல் துறை அதிகாரி மீதும் அதற்கு உடந்தையாக இருந்த காவல்துறை அதிகாரிகள் மீதும் எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

பெண்களை கொடூரமாக தாக்கிய போலீஸ் அதிகாரிகள் மீது வாகனங்களை தாங்களாகவே உடைத்து விட்டு மாணவர்களின் மீது பழியை போட துடியாய் துடிக்கும் காவல் துறை அதி காரிகள் மீது எப்போது நடவடிக்கை எடுக்கப் படும் ?

நீதிமன்ற ஆணையை அவமதிக்கும் விதமாக அறப்போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது எந்த அடிப்படையுமின்றி தாக்குதலை ஆரம்பித்து மக்களை ஆத்திரமூட்டிய காவல்துறையின் மீது எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

## யார் சமூக விரோதிகள்..? போராட்டக்காரர்களா..? போலீஸ்காரர்களா..?

**என்ற இந்த கேள்விகளை கேட்க கடமைப்பட்ட ஊடகங்கள் வாய் மூடி மௌன மாக இருப்பது வெட்க கேடு!**



# காவல்துறை அதிகாரிகள் என்ன கைதுகளுக்கும் சட்டங்களுக்கும் அப்பாற்பட்டவர்களா?

தமிழகமெங்கும் கிட்டத்தட்ட 6 நாட்களாக அமைதியாக நடந்த போராட்டத்தை கலவரமாக மாற்றியது காவல்துறை தான் என்பதை யாரும் மறுத்திட முடியாத அளவிற்கு ஆதாரங்கள் வெளியிடப்பட்டுள்ளது.

23.1.2017 அன்று அதிகாலை முதலே தன்னுடைய அடாவடித்தனங்களை ஆரம்பித்த காவல்துறை அதிகாரிகள் வீடு புகுந்து பெண்களை கேவலமாக திட்டியும் கொடூரமாக தாக்கியம் உள்ளனர். போராட்டக்களத்தில் நின்ற பெண்களின் ஆடைகளை கிழித்து அவமானப் படுத்தி கண்மூடித் தனமாக அடித்தும் உள்ளனர். லத்தியால் மக்களை அடித்து விரட்டுகின்ற போது நான்கு மாத கர்ப்பிணிப்பெண் தடுமாறி கீழே விழுந்து கருக்கலைந்துள்ளது.

காவல்துறை அதிகாரிகளும் சில இடங்களில் கலவரக்காரர்களாக மாறியுள்ளார் என்பதை மறுக்கவில்லை என்று பசப்பு மொழி பேசுகின்றனர் பலர் காவல்துறை அதிகாரிகளே கலவரத்திற்கான முழுக்காரணம் கலவரத்தை ஆரம்பித்து நடத்தி முடித்து வைத்தது காவல்துறை அதிகாரிகளே என்பதை ஏனோ ஊடகங்களும் கட்சிகளும் சொல்ல மறுக்கின்றார்கள்.



சமூக விரோதிகள் ஊடுருவிட்டார்கள் என்ற இவர்களின் கூற்றிற்கு எந்த ஆதாரத்தையும் எடுத்து காட்டிட முடியவில்லை. நாங்கள் இதை கண்டிக்கின்றோம் இந்த சம்பவத்தை விசாரிப்பதற்காக நீதிபதி தலைமையில் ஒரு



சட்ட ஒழுங்கை சீர்குலைத்ததற்காகாகவும் வேடிக்கை பார்த்துக் கொண்டு உடந்தையாக இருந்தவர்களின் மீதும் உயர்நீதிமன்றம் அறப் போராட்டம் செய்பவர்களை பாதுகாக்க வேண்டுமென்று ஆணை பிறப்பித்த பின்பும் அதை அவமதிக்கும் விதமாக நடந்து கொண்டதற்கும் நீதிமன்ற அவமதிப்பு சட்டம் 1972 ன் கீழ் மற்றும் இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 147 ,148 ,307 ,354 மற்றும் TNPPDL ACT-ன் கீழ் வழக்கு பதிவு செய்து அவர்களை உடனடியாக கைது செய்து சிறையில் அடைத்திட வேண்டும்.



குழு அமைத்திட வேண்டும் என்று கூக்குரலிடுகின்றனர் சிலர்.

சம்பவம் நடந்த அன்று மக்களில் கிட்டத்தட்ட 27 நபர்களை கைது செய்துள்ளார்கள் அதில் +2 மாணவன் ஒருவன். இப்போது ஒட்டுமொத்தமாக 50 நபர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதை பேரா.மார்க்ஸ் அவர்களின் உண்மை கண்டறியும் குழு குறிப்பிடுகின்றது.

கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிராக எந்த ஆதாரமும் இல்லை ஜோடிப்புகளை இனி ஆரம்பித்து விடும் காவல்துறை.இப்படி எந்த ஆதாரமுமின்றி கைது செய்யப்பட்டவர்களுக்கு கண்டன அறிக்கைகள் எந்த பலனும் தராது. காவல் துறை அதிகாரிகள் வீடுகளுக்கும் வாகனங்களுக்கும் கடைகளுக்கும் தீ வைத்து, உடைத்ததற்கான தெளிவான ஆதாரங்களும் மாணவர்கள் பெண்கள் முதியவர்கள் என்றும் பாராமல் கண்மூடித்தனமாக தாக்கி மண்டையை உடைத்ததற்கான தெளிவான ஆதாரங்களும் கிடைக்கப்பெறுகின்றன. சட்ட ஒழுங்கை பாதுகாக்க வேண்டிய காவல்துறை அதிகாரிகளே

இதை செய்ய வேண்டிய பொறுப்பு காவல் துறையின் உயர் மட்டத்திற்கு இருந்தாலும் காலம் காலமாக தவறு செய்திருந்தாலும் தன் துறையை சார்ந்தவர்களை காப்பாற்றியே வந்திருக்கின்றது காவல்துறை எனவே தமிழக அரசு இதில் உடனடியாக தலையிட்டு கலவரத்திற்கு காரணமான காவல்துறை அதிகாரிகளை கைது செய்ய உத்தரவு பிறப்பித்திட வேண்டும் இல்லையேல் ஆளுகின்ற அரசே அத்தனைக்கும் காரணம் என்னும் கூற்று உண்மையாகிவிடும்.

– இம்தியாஸ்

# அரசு நடத்திய வன்முறை



ஜனவரி 4ம் தேதி முதல் ஜல்லிக்கட்டு போராட்டம் துவங்கியது. ஆனால் இதற்கு பெரிய ஆதரவு இல்லை. பின்னர் ஜனவரி 8ம் தேதி சென்னை மெரினா கடற்கரையில் சமூக வலைதளங்கள் வழியாக ஜல்லிக்கட்டிற்காக மக்கள் ஒன்று கூடினர். இதில் 10000க்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர்.

அப்போதே இந்த போராட்டம் சூடு பிடித்து விட்டது. இதன் பின்னர் கண்டிப்பாக ஜல்லிக்கட்டு நடத்த மத்திய அரசு அனுமதி அளிக்கும் உச்ச நீதிமன்றத்தில் சாதகமான தீர்ப்பு கிடைக்கும் என்று எண்ணிய போராட் டக்குழுவினருக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

**பொன்.ராதாகிருஷ்ணனின் வருடந் தவறாத பொய்**

கடந்த இரண்டு வருடங்களாக ஜல்லிக் கட்டு நடத்தப்படும் என்று தமிழக மக்களுக்கு பொய்யான வாக்குறுதிகளை ஜல்லிக்கட்டுக்கு முன் வாரிவாரி வழங்கி வந்த பொன். இராதாகிருஷ்ணன் அதன் பின்னர் அவ்வாறு நடத்த அனுமதிக்காத போது அதற்கு உச்சநீதி மன்றத்தின் தீர்ப்பை காரணம் காட்டி வந்தார்.

இந்த வருடமும் அதே பசப்பு வார்த்தைகள் தமிழக மக்களிடம் கூறி ஏமாற்றி விட்டு பின்னர் ஏதாவது காரணம் காட்டி தப்பித்து கொள்ளலாம் என்று எண்ணிய பொன்னாரின் எண்ணம் தவிடு பொடியாகி போனது. இம்முறை போராட்டக்காரர்கள் எந்த காரணம் கொண்டு விட்டு கொடுத்துவிடக்கூடாது என்ற எண்ணத்துடனேயே களம் இறங்கினர். அதன் விளைவே 08.01.2017 அன்று மெரினாவில் கூடிய கூட்டம். ஆனாலும் மத்திய அரசு அசட்டையாகவே இருந்து விட்டது.

இதற்கிடையே ஜல்லிக்கட்டு தடையை மீறி நடத்தப்படும் என போராட்டக்காரர்கள் அறிவித்தனர். இதன் காரணமாக போராட்டக் காரர்களை தடுக்கும் முயற்சியில் காவல் துறை யினர் ஈடுபட ஆரம்பித்தனர். பல இடங்களில் ஜல்லிக்கட்டு நடந்த மற்றும் நடக்க இருந்த இடங்களில் இருந்தவர்களை காவல்துறையினர்

அடித்து விரட்டி கைது செய்தனர். அதையும் தாண்டி ஒரு சில இடங்களில் ஒரு சில காளைகளைக் கொண்டு ஜல்லிக்கட்டு நடந்தது.




ஜல்லிக்கட்டுக்கு பெயர் பெற்ற அலங்காநல்லூரிலும் ஜல்லிக்கட்டு தடையை மீறி நடத்த முயற்சிகள் மேற்கொள் ளப்பட்டன. அது முடியாமல் போனது. அதற்காக 16.01.2017 அன்று போராட்டக்குழுவினர் அலங்கால்லூரில் வாடி வாச லில் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இப்போராட்டத்தில் அலங்காநல்லூர் அல்லாத மக்கள் பலர் குறிப்பாக இளைஞர் கள், இளைஞிகள் பலர் பங்கேற்றனர். காவல் துறையினர் அவர்களை கடுமையாக தடியடி நடத்தி அவர்களை முற்றுகையிட்டு அவர்களை சிறைபடுத்தியது.

அவர்களுக்கு உணவும் தண்ணீரும் மற்றும் கழிப்பிட வசதிகளையும் கிடைக்கவிடாமல் காவல் துறையினர் தடுத்தனர். அப்பகுதி மக்கள் அந்த போராட்ட குழுவினர் தமக்காக வந்து போராடும் போது தண்ணீரும் உணவும் கிடைக் காமல் தத்தளிப்பதை கண்டு பல வகைகளில் அவர்கள் உணவையும் தண்ணீரையும் தரமுயன் றனர். ஆனால் அவர்களை காவல்துறையினர் தடியடி நடத்தி விரட்டியடித்தனர். (இதே தான் மெரினா கடற்கரையிலும் நடந்தது.

போராட்டக்காரர்களுக்கு தண்ணீரையும் உணவையும் தந்தவர்களே குறிவைத்து தாக்கப் பட்டனர். குறிப்பாக மீனவர்கள் தாக்கப்பட் டனர்.) இதன் பின்னர் போராட்டக்காரர்களை கைது செய்து தனித்தனியாக அடித்து உதைத்து கைது செய்தனர் காவல்துறையினர். இதற்கு பின்னர் போராட்டம் சூடு பிடிக்க ஆரம்பித்து விட்டது. அதனை யாராலும் தடுக்க இயல வில்லை.

அலங்காநல்லூரில் போராட்டம் நடத்திய இளைஞர்கள் மாணவர்கள் போன்றோர் தாக் கப்பட்ட முற்றுகைப்படுத்தப்பட்ட விவரங்கள் மீண்டும் சமூக வலைதளங்கள் வழியாக பரவத்தொடங்கின. இது பலரை பெரிய அளவில் பாதித்தது. எனவே மீண்டும் சமூகவலைதளங்கள் வழியாக மெரினாவில் கூடுவதற்கு அழைப்பு விடுக்கப்பட்டது. இந்த அழைப்பை ஏற்று பல இளைஞர்கள் மாணவர்கள் மற்றும் பொது மக்கள் இங்கு குவியத்தொடங்கினர்.

ஆரம்பத்தில் 10000த்தும் அதிகமான மக்கள் இங்கே குழுமினர். பெரிய முன்னேற்பாடு ஏது மின்றி கூடிவிட்ட மக்களுக்கு ஆதரவாக இந்த பகுதியை சேர்ந்த குறிப்பாக ஐஸ்ஹவுஸ் பகுதியை சேர்ந்த முஸ்லிம்கள் உணவு, பிஸ்கட், தண்ணீர் போன்றவற்றை வழங்கினர். அதைத்தவிர்த்து ஐஸ்ஹவுஸ் பகுதியை சேர்ந்தவர்களும் மீனவ மக்களும் போராட்டத்தில் பங்கேற்க ஆரம்பித்தனர்.

இரவுடன் இந்த போராட்டம் முடிந்து விடும் என்று தப்புக்கணக்கு போட்ட காவல்துறை மற்றும் மத்திய உளவுத்துறையின் கணக்குகள் இதன் காரணமாக தோற்றுப்போனது. போராட் டம் இரவோடு முடியவில்லை. அங்கு கூடி இருந்த மக்கள் இரவில் கலையவில்லை. பனியிலும் அங்கேயே தங்கினர்.

இதற்கிடையேசிலர்கழிப்பிட வசதிகளை தற்காலிகமாக அமைத்து தந்தனர். அதைத் தாண்டி போராட்டக்காரர்கள் அங்குள்ள மீனவ பகுதிகளுக்கு சென்று அவர்களின் கழிப்பறை களை பயன்படுத்தினர். இதன் காரணமாக இரவோடு இரவாக கலைந்திருக்க வேண்டிய போராட்டக்குழு கலையாமல் அங்கேயே தங்கியது. இதனால் இந்த போராட்டம்



வீரியம் பெற்றது. உச்சத்திற்கு சென்றது. ஆக இந்த போராட்டத்தை உச்சத்திற்கு கொண்டு சென்றவர்கள் போராட்டக்காரர்களுக்கு உண வளித்தவர்கள் மற்றும் கழிப்பிட வசதிகளை தந்தவர்கள். இதன் காரணமாகவே முஸ்லிம் களையும் மீனவர்களையும் அரசு குறிவைத்து தாக்குகிறது என்றால் மிகையல்ல.

தமிழக அரசுக்கும் மத்திய அரசுக்கும் இந்த போராட்டம் ஒரு புதிய பரிமாணமாக மாறிப்போனது. காலையில் கூடி கோஷம் போட்டு விட்டு மாலையில் கலைவதே இது வரை தமிழகம் கண்ட போராட்டங்களாக இருந் திருக்கிறது.

ஆனால் இது முதன் முறையாக இரவைத் தாண்டி அடுத்து நாளுக்கு வந்துவிட்டது. இதன் காரணமாக முதன்முதலில் அலங்காநல்லூரில் தடியடி நடத்திய காவல்துறையினர் மீது அரசின் கோபம் திரும்பியது. ஏனெனில் அவர்கள் தடியடி நடத்தி போராட்டக்காரார்களின் மீது அடக்குமுறைகளை ஏவிவிட்டதே மெரினாவில் மக்கள் கூடியதன் காரணம். எனவே, காவல் துறையினர் மீது அரசின் கோபம் திரும்பியது. அதனை வெளிக்காட்டிக் கொள்ளாமல் இப் போராட்டத்தை எப்படி வலுவிழக்க செய்வது என்ற ஆலோசனையில் அரசு இறங்கியது. ஆனால் அதற்கு வழியேதும் கிடைக்கவில்லை. காரணம். யாரிடம் பேச்சுவார்தை நடத்துவது என்பதே அவர்களுக்கு தெரியவில்லை. தலைமை ஏதுமின்றி நடந்த போராட்டம்.

கொஞ்சம் கொஞ்சமாக காவல்துறையிருக்கு போராட்டக்குழுவினரின் மீதும் போராட் டக்காரர்களுக்கு அடைக்கலம் கொடுத்து வந்தவர்களின் மீதும் திரும்பிக்கொண்டிருந்தது. இதையெல்லாம் தாண்டி போராட்டம் அன்றும் இரவைத் தாண்டி தொடர்ந்தது.

போராட்டம் தலைமையின்றி நடந்தாலும் (நடந்ததாலும்) அதில் மாணவர்கள், படித்தவர் கள் என பலர் கலந்து கொண்டதாலும் மிக ஒழுக்கமாக நடந்தது. போக்குவரத்திற்கு எந்த தொந்தரவும் இன்றி போராட்டக்காரர்களே போக்குவரத்தை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந் தனர். குப்பைகளையும் அவர்கள் அகற்றி சுத்தப்படுத்திக்கொண்டிருந்தனர். இந்த ஒழுக் கம் தமிழகத்தையே உலுக்கியது. ஒழுக்கத்துடன் கட்டுப்பாட்டுடன்நடக்கும்போராட்டம்மத்திய அரசுக்கு தலைவலியை தரும் போராட்டம். ஒழுக்கமின்றி நடைபெறும் போராட்டத்தை எளிதில் கலைத்துவிட முடியும் தடுத்துவிட முடியும். ஆனால் ஒழுக்கத்துடன் கட்டுப்பாட் டுடன் நடக்கும் போராட்டத்தை அவ்வளவு சுலபமாக கலைத்துவிட முடியாது, தடுத்துவிட முடியாது. இது அவர்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தியது. மத்திய உளவுத்துறை கொஞ்சம் கொஞ்சமாக தமிழகத்திடம் தமிழக மக்களிடம் தோற்றுக்கொண்டிருந்தது.

இந்த ஒழுக்கமும் கட்டுப்பாடும் யாருக்கும் எந்த தொந்தரவும் தராமல் நடந்த போராட் டம் வெகுஜன மக்களை வெகுவாக கவர்ந்து விட்டது. இப்போது சாதாரண மக்களும் இந்த போராட்டத்தில் திரள் திரளாக வந்து கலந்து கொள்ள ஆரம்பித்து விட்டனர்.

மெரினா கடற்கரை எங்கும் தலையா கடல் அலையா என்று எண்ணும் அளவிற்கு லட்சக்

கணக்கில் மக்கள் வந்து கலந்து கொள்ள ஆரம் பித்து விட்டனர். போராட்டம் ஒரு கட்டத்தில் திருவிழாவாக மாறிப்போனது. இந்த எழுச்சி மத்திய அரசை ஆட்டம் காணச் செய்துவிட்டது.

இந்த போராட்டத்தில் கலந்து கொள்ளா தவன் ஒருவனும் தமிழகத்தில் இல்லை என்று சொல்லும் அளவிற்கு மெரினா கடற்கரைக்கு கூட்டம் வந்து செல்ல ஆரம்பித்தது. ஒரு பெருங்கூட்டம் மெரினா கடற்கரைக்கு வந்து விட்டு செல்லும் போது மற்றொரு கூட்டம் அங்கே வரும். இது தொடர்ந்து கொண்டே இருந்தது.

இப்போது இந்த போராட்டம் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களுக்கும் பரவத் தொடங்கி விட்டது. 17ம்தேதி முதலே மாநிலத் தின் பல பகுதிகளில் இதே போன்று போராட் டங்கள் வெடிக்கத்தொடங்கி விட்டன. அங்கே யும் இதே கட்டுப்பாடு இதே ஒழுக்கம். குறிப் பாக மதுரை, கோவை, திருப்பூர், நெல்லை என தமிழகத்தின் பல பகுதிகளில் போராட்டக் காரர்கள் கூடத்தொடங்கினர்.

19ம் தேதி முதல்வர் பன்னீர் செல்வம் அவர்கள் பிரதமர் மோடியை சந்தித்தார். மோடி வழக்கம் போல் தன்னால் ஒன்றும் செய்ய இயலாது என கைவிரித்தார்.

மத்திய அரசு உச்சநீதிமன்றத்தை ஜல்லிக் கட்டு சம்பந்தமான தீர்ப்பை ஒரு வாரம் கழித்து வெளியிடுமாறு கேட்டுக்கொண்டது. இதில் பல் வேறு சந்தேகங்கள் பொதுமக்களுக்கு எழுந்தன.

**கூட்டத்தில் சமூகவிரோதிகள்**

இப்போராட்டத்தில் மாணவர்கள் கலந்து கொண்ட பின்னர் தான் போராட்டம் வலுப் பெற்றது. வீறு கொண்டது. மெரினா களை கட்டியது என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. ஆனால் இந்த போராட்டம் மாணவர்கள் மட்டுமே நடத்திய போராட்டம் அதில் மற்றவர் கள் கலந்து கொண்டது தவறு அவர்கள் அனை வரும் தேச விரோதிகள், சமூக விரோதிகள் என்ற ரீதியில் உளவுத்துறையும் ஊடகங்களும் தற்போது செய்திகளை வெளியிட்டு வருகின்றன. இது எந்த அளவிற்கு தவறு என்பதை முதல் நாள் நிகழ்வில் இருந்து நாம் குறிப்பிட்ட செய்திகளை படிப்பவர்கள் புரிந்து கொள்ள முடியும்.





இந்த போராட்டத்திற்கு முதல் நாள் முதற் கொண்டே ஜாதி மத வேறுபாடின்றி அனைத்து மக்களும் உறுதுணையாக நின்றனர். அவர்கள் தங்களை தமிழர்கள் என்றே பார்த்தனர். மீனவர் களும் முஸ்லிம்களும் இந்த போராட்டத்திற்கு மறைத்து திருட்டுத்தனமாக உதவி செய்ய வில்லை. அவ்வாறு செய்ய வேண்டிய அவசிய மும் அவர்களுக்கு கிடையாது. ஏனென்றால் அவர்கள் தமிழகர்கள். இந்த போராட்டத்தில் பங்கேற்க வேண்டிய உரிமையும் தார்மீக கடமையும் அவர்களுக்கு உண்டு. இதனை அவர்கள் உணர்ந்திருந்தார்கள். அதனை அவர் கள் செவ்வனே நிறைவேற்றியும் வந்தார்கள்.

இதைத்தவிர்த்து வெகுஜனமக்கள் பலர் இந்த போராட்டத்தின் கட்டுப்பாடும் ஒழுக்கமும் வெகுஜனமக்களை வெகுவாக கவர்ந்தது. அதனால் பலர் தங்கள் குடும்பத்துடன் இந்த போராட்டத்தில் கலந்து கொள்ள ஆரம்பித்தனர். இது தமிழர்களுக்கான உரிமைப்போராட்டம் என்பதை உணர்ந்ததால் இப்போராட்டத்தில் கலந்து கொள்ள வேண்டியதன் அவசர அவசியத்தை அவர்கள் உணர்ந்திருந்தனர்.

**மத்திய அரசுக்கு எதிரான கோஷம்..**

இயல்பாகவே இந்த போராட்டம் மத்திய அரசுக்கு எதிரான போராட்டமாகவே உருவா னது. நாம் முன்னரே குறிப்பிட்டுள்ளது போல ஜல்லிக்கட்டுக்கான தடையை கோரியது மத்திய விலங்குகள் நல வாரியமும் பீடா என்ற அமைப்பும். பீடா அமைப்பின் தலைவி ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் உறுப்பினர். அதன் ஆதரவாளர். பி.ஜே.பி கட்சி ஆர்.எஸ்.எஸ்.-இன் அரசியல் கிளை. மேலும்ஜல்லிக்கட்டுக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் வாதிட்டது சுப்ரமணியசாமி என்ற மத்திய அமைச்சர்.

கடந்த 3 வருடங்களாகவே மத்திய அரசு தமிழர்களை ஏமாற்றி வந்தது. குறிப்பாக மத்திய அமைச்சர் பொன்.இராதாகிருஷ்ணன் அவர்கள் இந்த வருடம் ஜல்லிக்கட்டு நடத்த மத்திய அரசு நடவடிக்கை எடுக்கும், அடுத்த வருடம் ஜல்லிக்கட்டு நடத்த நடவடிக்கை எடுக்கும் என ஒவ்வொரு வருடமும் பொய்களை சொல்லி காலத்தை கடத்தி வந்தார். இது தமிழர்களை கோபத்தின் உச்சிக்கு கொண்டு சென்றது.

இந்த வருடமும் பொங்கலுக்கு முன்னர் அதே கதைகளை சொன்னார் பொன்னார் அவர் கள். ஆனால் இந்த வருடம் அந்த கதைகளை நம்ப மக்கள் தயாராக இல்லை. இருந்தாலும் அமைதியான போராட்டங்களின் வழி தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தி வந்தனர் தமிழர் கள். ஆனால் வழக்கம் போல் கடைசி நேரத்தில் உச்சநீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருப்ப தால் தங்களால் ஒன்றும் செய்ய இயலாது என்று கைவிரித்தனர் மத்திய அரசும் பொன்னார் அவர்களும்.

இவ்வளவு சூடான சூழ்நிலையிலும் இதைத் தாண்டி மற்றொரு துரோகத்தை தமிழகத்திற்கு

செய்ய முன்வந்தது மத்திய அரசு. பொங்கல் விடுமுறையை மத்திய அரசு ஊழியர்களுக்கு ரத்து செய்தது மத்திய அரசு. இது மிகப்பெரிய கொதிப்பை தமிழர்களிடம் ஏற்படுத்தியது. ஏற்கனவே போராட்டத்தில் ஈடுபட்ட தமிழர்களை பொறுக்கிகள் என்று கொச்சைப்படுத்தி இருந்த சுப்பிரமணியசாமி தற்போது பொங்கல் பண்டிகை விடுமுறை ரத்து பற்றி கூறும் போது 'தண்ணியடிக்க எதற்கு விடுமுறை' என கேட்டு தமிழர்களை வெறுப்பேற்றிக்கொண்டிருந்தார். இதெல்லாம் மத்திய அரசுக்கு எதிராக போராட்டக்காரர்களை இயல்பாகவே திருப்பிவிட்டது.

ஆகவே தான் போராட்டக்காரர்கள் ஜல்லிக்கட்டு வேண்டும் என்ற கோஷத்துடன் பல்வேறு கோஷங்களை முன்வைத்ததை பார்க்க முடிந்தது. குறிப்பாக மோடிக்கு எதிராக அவர்களின் கோஷங்கள் இருந்தன. அவர்கள் இயல்பாகவே மத்திய அரசுக்கு எதிராகவே இருந்தனர். அவர்களை யாரும் இயக்கவும் இல்லை வழிநடத்தவும் இல்லை என்பதே உண்மை.

ஆனால் மத்திய அரசிற்கு எதிராக இயல்பாக நடந்த இந்த போராட்டத்தினை சமூகவிரோதிகளும் தேசவிரோதிகளும் கலந்து மத்திய அரசுக்கு எதிராக திசைதிருப்பியதாக வழக்கம் போல் உளவுத்துறையும் ஊடகங்களும் பெரும் பிரயர்த்தனப்பட்டு செய்திகளை பரப்பி வருகின்றன.



அதைத்தாண்டி மத்திய அரசின் மீது பல்வேறு கண்டனங்கள் தமிழர்களுக்கு இருந்தன. காவிரி நீர் பிரச்னை, விவசாயிகள் தற்கொலை, பொங்கல் விடுமுறை ரத்து, சமஸ்கிருத மொழி திணிப்பு, ஐநூறு ஆயிரம் ரூபாய் நோட்டுகளை செல்லாது என அறிவித்து மக்களை அலைகழித்தது,

அதைத்தாண்டி ஜல்லிக்கட்டுக்கு மோடி கைவிரித்தது என பல்வேறு பிரச்சனைகளில் மக்களின் மனோநிலை மத்திய அரசுக்கு எதிராக இருந்தது. இவை அனைத்தும் பல்வேறு தரப்பு மக்களை ஜல்லிக்கட்டுப் போராட்டத்தில் ஒன்றிணைத்தன. இவ்வாறு ஒருங்கிணைந்தவர்கள் அவரவர்களின் மனோநிலைக்கு தகுந்தவாறு மத்திய அரசுக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர்.

எனவே, மெரினாவில் கூடியது ஜல்லிக்கட்டுக்கான தடை நீக்கம் என்ற கோரிக்கையாக இருந்தாலும் அவர்களுக்கு மத்திய அரசால் தீர்வு சொல்ல வேண்டிய பிரச்னைகள் நிறையவே இருந்தன. எனவே, இந்த கூட்டம் வெறும் ஜல்லிக்கட்டிற்காக மட்டும் கூடிய கூட்டம் என்று பொத்தாம் பொதுவாக கூறிவிட முடியாது.

20ம் தேதி ஜல்லிக்கட்டுக்கான அவசர சட்டம் வரையறுக்கப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. 20ம் தேதி அன்று மெரினாவில் மட்டும் 20 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் கூடி விட்டனர். மதுரையில் இரயில் மறியல் போராட்டம் நடைபெற்று இரயில் ஆங்காங்கே நிறுத்தப்பட்டது.

பொதுமக்கள் அவசர சட்டத்தினை நிராகரித்து தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.




போராட்டத்தில் மூன்று நாட்களுக்கு பின்கலந்து கொண்ட ஹிப்ஹிப் ஆதி என்ற நபரையும் இன்னும் சிலரையும் வைத்து போராட்டத்தில் சமூகவிரோதிகளும் தேச விரோதிகளும் கலந்து விட்டதாகவும் அதனால் தான் போராட்டத்தை கைவிடுவதாகவும் முகநூல் வழியாகவும் ஊடகங்கள் வழியாகவும் பேட்டிகள் வெளியிடப்பட்டன.

இவர் போராட்டம் ஆரம்பித்து மூன்று நாட்களுக்கு பின் போராட்டத்தில் கலந்து கொண்டவர். ஆனால் இவர் தானே இந்த போராட்டத்தை தலைமை தாங்கி நடத்தியது போல் பேசினார். முகநூலில் முஸ்லிம்கள் தேச விரோத செயலில் ஈடுபட முயற்சித்தனர் என கூறியவர் பின்னர் இந்து ஒருவர் மதப்பிரச்னையை ஏற்படுத்த முயன்றதாக செய்தி ஊடகங்களில் பேட்டியளித்தார்.

சென்ற வருடத்தில் ஜல்லிக்கட்டிற்காக ஒரு பாட்டு இசையமைத்ததை தவிர இந்த போராட்டத்தில் இவரது பங்கு என்ன என்பது தெளிவாக யாருக்கும் தெரியாது. ஆனால் இவர் இந்த போராட்டம் முடிவுற்றதாகவும் தான் வெளியேறி விட்டதாகவும் கூறியது வேடிக்கையானது. மெரினாவில் கூடி இருந்தவர்கள் இவர்களது பேச்சை பொருட்படுத்தவே இல்லை.

சட்டசபையில் சட்டம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் பொதுமக்கள் அதனை ஏற்க மறுத்து போராட்டத்தை தொடர்ந்தனர். அன்று காலையில் இருந்தே காவல்துறையினர் போராட்டக்காரர்களை அப்புறப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இது போராட்டக்காரர்களுக்கும் காவல் துறையினருக்கும் இடையே மோதல் போக்கை ஏற்படுத்தியது.

மெரினா கடற் கரைக்கும் சாலைக்கு எதிர்புறத்திற்கும் இருந்த தொடர்பை துண்டிக்க காவல்துறை முயன்றது. குப்பத்தில் மற்றும் ஐஸ்ஹவுஸ் பகுதியில் இருந்து செல்ல முயன்றவர்களை அங்கேயே தடுத்தது. கடற்கரையில் இருந்தவர்கள் தனித்து விடப்பட்டனர் இதைத் தாண்டி கடற்கரைக்கு குடிநீர் கொண்டு செல்ல முயன்றவர்கள் மீது தடியடி நடத்தப்பட்டது. இதைத்தொடர்ந்து கடற்கரையில் இருந்த போராட்டக்காரர்கள் மீதும் கடுமையான தடியடி நடத்தப் பட்டது.

இதன் பின்னர் கலைந்து ஓடியவர்களை துரத்தி துரத்தி காவல்துறை அடித்து உதைத்து அவர்களின் கை கால்களை உடைத்தது. இதில் அதிகமானவர்கள் பெண்கள். குறிப்பாக மீனவர் குப்பத்தை சேர்ந்த பெண்கள்.

காவல்துறையை சேர்ந்த சிலர் அவர்களுக்கு கிடைக்கப்பெற்ற ஆணையின் படி ஆங்காங்கே பொதுசொத்தை சேதப்படுத்தி ஆட்டோ வாகனங்களை தீவைத்து கொளுத்தினர். ஏகப்பட்ட வாகனங்கள் அடித்து நொறுக்கப்பட்டன. வீட்டின் சன்னல் கண்ணாடிகள் கதவுகள் அடித்து நொறுக்கப்பட்டன. அதை தடுக்க முயன்ற பெண்கள் சிறுவர்கள் தாக்கப்பட்டனர். பலருக்கு மண்டை உடைந்தது. அதன் பின்னர் காவல் துறை கைது செய்யும் படலத்தை துவங்கியது.

நடுக்குப்பம், மாட்டாங்குப்பம், ஐஸ்ஹவுஸ் பகுதிகளை சேர்ந்தவர்களை வளைத்து வளைத்து கைது செய்தது. இதன் காரணமாக அங்கிருந்த ஆண்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறினர். அன்றைய தினம் சென்னைவாசிகள் சென்னை முழுவதும் ஆங்காங்கே மறியல் போராட்டங்களை நடத்தினர். இதன் காரணமாக சென்னை மொத்தமாக முடங்கியது.

ஆக அமைதியாக நடந்த போராட்டம்



காவல்துறையால் திட்டமிடப்பட்டு கலவரமாக மாற்றப்பட்டது. காவல்துறையால் வன்முறை போராட்டமாக மாற்றப்பட்டதன் நோக்கம் என்ன? பின்னணி என்ன?

போராட்டம் மத்திய அரசுக்கு எதிராக இருந்ததால் மத்திய உளவுத்துறையால் உருவாக் கப்பட்டதா அல்லது இதன் பின்னணியில் யார் உள்ளனர்?

அமைதியாக கூடிய மக்கள் அமைதியாக இருந்த மக்கள் அமைதியாக கலந்து சென்றிருக்க மாட்டார்களா?

அவர்களிடம் அமைதி பேச்சு நடத்த அமை தியாக கலைந்து செல்ல செய்யாமல் இப்படி தடியடி நடத்த அனுமதியளித்தது யார்?

கலவரத்தில் ஈடுபட்ட காவலர்கள் யார்? அவர்கள் ஏன் தங்கள் முகங்களை மறைத்து கொண்டு காவலர்களுடன் காவலர்களாக வந்து தீவைத்தனர்?

அமைதி போராட்டத்தினை வன்முறை போராட்டமாக மாற்றிக் காட்ட வேண்டியதன் அவசியம் என்ன?

போராட்டக்காரர்களுக்கு உதவிய பொது மக்களின் கை, கால், மண்டைகளை காவல்துறை உடைத்து அவர்களின் உடைமைகளை தீக்கிரை யாக்கியது ஏன்? மீண்டும் இது போன்றதொரு போராட்டத்திற்கு இவர்கள் உதவக்கூடாது என்ற எண்ணத்திலா?

போராட்டக்களத்தில் முன்னணியில் இருந்த பல சமூக ஆர்வலர்கள் தாங்கள் காவல்துறையால் குறிவைத்து தாக்கப்பட்டதைப்பற்றி கூறி உள்ளனர். அது ஏன்?

போராட்டத்தில் கலந்துகொண்ட பலர் காவல்துறையால் கடுமையாக தாக்கப்பட்டனர். இதில் பலருக்கு கை,கால்கள் உடைந்தன. பலருக்கு மண்டை உடைந்தது. இவர்கள் காவல் துறையினருக்கு எதிராக புகார் தர பயந்தனர். சிகிச்சை எடுத்துக்கொள்ளவும் பயந்தனர். பலர் சிகிச்சை மேற்கொள்ள முடியாத நிலையில் இருந்தவர்கள்.

இவர்களை தாருல் இஸ்லாம் ஃபவுன் டேஷன் டிரஸ்டின் நிர்வாகிகள் மற்றும் நீதி அமைதிக்கான மக்கள் இயக்கத்தினர் நேரில் சென்று பார்த்தனர். குறிப்பாக சிட்டி சென்டர் பிளாசா அருகில் உள்ள லூதர்புரம், மீனாம் பாள்புரம், நடுக்குப்பம் போன்ற பகுதிகளை சென்று பார்த்தனர். அப்போது அங்கு பலர் மருத்துவ சிகிச்சை மேற்கொள்ள வழியின்றி இருப்பதை அறிந்த நீதி அமைதிக்கான மக்கள் இயக்கத்தினர் 28.01.2017 அன்று காலை



மருத்துவ சிகிச்சை முகாம் ஒன்றை நடத்தினர். அதில் பலர் பங்கேற்று சிகிச்சை பெற்று சென்றனர். இந்த முகாமிற்கு தானே முன் வந்து தன்னிச்சையாக மருத்துவ உதவி செய்த டாக்டர் முஹம்மது கரீம் அவர்களின் சேவை குறிப்பானது. மருந்துகள் அனைத்தும் இலவச மாக வழங்கப்பட்டன.

சிகிச்சை அளிக்கும் போது நாம் பல்வேறு உண்மைகளை கண்டறிந்தோம். அவை..

- காயமடைந்தவர்களில் 80 சதவிகிதத் திற்கும் மேலானோர் பெண்கள்.
- கைது நடவடிக்கையை தொடர்ந்து பல ஆண்கள் தங்கள் இல்லங்களை விட்டு வெளியேறினர். அவ்வாறு வெளியேற முயன்ற ஒரு இளைஞன் விபத்தில் சிக்கி உயிரிழந்தான். அவன் லூர்தர்புரத்தை சேர்ந்தவன்.
- கடுமையாக காயம் பட்ட ஒருவர் இறந்து விட்டது போல் தெரிந்தது. அவருடைய நிலை என்னவென்றோ அவர் யார் என்றோ தெரியவில்லை என்று கூறினர் நடுக்குப்பத்து மக்கள்.
- ஆண்கள் வீடுகளை விட்டு வெளியேறிவிட்ட நிலையில் தனியாக இருந்த பெண்களிடம் காவலர்கள் சிலர் அநாகரீகமாக நடந்து கொண்டிருக்கின்றனர். இரவில் குற்றவாளிகளை தேடுகிறோம் என்ற பெயரில் தனியாக உள்ள பெண்களிடம் சென்று தங்கள் ஆடைகளை (வைகறையின் தரத்திற்கு உள்ளதல்ல) அநாகரீகமாக நடந்துள்ளனர்.
- தடியடி பட்டவர்களில் பலர் ஊடகங்களை சேர்ந்தவர்கள். அவர்களையும் குப்பத்தை சேர்ந்தவர்களே காப்பாற்றியுள்ளனர்.

(சன் டி.வி பத்திரிகையாளர் ஒருவர் காயம்பட்ட தன் கைகளை நம்மிடம் காட்டினார்.)

நாம் நடத்திய முகாமை தொடர்ந்து அங்கு வந்த பத்திரிகையாளர்கள் டாக்டர்.முஹம்மது கரீம் அவர்களை பேட்டிக்கண்டு காயங்களின் நிலை குறித்து கேட்டறிந்தனர். பின்னர் இந்த பேட்டி சன் டி.வி. மற்றும் கலைஞர் டி.வி.யில் வெளிவந்தது.

– அபூ அஃப்ரஹ்

# மே-17, திருமுருகன் காந்தி



மே, 17 இயக்கத்தின் ஒருங்கிணைப் பாளர் திருமுருகன் காந்தி அவர்களை சந்தித் தோம். அவரிடம் போராட்ட களத்தில் சமூக விரோதிகள் ஊடுருவியது உண்மையா எனக் கேட்டோம். அவர் சொன்ன தகவல்கள்...

“சில சமூக விரோதிகள் போராட்ட களத்தில் ஊடுருவ முயன்றனர். அவர்கள் இந்துத்துவவாதிகள். அவர்கள் போராட்டக் களத்தில் இருந்தவர்களை தாக்கினார்கள், பிரச்சனைகளை உண்டு பண்ணினார்கள். அவர்களை ஊள்ளூர்வாசிகள் பிடித்து விசாரித்தபோதுதான் அவர்கள் கைக்கூலி கள் என்பது தெரியவந்தது. அவர்களை பி.ஜே.பி.யினர் ஆளுக்கு ரூ. 15,000 என தந்து போராட்ட களத்தில் பிரச்சனையை உண்டு பண்ண அனுப்பினார்கள் என பிடிப்பட்டவர்கள் கூறினார்கள். அவர்களை பிடித்து காவல்துறையிடம் ஒப்படைத்தோம்.

ஆனால் இவர்களைப் பற்றியோ, இவர் களை அனுப்பி வைத்தது யார் என்பது பற்றியோ காவல்துறை விசாரிக்கவும் இல்லை, வெளிப்படுத்தவும் இல்லை, ஊடகங் களும் இந்த செய்தியை வெளியிடவில்லை என மிகுந்த வருத்தத்தோடு கூறினார்.

– அபூ அஃப்ரஹ்

# தாருல் இஸ்லாம் நடத்திய சமுதாய விழிப்புணர்வு கருத்தரங்கம்



15.01.2017 ஞாயிறு அன்று குமரி மாவட்டத்தில் தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் மற்றும் நீதி, அமைதிக்கான மக்கள் இயக்கம் சார்பாக, சமுதாய விழிப்புணர்வு கருத்தரங்கம் செட்டிக்குளம் ஜங்ஷனில் உள்ள ஏ.பி.என். பிளாசா, இரண்டாவது மாடியில் உள்ள கான்ஃபிரன்ஸ் ஹாலில் மாலை 7.00 மணிக்கு நடைபெற்றது.

தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட் குமரி மாவட்ட பொறுப்பாளர் அ. ஜின்னா தலைமை உரையை நிகழ்த்தி, நிகழ்ச்சியை துவக்கி வைத்தார். மேலும் நீதி அமைதிக்கான மக்கள் இயக்கத்தின் நாகை மாவட்ட பொறுப்பாளர் மு. இம்தியாஸ் அஹமது அவர்கள் கறுப்பு பணமும் இஸ்லாமிய பொருளாதாரம் என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார்.

பா.ஜ.க. அரசு கொண்டுள்ள பண நீக்க நடவடிக்கை வெறும் பசப்பு வார்த்தைகளாகத்தான் இருக்கிறது. ஊழல், பதுக்கல், கடத்தல் போன்றவை இந்த ஜனநாயக நாட்டில் ஓயப்போவதில்லை. ஏனெனில் மனிதனாக ஏற்படுத்திய சட்டம், அதனால் நாளொன்றுக்கு ஒவ்வொரு சட்டத்தை கொண்டுவந்து, பொதுமக்களுக்கு மிகவும் சிரமத்தை கொடுக்கின்றது. மேலும் இந்த சட்டத்தினால் 13 உயிர்களும் பலி கொடுக்கப்பட்டுள்ளது. இந்த உயிர்களுக்கு பா.ஜ.க. அரசு பதில் சொல்லிட வேண்டும்.

மேலும் இந்த நாட்டில் ஒட்டுமொத்த மக்களும், நிம்மதியாக கடத்தல், ஊழல், பதுக்கல் இல்லாமல் இருக்க வேண்டும் என்றால் 1400 ஆண்டுகளுக்கு முன்னால் ஏற்படுத்தப்பட்ட அல்லாஹ்வின் சட்டத்தைக் கொண்டே நிறைவேற்ற முடியும். இஸ்லாமிய ஆட்சியே அதற்கு சான்று. மேலும் இஸ்லாமிய ஆட்சியில் சுங்கவரி என்பது கிடையாது. இஸ்லாமிய ஆட்சி ஏற்பட்டால் ஒட்டுமொத்த உலக மக்களுக்கு நீதி கிடைக்கும், பொருளாதாரத்திலும் முன்னேற்றம் ஏற்படும். அதற்காக ஒவ்வொருவரும் பாடுபட வேண்டும் என்று உரையை நிறைவு செய்தார்.

அடுத்து நீதி அமைத்திக்கான மக்கள் இயக்கம் மதுரை மாவட்ட பொறுப்பாளர் அ.ரஃபின் அவர்கள் இந்திய முஸ்லிம்களின் நிலையும், வழக்குகளும் என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார். குறிப்பாக டிசம்பர் மாதம் மதுரையில் நடந்த 5 அப்பாவி முஸ்லிம் இளைஞர்கள் கைது செய்யப்படும்போது அந்த கைது செய்யப்பட்ட குடும்பங்களுக்கு அடுத்து என்ன செய்ய வேண்டும் என்றே தெரியவில்லை. அந்த பகுதி முஸ்லிம்களே வேடிக்கை பார்த்துக் கொண்டுதான் இருந்தார்களே தவிர அவர்களுக்கும் என்ன செய்ய வேண்டும் என்பதே தெரியவில்லை.

இந்த சூழ்நிலையில் நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்றும் அப்பாவிகளை கைது செய்யும் போது அவர்களின் பெற்றோர்கள், தன் மகன் கைது செய்யப்படுபவதை மற்றவர்கள் பார்த்தால் நமக்கு அவமானம் என்று நினைத்து அமைதியாக இருப்பதால் தான் பொய் வழக்கு புனையப்பட்டு கடும் சித்திரவதைகளுக்கும் ஆளாகின்றார்கள் என்றும், அதை ஊடகமும், பத்திரிகைகளும் கைது செய்தவர்களை அப்பாவிகள் என்று தெரிந்திருந்தும் அவர்களை பெரிய தீவிரவாதியாக செய்திகளை வெளியிட்டு அப்பாவி முஸ்லிம்களின் வாழ்க்கையை சீரழிக்கின்றது என்றும் கூறினார்.

போலீஸாருக்கு எதிராக நமது எதிர்ப்பை தெரிவித்தால் போலிஸார் பொய் வழக்கு போடுவதற்கும், தங்கள் கொண்டு வந்தப் பொருட்களை அவர்களின் வீட்டில் வைப்பதற்கும் வாய்ப்பில்லை என்றும் இனிமேல் இதுபோன்று சம்பவம் நடந்தால் நீதி அமைத்திக்கானமக்கள்இயக்கத்தினரைதொடர்புகொள்ளுங்கள் என்றும், அவர்கள் உங்களுக்கு உதவி புரிவார்கள் என்றும் தனது உரையை நிறைவு செய்தார்.

இறுதியாக நீதி அமைத்திக்கான மக்கள் இயக்கம் சார்பாக எம்.மாஹீன் அவர்கள் நன்றி கூறி இந்த கருத்தரங்கத்தை நிறைவு செய்தார்.

இந்நிகழ்ச்சியை குமரி மாவட்ட தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட் நிர்வாகிகள் ஏற்பாடு செய்தனர்.

# காந்திஜி கொலை



காந்தி ஜி அவர்கள் கொலையை அவர்கள் எவ்வாறு செய்தார்கள், ஏன் செய்தார்கள் என்பதையெல்லாம் ஒரு நூலில் விளக்கி னார். அவற்றில் பல அரிய தகவல்கள். அவற்றைச் சுருக்கமாக இங்கே இடம்பெறச் செய்கின் றோம்.

காந்தி ஜி கொலையில் ஈடுபட்ட கோட்சே முதலானவர்கள் தங்களுக்குக் கீழ் நீதிமன்றம் வழங்கிய தண்டனைக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தார்கள்.

இந்த மேல் முறையீட்டை நீதிபதி ஜி.டி. கோஸ்லா என்பவரின் தலைமையிலான அமர்வு தான் விசாரித்தது. நீதிபதி கோஸ்லா அவர்கள் கீழ் நீதிமன்றம் வழங்கிய தண்டனையை உறுதி செய்தார்கள். அத்தோடு காந்திஜியைத் துப்பாக்கியில் சுட்டுக் கொன்ற கோட்சேவுக்கும் அவனுக்கு அனைத்து வகையிலும் உதவி செய்த ஆப்தியையும் தூக்கு மேடை வரை அழைத்துச் சென்றார். அவர்களின் கடைசி ஆசைகளையும் வாக்கு மூலத்தையும் உணர்வுகளையும் அரசு ஆவணங்களில் பதிவு செய்தார்.

பின்னர் காந்திஜி கொலை வழக்கு உயர் நீதிமன்றம் எப்படி நடத்தப்பெற்றது.

**காந்திஜி கொலையில் குற்றம் சுமத்தப்பெற்றவர்கள்**

1. நாதுராம் கோட்சே (வயது 37) ஆசிரியர் – இந்து ராஷ்டிரா பத்திரிகை, பூனா.
2. கோபால் கோட்சே (வயது 27) கோட்சேவின் உடன் பிறந்த சகோதரர். பூனாவிலுள்ள அரசு இராணுவ ஆயுதக் கிடங்கின் காப்பாளர் (Storage Keeper)
3. நாராயன் ஆப்தி (வயது 34) இந்து ராஷ்டிரா பத்திரிகை நடத்திய "பிரகாசம் லிமிடெட் கம்பெனியின் இயக்குநர் – உதவியாளர் (Managing Director)
4. விஷ்ணு கர்காரி (வயது 37) அஹ்மத் நகரிலுள்ள ஒரு ஹோட்டல் உரிமையாளர்
5. மடன்லில் பஃஹ்வா (வயது 20) அஹ்மத் நகரிலுள்ள அகதிகள் முகாமில் அகதியாக இருந்தவர்.
6. ஷங்கர் கிஸ்டாய்யா (வயது 27) வீட்டு வேலைக்காரன் – பூனாவில் வசித்தவர்.
7. டாட்டாரியா பார்சூர் (வயது 49) குவாலியூரில் மருத்துவத்தைத் தொழிலாகச் செய்தவர்.

*8. வினாயக் சவார்கர் (வயது 65)*

பாரிஸ்டர் பட்டம் பெற்றவர் (அதாவது) ஆங்கில நாடு சென்று பட்டம் பெற்றவர். பல சொத்துக்களுக்குச் சொந்தக்காரர். மும்பையில் வாழ்ந்து வந்தவர்.

இன்னும் மூன்று பேர் ; கங்காதார் காந்த் வத்தி, கங்காதார் ஜாதவ், சூரிவதேவ் ஷர்மா ஆகியோர் கடைசி வரை காவல் துறையிடம் சிக்காமல் தப்பித்துவிட்டார்கள். அதனால் Inabenlia அவர்கள் இல்லாமலேயே அவர்களின் வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டன. கீழ்நீதிமன்றத்தில் குற்றம் சுமத்தப் பட்ட வர்களின் சார்பில் தொடுக்கப்பெற்ற வாதங்கள் ஒருமாதம் தொடர்ந்தது.



## கோட்சேவின் கடைசி நிமிடங்கள் வழக்கை விசாரித்த உயர்நீதிமன்ற நீதிபதி கூறுவது...?

வழக்கு விசாரணையும் நவம்பர் 1948−ல் முடிவுற்றது. தீர்ப்பு 1949−ஆம் ஆண்டு பிப்ரவரி 10ஆம் நாள் வழங்கப்பெற்றது.

இதில் வீர் சவார்கர் சில நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு மன்னிப்பும் கேட்டார் என்பதனால் விடுவிக்கப்பட்டார் என்பதை முன்னரே குறிப்பிட்டோம்.

நாதுராம் கோட்சேக்கும் அவருடைய நண்பர் ஆப்திக்கும் தூக்குத் தண்டனை வழங்கப் பட்டது. மீதமுள்ள ஐந்து பேருக்கும் ஆயுள் தண்டனை வழங்கப்பெற்றது.

**உயர் நீதிமன்றத்தில் :**

இவர்களின் மேல்முறையீடு மே−2, 1949 ஆம் ஆண்டு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது. இதில் நாதுராம் கோட்சேயைத்தவிர ஏனைய ஐந்துபேரும் வழக்கறிஞர்களை வைத்துக் கொண்டார்கள். நாதுராம் வழக்கறிஞரை வைத்துக்கொள்ளாததற்கு அவருடைய வறுமையைக் காரணமாகச் சொன்னார்கள். இது ஒரு பொய். இதனை உயர்நீதிமன்ற நீதிபதி டி.ஜி. கோஸ்லா இப்படிக் குறிப்பிடுகின்றார்கள்.

The plea of poverty on which Godse had based his request to be present in person was only an excuse, and the real reason behind the maneuver was a morbid desire to watch the process of his disintegration at first hand and also to exhibit himself as a fearless patriot and a passionate protagonist of Hindu ideology. He had remained completely unrepentant of his atrocious crime, and whether out of a deep conviction in his beliefs or merely in order to make a last public apology, he had sought this opportunity of displaying his talents before he dissolved into oblivion." (Source : The Murder of the mahatma : By G.D.Khosla)

நான் வறியவன் அதனால் என்னுடையவழக்கைநானே வாதிப்பேன் என கோட்சே சொன்னது ஒரு பம்மாத்து வேலை. வறுமைக்கும் இந்த விண்ணப்பத்திற்கும் எந்தச் சம்மந்தமும் இல்லை. (கோட்சே வழக் கறிஞரை வைத்துக்கொள்ளாததற்கு) உண்மை யான காரணம் முதலில் தன்னை குற்றம் சுமத் தப்பட்ட ஏனையவர்களிடமிருந்து பிரித்து தனி யாகக் காட்டிட வேண்டும் என்பதும், தன்னை வீரமிக்க தேசபக்தன் எனக் காட்டிட வேண்டும் என்பதும்தான்.

இந்துக் கொள்கையை பரப்பிடும் பெரு வீரன் என்றும் காட்டுவதற்கேயாகும் அவன் (கோட்சே) இந்த வாய்ப்பை பயன்படுத் தித்தான் ஒன்றுமில்லாமல் ஆவதற்கு முன்பு, தன்னுடைய திறமையை வெளிப்படுத்திட விரும்பினான்"

(ஆதாரம் : The Murder of the mahatma : By G.D.Khosla, Page-18,19)



ஆனால் இறுதிவரை இதே வீரத்தையும் உணர்வையும் வெளிக் காட்டினானா கோட்சே என்பதை இதே நீதிபதி தன்னுடைய நூலில் குறிப்பிடுகின்றார். கீழ் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை உயர்நீதி மன்றமும் உறுதி செய்தது. நவம்பர் 15, 1949 அன்று அவர்கள் தூக்கிலி டவிருந்தார்கள்.

மகாத்மா காந்தி கொலையின் கடைசி அத்தியாயம். அம்பாலாலிருந்த மத்திய சிறைக்கு நம்மை அழைத்துச் செல்கின்றது. இங்கேதாம் நாதுராம் கோட்சேவும், நாராயணன் ஆப்தியும் நவம்பர் 15–ஆம் நாள் தூக்கிலிடப்படவிருந் தார்கள். அன்று அவர்கள் அடைக்கப்பட்டிருந்த சிறை அறையிலிருந்து வெளியே அழைத்து வரப்பட்டார்கள். கோட்சேதான் முன்னால் நடந்து சென்றான் அவனுடைய கால்கள் அவ்வப் போது தடுமாறின. அவனுடைய தோற்றமும் நடத்தைகளும், அவனை பயங்கரமான பதற்றம் பீடித்துக் கொண்டிருக்கின்றது என்பதை வெளிப் படுத்தின. ஆனால் அவன் பார்ப்பவர்களின் கண்களிலிருந்து அதை மறைத்திட பயங்கரமாக முயற்சி செய்தான். அகண்ட பாரதம் எனக் கத்திக்கொண்டே தன் பயத்தையும், பதற்றத் தையும் மறைத்திட முயன்றான். அவனுடைய புறத்தோற்றம் அவன் பீதிவயப்பட்டு நிற்கின் றான் என்பதையே காட்டிற்று. அவனுடைய சப்தம் அவன் பெரும் ஆபத்தை எதிர்நோக்கு கின்றான் என்ற ஆதங்கத்தை அப்பட்டமாக வெளிக்காட்டிற்று.

கீழ் நீதிமன்றத்திலும், உயர்நீதிமன்றத்திலும் பேசிடும்போது அவன் காட்டிய கம்பீரமும், கர்ச்சனையும் தூக்கு கயிற்றைக் கண்டதும் காணாமற் போயிற்று.

கோட்சேவின் பதற்றத்தையும், பதை பதைப் பையும் கண்ட ஆப்தி தனது வீரத்தை வெளிப் படுத்தி கோட்சேயின் பதைபதைப்பைத் தணிக்க முயன்றான். ஆப்தி, நாம் அமரர்களாகி – என்றும் வாழப்போகின்றோம் எனக்குரல் கொடுத்தான்.

ஆப்தியின் குரலில் கம்பீரமிருந்தது. அவன் கணீர் எனக் கத்தினான். அவனுடைய நடையில் உறுதி வெளிப்பட்டது.

அம்பாலால் மாவட்ட நீதிபதியும், அம்பா லால் சிறை தலைமைக் கண்காணிப்பாளரும், உயர் நீதிமன்ற ஆணையை செயல்படுத்தியது பற்றி சான்றிதழை வழங்க அங்கே வந்திருந் தார்கள். அவர்கள் இப்படிப் பதிவு செய்தார்கள்.

unlike Godse, Apte was completely self-possessed and displayed not the slightest sign of nervousness. He walked with a firm step with his shoulders thrown back and his head held high. Taller than Godse by several inches, he appeared to dominate over him. There was, on his face, a look not so much of defiance and justification of what he had done, as of an inner sense of fulfillment, of looking forward to a rightful end to the proceedings which had occasioned so much sound and fury. It was said afterwards that Godse had, during his last days in goal, repented of his deed and declared that were he be given another

chance he would spend the rest of his life in the promotion of peace and the service of his country. Apte on the other hand, maintained an unrelenting attitude.

கோட்சேயைப் போல் அல்லாமல், ஆப்தி தன்னை முழுமையான கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தான். அவன் சற்றும் சலனப்பட்டதாகக் காட்டிக்கொள்ளவில்லை. அவன் உறுதியாகவே நடந்தான். நெஞ்சை நிமிர்த்திக் கொண்டான். தோள்களை படரவிட்டுக் கொண்டான், தலை நிமிர்ந்தே நடந்தான். அவன் கோட்சேயை விட பல அங்குலங்கள் உயரமானவன். அவனுடைய பார்வையில் அவன் செய்ததைப் பற்றிக் கவலைப் படவில்லை. அந்தச்செயலை நியாயப்படுத்துவது போலவே பார்வையைப் பாய்ச்சினான். அவன் தான் அந்தச் செயலால் உள்ளூர உந்தப்பட்டவனாகவும், உள்ளத்தால் திருப்தியடைந்தவனாகவுமிருந்தான்.

பின்னர் சொன்னார்கள், கோட்சே சிறையிலிருந்த கடைசி நாள்களில் தனக்கு இன்னொரு வாய்ப்பு, வாழ்ந்திட வழங்கப்படுமேயானால், அவன் தன் வாழ்வின் எஞ்சிய நாட்களை அமைதியாகவும், சமாதானத்தை முன்னெடுத்துச் செல்லவும், நாட்டின் சேவைக்காகவும், உழைப்பேன் எனக் கூறினானாம். கோட்சேவுக்கு நேர்மாறாக ஆப்தி சற்றும் விட்டுக்கொடுக்காத மனோ நிலையில், காணப்பட்டான்" ஆனால் இன்று வெட்கமில்லாமல் கோட்சேயைத் தூக்கிப் பிடிக்கின்றார்கள். அதுதான் பாசிசம்.

இதில் வேடிக்கையும் வேதனையும் என்னவென்றால் காந்தி கொலைக்கு நாதுராம் கோட்சேவை சித்தாந்த ரீதியாகத் தயார் செய்தவர் வீர்சவார்கர். பின்னர் அந்தச் சிந்தாந்தத்தை வளர்க்கவும், காந்தியை கொலை செய்யவும் கடைசி வரைப் பணம் தந்தவர் வீரசவார்கர்.

காந்தியைக் கொலை செய்த வழக்கில் குற்றம் சாட்டப்பெற்றவர். தண்டிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இவருடைய படம் நமது நாடாளுமன்ற வளாகத்தில் வைக்கப்பட்டிருக்கின்றது. என்னே ஜனநாயகம்!

**காந்தியைக் கொலை செய்ததற்குக் காரணம்..?**

நாதுராம் கோட்சே, தான் காந்தியைக் கொலை செய்ததைச் சொல்லிடும்போது – (நீதிமன்றத்தில்) தேசப் பிரிவினைக்குக் காந்திதான் காரணம் என்றும், அவர் முஸ்லிம்களுக்குச் சாதகமாகவே சதாசர்வ காலமும் நடந்தார். இந்துக்களைப்பற்றிக் கவலைப்படவில்லை. அவர் எப்போதும் ஜின்னாவுக்கு விட்டுக் கொடுத்தார். ஒருமுறைக்கூட காந்திஜி ஜின்னாவுடனான விவாதத்தில் வென்றதில்லை என்றெல்லாம் நீட்டி முழக்கினான்.

ஆனால் தேசத்தைப் பிரித்தது, இந்தியாவை தங்கள் பிடிக்குள் வைத்துக்கொள்ள வேண்டும் என விரும்பியது இந்துத்துவ வாதிகள் என்ற உண்மை பின்னர் வெளிச்சத்திற்கு வந்தது. பிற்றைய நாள் வரலாற்றில் கையும் களவுமாகவே மாட்டிக்கொண்ட இந்துத்துவ வாதிகள், அந்தப் பழியை ஆங்கிலேயர்கள் மீது போட்டார்கள்.

*1988*ஆம் ஆண்டு நவம்பர் *21*–ஆம் நாள் இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழில் கட்டுரை எழுதிய இந்துத்துவாவின் மூளை என அழைக்கப்பட்ட கே.ஆர்.மல்கானி இப்படி எழுதினார்.

அதாவது "தேசத்தைப் பிரித்தது முஸ்லிம்களோ, இந்துக்களோ அல்ல மாறாக தேசப் பிரிவினையை, திட்டமிட்டதும், வளர்த்ததும் முடிவில் பிரித்ததும் ஆங்கிலேயர்கள்தாம். ஆனால் அது ஆங்கிலேயர்கள் அல்ல மாறாக அது இந்தியாவை இந்து ராஷ்டிரமாக ஆக்கிடத் துணிந்த இந்துத்துவவாதிகளின் சூழ்ச்சி என்பது இப்போது வெட்ட வெளிச்சமாகிவிட்டது.

மேலும் விபரங்களுக்குப் பார்க்கவும், தேசப்பிரிவினைக்கு யார் காரணம்? "வேர்கள் வெளியீட்டகம்".

ஆனால் கோட்சே, ஆப்தி போன்றவர்கள் தங்களுக்கு ஊட்டப்பட்ட வெறித்தனத்திற்கு அப்பால் சிந்திக்க முடியாதவர்களாகி விட்டார்கள். தங்களுக்குச் சிந்தாந்தத்தையும், பணத்தையும் தந்தவர்களிடம் வேறு குரங்குப் புத்திகளும், குள்ள நரித்தனமும் உண்டு என்பதை அவர்களால் புரிந்துகொள்ள இயலவில்லை.

அடுத்து காந்தியைக் கொலை செய்ய உடனடி காரணமாக அமைந்தது காந்திஜி அப்போது மேற்கொண்ட உண்ணாவிரதம். அந்த உண்ணாவிரத்திற்கான காரணம்.

தேசப்பிரிவினையின்போது பாகிஸ்தான் என பிரித்துவிடப்பட்டப் பகுதிக்கு ரூபாய் 55

கோடியைத் தருவதாக நம் நாட்டுத் தலைவர்கள் பிரிவினை ஒப்பந்தத்தில் வாக்குறுதி அளித்தனர்.



ஆனால் இந்தப் பணத்தைத் தந்திடுவதில் தயக்கம் காட்டினார்கள். சாக்குப் போக்குகளைச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். பணத்தை மறுப்பதற்குக் காரணமாகச் சொன்னதில் ஒன்று பாகிஸ்தானுக்கு அந்தப் பணத்தைத் தந்தால் அந்தப் பணத்தை பாகிஸ்தான் ஆயுதங்களை வாங்கிப் பயன்படுத்தும், அந்த ஆயுதங்கள் இந்தியாவிற்கு எதிராகப் பிரயோகிக்கப்படும். இதுபோன்ற கருத்துக்களை காங்கிரஸ் கட்சிக்குள் புகுந்த சனாதன வாதிகள் பரப்பிக்கொண்டே இருந் தார்கள்.

ஆனால் பத்திரிகைகள் குறிப்பாக இந்துத்துவ வாதிகள் நடத்தி வந்த பத்திரிகைகள், இந்தப் பணம் இந்தியாவுக்கு எதிராகப் பயன்படுத்தப்படும் என இடைவிடாமல் கூறி வந்தார்கள்.

ஜனவரி 12–ஆம் நாள் 1948ஆம் ஆண்டு அப்போதைய உள்துறை அமைச்சர் சர்தார் வல்லபாய் பட்டேல், பாகிஸ்தானுக்கு இந்தப் பணத்தைத் தந்திடவே முடியாது என்றார். மறுத்தார் மகாத்மா, கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுங்கள் இல்லையேல் நான் சாகும் வரை உண்ணாவிரதமிருப்பேன் என்றார்கள். வாக்குறுதியை மீறுபவர்கள் என்ற பெயரை இந்திய குடிமக்கள் சம்பாதிக்கக் கூடாது. அது உலக அளவில் நாம் நம்ப முடியாதவர்கள் என்ற எண்ணத்தை ஏற்படுத்தும் என்றார்கள் மகாத்மா காந்தி ஜி அவர்கள்.

பணத்தை தராததால் காந்திஜி உண்ணாவிரதத்தை தொடங்கினார்கள். மூன்று நாள்களுக்குப் பின் பணத்தை தருவதாக ஒத்துக் கொண்டார்கள் பட்டேலும் நேருவும். காந்திஜி அவர்கள் உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டார்கள். அதில் பட்டேலும் நேருவும் வந்து உரை நிகழ்த்தினார்கள்.

ஆனால் இந்துத்துவ வாதிகளின் பிடியில் சிக்கிக்கொண்ட தேசிய பத்திரிகைகள் "Government of "India had at last - surrendered to pakistan due to pressure from ghandhiji. The leaders of Pakisthan were overcome with joy" என எழுதின.

அதாவது "கடைசியாக இந்திய அரசு பாகிஸ்தானிடம் சரணடைந்துவிட்டது. இதற்குக் காந்தியின் அழுத்தங்களே காரணம். பாகிஸ்தானின் தலைவர்கள் அனைவரும் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றார்கள்"

இவையெல்லாம் பத்திரிகைகளில் முதல் பக்கத்தில் முகப்புச் செய்திகளாக வந்தன. இதனை இந்துத்துவ வாதிகள் அப்பிப்பிடித்துக் கொண்டார்கள். காந்திஜியை கொலை செய்திட வேண்டும் என முயன்று கொண்டிருந்தவர்களுக்கு இந்த எழுத்துக்கள் மிகப்பெரியதொரு உந்து சக்தியாக அமைந்தது.

பாய்ந்து சென்றார்கள். ஜனவரி 20–ஆம் நாள் 1948 –இல் முயற்சி செய்தார்கள், தோற்றார்கள். 30ஆம் நாள் தங்கள் கொலை வெறியைத் தனித்தார்கள். உண்மையைச் சொன்னால் காந்திஜியின் கொலையில் இந்துத்துவ பத்திரிகைகளுக்கும் பங்குண்டு.

- Source : The Murder of the Mahatma by G.D. Khosla.

(Formerly Chief Justice of Punjab, who headed the appeal of Nathuram Godse and others and gave his most historic verdict in the case of gandhi assosination)

இப்போது அந்தக் கோட்சேவின் வாரிசுகளிடம் நாடு சிக்கிக்கொண்டது.

**-MGM**



அதுதான் கர்கரேயைக் கொலை செய்தது யார், இந்திய தீவிரவாதத்தின் உண்மை முகம். இதனை நமது வேர்கள் வெளியீட்டகம் தமிழில் வெளியிட்டது. பல்வேறு நிகழ்ச்சிகள் மூலம் பொதுமக்களிடையே பரவலாக்கியது.

இதனிடையே அஜ்மல் என்ற ஓர் அப்பாவியை தூக்கில் போட்டு மொத்த

# எஸ்.எம். முஷ்ஃரிப்

## கூற்று உண்மையானது!

நமது மும்பை மாநகரம் நவம்பர் 26, 2008 ஆம் அண்டு ஒரு பெரும் முற்றுகைக்கும் பின்னர் தாக்குதலுக்கும் உள்ளானது. இதனை மும்பைத் தாக்குதல் 26/11 என அடையாளப்படுத்துகின்றார்கள். இந்த மும்பைத் தாக்குதலில்தான் நேர்மையான காவல்துறை அதிகாரி வீரமகன் ஹேமந்த் கர்கரே கொலை செய்யப்பட்டார். அந்தக் கொலையை ஏற்பாடு செய்தவர்கள், நமது மத்திய உளவுத்துறையும் அபிநவ்பாரத் என்ற சங்கப்பரிவார அமைப்பும்தான்.

வெளி நாட்டிலிருந்து வந்தவர்கள்தாம், இந்த கொலையைச் செய்தார்கள் என்ற அரசின் கூற்று ஐமுக்காளத்தில் வடிகட்டியப் பொய். அதனால் கர்கரேயைக் கொலை செய்த பகுதியை மறு ஆய்வுக்கும் புலன் விசாரணைக்கும் உள்படுத்திட வேண்டும் என வழக்குகளைத் தொடர்ந்தார்கள் எஸ்.எம். முஷ்ரிஃப் என்ற மராட்டிய காவல்துறை அதிகாரி.

அந்த வழக்கு முதலில் உச்சநீதிமன்றத்திற்கும் பின்னர் உயர்நீதிமன்றம் மும்பைக்கும் வந்தது. இன்றளவும் அந்த வழக்கை தன்னந்தனியாக நடத்தி வருகின்றார் எஸ்.எம். முஷ்ரிஃப் அவர்கள்.

### கர்கரேயைக் கொலை செய்தது யார்..?

இவற்றையெல்லாம் விளக்கி நூல் ஒன்றைத் தந்தார்கள் எஸ்.எம். முஷ்ஃரிப் அவர்கள். உண்மையையும் மூடி மறைத்தார்கள் நமது காங்கிரஸ் அரசு. இதில் நீதித்துறையும் மயங்கியது. அதனையும் அதாவது நீதித்துறையின் கண்கள் எப்படி மறைக்கப்பட்டன என்பதையும் ஒரு நூலாகத் தந்தார் எஸ்.எம். முஷ்ஃரிப் அவர்கள். அதைத்தான் இப்போது நாம் 26/11 விசாரணை நீதித்துறையும் மயங்கியது ஏன்? என்ற வடிவில் நூலாகத் தந்துள்ளோம்.

### ஆய்வுகள்

இந்த நூல்களில் முதலில் வந்த நூலாகிய கர்கரேயைக் கொலை செய்தது யார்? இந்தியத் தீவிரவாதத்தின் உண்மை முகம் என்ற நூலை நான்கு வெளி நாட்டவர்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொண்டார்கள். அவர்கள் அந்த நூலில் (Research) என்ற ஆய்வை நடத்தி வருகின்றார்கள். அதில் ஒருவர் 'டேவிட்சன்' என்பவர்தான் ஆய்வை நூலாகவும் வெளியிட்டுள்ளார்.

எஸ்.எம்.முஷ்ரிஃப் அவர்களின் இரண்டு நூல்களிலும் கூறப்பட்ட பல நிகழ்வுகள் உண்மை என்பது அவ்வப்போது நிரூபிக்கப்பட்டு வருகின்றது. இது சம்மந்தமாக அண்மையில் இன்னொரு காவல்துறை அதிகாரி எஸ்.எம். முஷ்ரிஃப் அவர்களின் இரண்டாவது நூலில் இடம்பெற்ற நிகழ்வு உண்மை என கூறியுள்ளார். இதனை இந்தியன் எக்ஸ்பிரஸ் –இன் மும்பைப் பதிவு வெளியிட்டுள்ளது. டெல்லி ஹிந்துஸ்தான் டைம்ஸ் பத்திரிகையும் வெளியிட்டுள்ளது.

எஸ்.எம்.முஷ்ரிஃப் அவர்கள், தான் எழுதிய இரண்டாவது நூலாகிய 26/11 விசாரணை நீதித்துறையும் மயங்கியது ஏன்? என்ற நூலில் விலேபார்லே குண்டு வெடிப்பு ஒன்றைக் குறிப்பிடுகின்றார். அதில் இரண்டு பேர் இறந்ததை பற்றியும் குறிப்பிடுகின்றார். "சந்தீப் தாங்கேயும், ராம்ஜி கல்கங்கராவும் கார் குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டிருக்கலாம்"

விலேபார்லியில் கொல்லப்பட்ட அந்த இரண்டு தீவிரவாதிகள் அபிநவ்பாரத் இயக் கத்தைச் சேர்ந்த கொடூரமான தீவிரவாதிகளான சந்தீப்தாங்கேவும், ராம்ஜி கல்கங்கராவும் என நான் சந்தேகப்பட ஆரம்பித்துள்ளேன். இந்த இரண்டு தீவிரவாதிகளும் 2008–ல் நடந்த மாலேகான் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் ஈடுபட்டவர்கள். இவர்கள் 26/11 மும்பை தாக்குதலுக்குப் பிறகு தலைமறைவாகிவிட்டார்கள். மீதமுள்ள குண்டு வெடிப்புக்கான அஜ்மீர் ஷெரீஃப், மெக்கா மஸ்ஜித், சம்சவ்தா எக்ஸ்பிரஸ் மற்றும் மாலேகான் 2006 குண்டு வெடிப்பு வழக்குகளின் விசாரணைகளும் இந்த இரண்டு பேர் வரை சென்று நின்றுபோனதால் என் சந்தேகம் இன்னும் ஆழமாகிறது. இது ஐ.பி. என்ற மத்திய உளவுத்துறையின் தந்திரமாக இருக்கக்கூடும்.

விலேபார்லியில் நடந்த கார் குண்டு வெடிப் பில் இந்த இரண்டு தீவிரவாதிகளும் இறந்து போனதைத் தெரிந்து வைத்துக்கொண்டு, ஐ.பி.யும் அதன் சதிகாரர்களும் ஆர்.டி.எக்ஸ், இவர்களிடமிருந்துதான் கிடைத்தது எனக்கூறி அவர்களிடம் கொண்டுவந்து வழக்கை நிறுத்தி விட்டனர். இதன்மூலம் உண்மையில் இந்த குண்டுவெடிப்புகளுக்கு பயன்பட்ட ஆர்.டி. எக்ஸ் யாரிடமிருந்து கிடைத்தது என்பது, அறியப் படாமலேயே போய்விட்டது. இந்த ஆர்.டி.எக்ஸ் வகை வெடி மருந்துகள், லெப்டினன் கர்னல், பிரசாத் புரோகித்திடமிருந்துதான் கிடைத்தன என எல்லோரும் அறிந்திருந்த போதிலும் சரியே" (ஆதாரம் 26/11 விசாரணை நீதித்துறையும் மயங்கியது ஏன்? நூலின் தமிழ் மொழியாக்கம் பக்கம் 42,43 வேர்கள் வெளியீட்டகம்)

உண்மையில் அபிநவ்பாரத் என்ற பயங்கர இந்துத்துவ தீவிரவாத அமைப்பைச் சார்ந்த சந்தீப் தாங்கேயும், ராம்ஜி கல்சங்கராவும் இப்படி விலேபார்லேவில் இப்படித்தான் கார் குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டார்கள் என இன்னொரு மாராட்டிய மாநில காவல்துறை அதிகாரி நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்திருக்கின்றார். இந்தக் கொலையைப் பற்றிய அறிக்கையை அவர் ஷோலாப்பூர் முதன்மை நீதிமன்றத்தில், டிசம்பர் 29, 2016 அன்று தாக்கல் செய்தார். இதை அவர் டைம்ஸ் நவ் என்ற தொலைக்காட்சிக்குத் தந்த பேட்டியிலும் குறிப்பிட்டார்.

இந்த அறிக்கையை ஷோலாப்பூர் முதன்மை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த காவல்துறை அதிகாரி மஃஹ்பூப் முஜாவர் இதனால் இப்போது இடைக்காலப் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். இவர் முன்னாளில் மாராட்டிய மாநிலத்தின் தீவிரவாத தடுப்புப் படையின் தலைவராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இதே பொறுப்பில்தான் ஹேமந்த் கர்கரே அவர்கள் கொலை செய்யப்படும்போது இருந்தார்கள்.

## உண்மையை மறைத்த காவல்துறை அதிகாரிகள்

முஜ்வார் நீதிமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கையில் மூன்று மாராட்டிய மாநில காவல்துறை அதிகாரிகள் இதனை இரண்டுபேர் விலேபார்லேவில் கொலை செய்யப்பட்டதை நன்றாக அறிவார்கள். அவர்களின் இருவர் பணி ஓய்வு பெற்றக் காவல்துறை (டி.ஜி. தரத்திலுள்ள) உயர் அதிகாரிகள். இன்னொருவர் இப்போதும் (2016/2017இலும்) பணியாற்றிக்கொண்டிருக்கும் அதிகாரி. அவரும் ஓர் ஐ.பி.எஸ்.தான் என்றும் இவர்கள் இந்த உண்மையை அதாவது சந்தீப் தாங்கே இராம்ஜி கல்சங்கரா ஆகிய இந்துத்துவ தீவிரவாதிகள் விலேபார்லேயில் கொலை செய்யப்பட்ட உண்மையை அனைத்து அரசு ஆவணங்களிடமிருந்து மறைத்துவிட்டார்கள் எனவும் கூறியுள்ளார். இதனை ஹிந்துஸ்தான் டைம்ஸ் என்ற பத்திரிகையும், தி இந்தியன் எக்ஸ்பிரஸ் மும்பையும் வெளியிட்டன. (Radiance 8-14 January -2017)

## முஷ்ரிஃப்-இன் சீரிய முயற்சி

2008ஆம் ஆண்டு நவம்பர் 26ஆம் நாள் தீவிரவாதிகளும் ஆடிய ஆட்டத்திற்கு அளவே இல்லை. இந்தத் தாக்குதலில் அவர்கள் பல குற்ற வாளிகளைத் தப்பிக்கவிட்டார்கள். இன்னும் பல குற்றவாளிகளைத் கொலை செய்தார்கள். இந்தக்




கொலைகளுக்குக் காரணம் அவர்கள் உயிரோடு இருந்தால் பல உண்மைகள் வெளியே வரும், காவல்துறை அதிகாரிகள் சிக்கிக்கொள்வார்கள்.

*26/11* : மும்பை ரயில் நிலையத்தில் தாக்கு தலை நடத்தியவர்கள், அதில் *24* முஸ்லிம்கள் உட்பட *46* பேரை கொலைச் செய்தார்கள். இந்துத்துவ தீவிரவாதிகள். இவர்கள் மராட்டிய மாநிலத்தின் "சத்தாரா" மாவட்டத்தைச் சார்ந்தவர்கள். இவர்களின் சிம்கார்டுகளுடன் செல்போனும் கிடைக்கவே செய்தன. அவர்கள் ஆர்.எஸ்.எஸ். என்ற அமைப்பைச் சார்ந்தவர்கள் என்பது வரைக்கும் கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் அதற்குமேல் அந்த விசாரணைச் செல்ல வில்லை.

### இதர குண்டு வெடிப்புகள்

அதேபோல் ஆந்திரப் பிரதேசம் ஹைதரா பாத்திலுள்ள மக்கா மஸ்ஜித் குண்டு வெடிப்பு, அஜ்மீர் ஷெரீஃப் குண்டுவெடிப்பு, ஷம்ஜவ்தா எக்ஸ்பிரஸ் குண்டுவெடிப்பு இப்படி இந்தியா வில் நடந்த பலநூறு குண்டுவெடிப்புகளுக்கு இராணுவத்திலுள்ள ஆர்.டி.எக்ஸ் வகை வெடி பொருள்கள் பயன்படுத்தப்பட்டன. அவற்றைக் கடத்திக்கொடுத்தவர் இராணுவ அதிகாரி கலோனல் பிரசாந்த் புரோகித்.

அதைக்கொண்டுவந்து குண்டு வெடிப்பு களில் பயன்படுத்தியவர்கள் சந்தீப் டாங்கேயும், இராம்ஜி கல்சங்கராவும்தான். இந்த உண்மை களெல்லாம் வெளியே வந்தவுடன் இந்த இரண்டு பேரையும் *26/11* மும்பைத் தாக்குதலையும் பயன்படுத்தி கொலை செய்துவிட்டார்கள்.

**இந்துத்துவ தீவிரவாதிகள் தங்களைச் சார்ந்தவர் களையே கொலை செய்பவர்கள். அதில் வல்லவர்கள்.**

அதபோல்தான் மாலேகோன் *2008* குண்டு வெடிப்பில் குற்றம் சாட்டப்பெற்றவர்களில் ஒருவர். பெண் சந்நியாசி பிரக்யர்சிங் தாக்கூர். இவர் தன் உற்ற நண்பனான சுனில் ஜோஷி என்பவரை ஓர் இரகசிய இடத்திற்கு வரச்சொல்லி கொலை செய்தார்.

காரணம் பிரக்யசிங்தாக்கூர் சுனில் ஜோஷி யுடன் இணைந்து பல குண்டு வெடிப்புகளையும், பல கொலைகளையும் செய்திருந்தார். ஜோஷிக்கு இந்த குண்டுவெடிப்புகள், கொலைகள் இவற் றைப் பற்றியும், பல இந்துத்துவ அமைப்புகளின் அந்தரங்கங்களை பற்றியும் நன்றாகத் தெரியும். அதனால் அவனைக் கொலை செய்தார்கள்.

சந்நியாசி பிரக்யா சிங்தாக்கூர் இப்போது இந்தக் கொலைக்காகவும் குற்றம் சாட்டப்பட்டு சிறையிலிருக்கின்றார்.

*2002* குஜராத் இனப்படுகொலைப் புகழ் மோடியும், குஜராத் ஆர்.எஸ்.எஸ். பிரச்சாரக் ஜோஷியை அழித்தார். ஹிரன்பாண்டியா என்ற தனது உள்துறை அமைச்சரைக் கொலை செய்தார். இப்படியே தான் இவர்கள் தங்கள் இந்து ராஷ்டிராவை நோக்கி நகர்ந்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இதில் *2008* மும்பைத் தாக்குதலில் எஸ்.எம். முஷ்ரிஃப் அவர்களின் கூற்றுகள் ஒவ்வொன்றாக உண்மைப்படுத்தப்பட்டு வருகின்றன என்பது தெளிவு.

**- எம்.ஜி.எம்**

# இந்தியாவின் உளவுத்துறைகள் செய்த தீவிரவாத இவற்றிற்காக உளவுத்துறைகளை முழுமையான

# அஜித் ஷாஹரியின் குற்றப்பத்திரிகை!

## தெஹெல்கா-மில்லிகெஜட் 16-30 செப். 2014

ஆகஸ்ட்–11, 2014 அன்று தி இந்தியின் எக்ஸ்பிரஸ் என்ற ஆங்கில நாளிதழ் "உச்ச நீதிமன்றம்விடுதலைசெய்துவிட்டது."ஆனாலும் அவர்கள் "காவல்துறை நடுநிசியில் கைது செய்து விடுமோ என அச்சப்படுகின்றார்கள்" என்ற தலைப்பில் கட்டுரை ஒன்றை வெளியிட்டது.

உச்ச நீதிமன்றம் விடுதலை செய்த அதாவது தீவிரவாதிகள் அல்ல என விடுதலை செய்த ஆறு பேரை சந்தித்தவன் என்ற அடிப்படையில் சில உண்மைகளை இங்கே தருகின்றேன்.

நான் சந்தித்த ஆறுபேருமே முஸ்லிம்கள், இவர்கள் ஆறு பேரும் குஜராத்தில் உள்ள அக்ஷர்தாம் என்ற கோயிலை தாக்கிட முயற்சி செய்தார்கள் என குற்றம் சுமத்தப்பட்டவர்கள். குற்றம் சுமத்தியவர்கள், துப்பாக்கித் தாக்கிய இரண்டு பாதுகாப்பு படையினர். இந்த அக்ஷர்தாம் கோயில் குஜராத்தின் தலைநகர் காந்தி நகரில் இருக்கின்றது.

இந்தக் கோயில் மீது 2002 ஆம் ஆண்டு செப்டம்பர் 24 ஆம் நாள் நடந்த தாக்குதலில் 33 பேர் கொல்லப்பட்டார்கள். இந்த 33 பேரையும் கொலை செய்தவர்கள் இந்த ஆறு முஸ்லிம்கள் என்பது குஜராத் காவல்துறையின் வழக்கு. குற்றப் பத்திரிகை. இதில் ஆதம் அஜ்மீரி என்பவர் தலையாய குற்றவாளி எனக் கூறப் பட்டார். கீழ்நீதி மன்றத்தால் மரண தண்டனை வழங்கப் பெற்றவர். இவரையும் ஏனைய குற்ற வாளிகளையும் 11 ஆண்டுகளுக்குப் பின் குற்ற மற்றவர்கள், அப்பாவிகள் என உச்ச நீதிமன்றம் விடுதலை செய்தது. விடுதலை செய்யப்பட்ட அன்று ஆதம் அஜ்மீரி பத்திரிகை களுக்குப் பேட்டி அளித்தார்.

இப்படி...

நான் ஜெயிலிலிருந்து வெளியே வந்து டெல்லியில் பத்திரிகைகளுக்குப்பேட்டி அளிக்க சென்றேன் வழியில்காவல் துறையினர் என்னை அழைத்துச் சென்றார்கள். அங்கு என்னை கேள்விக்கு மேல் கேள்வி கேட்டுத் துளைத் தெடுத்தனர். பின்னர் விட்டு விட்டார்கள்.

ஆனால் இரவில் மீண்டும் அழைத்தார்கள். தேவை இல்லாத கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். உச்ச நீதிமன்றத்தால் விடுதலைச் செய்யப்பட்டு சிறையிலிருந்து வெளியே வந்தவரிடம் அக்ஷர்தாம் தாக்குதல் எப்படி திட்டமிடப்பட்டது எனத் திரும்பத் திரும்பக் கேட்டு கொண்டிருந்தார்கள். அந்தக் காவல்துறையினரை எதிர்கேள்விக் கேட்டபோது குற்றத்திலிருந்து விடுவிக்கப்பட்டவர்களிடம் அந்தக் குற்றத்தைப் பற்றி விசாரிப்பது ஒரு வழக்கம், அதுவும் சட்டப்படியானதே என்றே வாதிட்டார்கள்.

அதன்பின் இரண்டு நாட்கள் கழித்து மீண்டும் அழைத்தார்கள். இன்னும்இரண்டு நாள் கழித்து, என் மனைவியை அழைத்து நான் என்ன செய்து கொண்டிருக்கிறேன் என விசாரித்து இருக்கின்றார்கள் காவல்துறையினர். இந்தக் கெடுபிடியிலிருந்து விடுதலையே இல்லை.

இவரைப்போல் இன்னொருவர், அவரு டைய பெயர் ஹையூம் (முழுப் பெயர் முப்தி

# செயல்கள், குண்டு வெடிப்புகள் விசாரணைக்கு உட்படுத்த வேண்டும்...



ஸ்ரீஅஜித்ஷாகி

அப்துல் ஹையூம் மன்சூலி (எ) முக்தி பாபா) இவரும் 11 வருடங்கள் சிறையிலிருந்தவர். இவருக்கும் இறந்துபோன தீவிரவாதிகளுக்கும் தொடர்பிருந்தது என்பது காவல்துறையின் குற்றச்சாட்டு.

இந்த இறந்துபோன தீவிரவாதிகள், காவல் துறையினரால் என்கவுண்டர் என்ற பெயரில் கொலை செய்யப்பட்டவர்கள். ஹையூம் அவர்களுக்கும் காவல் துறையினரால் கொலை செய்யப்பட்டவர்களுக்கும் இடையே தொடர்புகள் உண்டு என்பதற்கு காவல்துறையினர் சமர்பித்த ஆதாரம் ஹையூம் அவர்களால் எழுதப்பட்ட கடிதங்கள், கொலை செய்யப்பட்டவர்களின் சட்டைப் பைக்குள் இருந்ததாகக் கூறப்பட்டது. இதற்கு காவல்துறையினர் சாட்சியங்களை சமர்பித்தார்கள். "கீழ்" நீதிமன்றங்கள் சாட்சியத்தை எற்றுக்கொண்டு கையூம் அவர்களுக்கு மரண தண்டனை வழங்கின.

ஆனால் உச்ச நீதிமன்றம் இதனை ஏற்றுக் கொள்ளவில்லை. மாறாக உச்ச நீதிமன்றம் இறந்தவர்களின் உடல்களில் ஏராளமான குண்டுகள் பாய்ந்திருந்தன. அவை இரத்தம் சேறு இவற்றில் தோய்ந்திருந்தன.

ஆனால் அவர்களிடமிருந்து எடுக்கப்பட்டதாகக் கூறப்படும் கடிதங்கள் புதியதாகவும், இரத்தமோ, சேறோ படியாததாகமிருந்தன. அதனால் இந்தக் கடிதங்களை இறந்தவர்களின் கைகளிலிருந்துதான் எடுத்தீர்கள் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

கொல்லப்பட்டவர்களின் உடல்களைச் சல்லடையாகத் துளைத்த குண்டுகள் கடிதங்களை கசங்காமல் ஆடைபோல் வைத்திருக்கின்றனவோ அது எப்படி? எனக்கேட்டது உச்ச நீதிமன்றம். (அடிக்குறிப்பு 1–ஐ பார்க்கவும்)

**இன்னொரு குற்றவாளி அல்தாப் மாலிக் :**

இதேபோன்றுதான் அல்தாஃப் மாலிக்கின் கதையும் இவர் 2008 ஆம் ஆண்டுதான் சிறையிலிருந்து விடுதலைச் செய்யப்பட்டார். இவர் அண்மையில் மும்பை வந்திருந்தார். இவரும் முஃப்தி ஹையூம், ஷேக் அஜ்மீரி ஆகியோருடன் சிறையிலிருந்தவர். இவர் மும்பைக்கு இவர்களுடனேயே வந்திருந்தார். இவர்களைக் கொண்டு ஜம்மிய்யத் –இ–உலமா–இ–ஹிந்து என்ற அமைப்பு ஒரு பத்திரிகையாளர்கள் சந்திப்புக்கு ஏற்பாடு செய்திருந்தது. அவர் இங்கே பத்திரிகையாளர்கள் சந்திப்பில் இருந்தபோது, அவருடைய மனைவியிடம் சென்று உங்கள் கணவனை எங்கே எனத் தொடங்கி பல அசிங்கமான கேள்விகளைக் கேட்டுள்ளார்கள். இதனால் நொந்துபோன அல்தாஃப் மாலிக் என்னிடம் (தெகல்காவிடம்) இப்படிக் கூறினார்.

"நாங்கள் குற்றமற்றவர்கள் என உச்ச நீதிமன்றம் மிகவும் தெளிவாகக் கூறிவிட்டது. அப்படியிருந்தும் இந்தக் காவல்துறை எங்களை விடாமல் துரத்தி வருகின்றது" இந்த அக்ஷர் தாம் கோயில் தாக்குதலில் குற்றம் சுமத்தப்பட்டவர்கள் அனைவரும் ஷாபூர் என்ற ஊரைச் சார்ந்தவர்கள். நான் ஷாபூர் காவல்துறை துணை கண்காணிப்பாளர் தேசாய் அவர்களைச் சந்தித்தேன். அவரிடம் மாலிக் –ஐ அடிக்கடி அழைத்து அனாவசியமான கேள்விக் கேட்பதைப் பற்றிக் கேட்டேன் அதற்கவர், ஆமாம் நாங்கள் அவரை அடிக்கடி அழைத்து பேசிடத்தான் செய்கின்றேன். அப்படி அழைத்து வழக்கைப் பற்றிய விவரங்களைக் கேட்பது நாங்கள் கடைபிடித்திட வேண்டிய நடவடிக்கைகளுள் ஒன்றுதான் என்றார்.

இதுபோன்ற குற்றவாளிகள் மீது ஒரு கண் வைத்துக் கொள்ள வேண்டும் என எங்கள்



மேல்மட்ட அதிகாரிகளால் ஆணையிடப்பட்டுள்ளோம் எனக் கூறினார்கள்.

நான் என்னுடைய வாதங்களை வாசகர்கள் முன் சமர்ப்பிக்கும் முன் ஒரு விஷயத்தின் பக்கம் வாசகர்களின் கவனத்தைத் திருப்பிட விரும்புகிறேன். அது இந்த காவல்துறை அதிகாரிகள் இந்த அப்பாவிகளைக் குறிப்பிடப் பயன்படுத்திடும் சொல்தான். உச்ச நீதிமன்றத்தால் அப்பாவிகள் என விடுவிக்கப்பட்டவர்களை இந்த அதிகாரிகள் குற்றவாளிகள் என்றே அழைக்கின்றார்கள்.

உச்ச நீதிமன்றத்தால் குற்றமற்றவர்கள் என விடுவிக்கப்பட்ட (aquitted) அப்பாவிகள் 6 பேரையும் அந்த டி.எஸ்.பி. குற்றவாளிகள் என்றே அழைக்கின்றார். அதேபோல் உச்ச நீதிமன்றம் குற்றமற்றவர்கள், அப்பாவிகள் என அறிவித்துத் தீர்ப்பும் வழங்கிவிட்டவர்களை வெளியே வந்து விட்டவர்கள் (Released) என்றறே அழைக்கின்றார்.

அதேபோல் அவர் என்னிடம் சொன்ன கடைசி பதிலும் அதில் பயன்படுத்தப்பட்ட சொற்களும் கனமானவை, கண்டனத்திற்குரியவை. அந்த வரிகள் எங்கள் மேல்மட்ட அதிகாரிகள், இதுபோன்ற குற்றவாளிகளிடம் ஓர் கண் வைத்து கொள்ள வேண்டும் எனக்கூறியுள்ளார்கள் என்பவையே அது. அதாவது மேல்மட்ட அதிகாரிகளும், மட்டமாகவே நடந்து கொள்கின்றார்கள்.

உண்மையைச் சொன்னால் இவர்கள் உச்ச நீதிமன்ற தீர்ப்பை கருத்தில் கொள்ளவே இல்லை. அதாவது மதிக்கவே இல்லை. உளவுத்துறையின் நிழலில் சிக்கிக் கொண்டால், உச்ச நீதிமன்றம் குற்றவாளி அல்ல அப்பாவி என நற்சான்றிதழ் வழங்கினாலும், அவர்கள் வாழ்நாள் முடிய குற்றவாளிகள் என்றே நடத்தப்படுகின்றார்கள். இந்த நிலையை நாம் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்.

அக்ஷாதாம் கோயில் தாக்குதல் மீதான உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு என்று வந்தது என்பது குறிப்பிடத் தக்கது. அது மே 16, 2014 அன்றுதான் வந்தது. இந்த நாளில்தான் முன்னாள் குஜராத் முதலமைச்சர் நரேந்திர மோடி இந்தியாவின் பிரதமராக அறிவிக்கப்பட்டார்.

உன் விருப்பம்?

ஐந்து நாட்களுக்குப் பின் இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளேடு, இப்படி எழுதியது. "குஜராத் காவல்துறையினர், அவனுக்கு பல்வேறு" "Choice" விருப்பங்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமையை வழங்கிற்று. ரெயில் எரிப்பு வழக்கில் தான் குற்றவாளி என்று ஏற்றுக்கொள்ளலாம். அல்லது ஹிரன் பாண்டிய என்ற முன்னாள் குஜராத் உள்துறை அமைச்சரை கொலை செய்த வழக்கில் தன்னை குற்றவாளியாக ஆக்கிக் கொள்ளலாம். அல்லது அக்ஷாதாம் கோயில் தாக்குதல் வழக்கில் தன்னை குற்றவாளியாக ஆக்கிக் கொள்ளலாம்?

இந்த விருப்பங்கள் காவல்துறையின் மிகவும் கோரமான மனநிலையை எடுத்துக் காட்டுகின்றது. ஆனால் கடைசியில் இந்த வாய்ப்புகளெல்லாம் இன்னொருவருக்கு வழங்கப்பெற்ற முஹம்மத் சலீம் என்றவருக்கு மரண தண்டனை வழங்கப்பெற்றது.

"பொடா" சட்டத்தின் கீழ்

ஆனால் மோடி இந்தியாவின் பிரதமரான மே 16 ஆம் நாள் சலீம்–ஐயும் இன்னும் ஐந்து பேரையும் உச்ச நீதிமன்றம் விடுதலை செய்தது. தீர்ப்பில் உச்ச நீதிமன்றம் குஜராத் காவல்துறை அப்பாவிகளை வழக்குகளில் சிக்க வைத்திருக்கின்றது. இது கண்டனத்திற்குரியது எனக் குறிப்பிட்டது. அத்தோடு குஜராத் இன் உள்துறை அமைச்சர் கண்ணை மூடிக்கொண்டு அநியாயத்தைச் செய்திருக்கின்றது என்றும் கூறியது. இந்த அநியாயத்தைச் செய்திடும்போது குஜராத் இன் உள்துறை அமைச்சகம் மோடியின் பிடியில் – மோடியின் கீழ்தான் இருந்தது. ஆன

ால் அந்த அநியாயங்களில் சிக்கிய அப்பாவிகள் வெளியே வந்திடும்போது குஜராத் உள்துறை அமைச்சர் மோடி இந்தியாவின் பிரதமர் என்னே வெட்கக் கேடு! (அடிகுறிப்பு 3−ஐப் பார்க்கவும்)

நான் சவூதி அரேபியாவில் 13 ஆண்டுகள் வேலை செய்து கொண்டிருந்தேன். என்னை அவர்கள் ஒருநாள் அழைத்தார்கள். காரணம் கேட்டேன், என் பாஸ்போர்ட்டில் − கடவுச் சீட்டில் பிரச்சனைகள் இருக்கின்றன என்றார் கள். என்னை மூர்க்கத் தனமாக அடித்தார்கள். என் முதுகில் இன்னும் அந்த காயங்கள் இருக் கின்றன. என் கால்களை முறித்தே போட்டார் கள். அவர்கள் என்னிடம் எந்த வழக்கில் உன்னை இணைக்க வேண்டும் என்று நீயே சொல், ஆஷ்காதாம் கோயில் வழக்கில் உன்னை இணைக்க வேண்டுமா? அல்லது ஹரன் பாண்டி யாவை கொலை செய்த வழக்கில் உன்னை இணைக்க வேண்டுமா? அல்லது கோத்ரா ரெயில் எரிப்பு வழக்கில் உன்னை இணைக்க வேண்டுமா? எதை விரும்புகின்றாயோ அதில் உன்னை இணைத்துக் கொள்கின்றோம். இனி உன் விருப்பத்திற்கு விட்டு விடுகின்றோம். என க்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. (அடிக்குறிப்பு 4−ஐ பார்க்கவும்)

### சலீம் மகளை சந்தித்தார்

இதே அக்ஷாதாம் கோயில் தாக்குதலில் கைது செய்யப்பட்ட சலீம் 11 ஆண்டுகள் கழித்தே தனது மகளைச் சந்திக்க முடிந்தது. அவன் கைது செய்யப்பட்டு நான்கு மாதம் கழித்துதான் அவள் பிறந்தாள். அந்த மகளை அவன் முதன் முதலாகப் பார்த்தபோது அவளுக்கு வயது 11.

### அழிந்தது வாழ்க்கை?

அப்துல் ஹையூர் முஃதி சாஹிப் இன் உலகம் அவர் சிறைப்பட்டிருந்த 11 ஆண்டுகளுக்குள் முற்றாக சீரழிந்து போய்விட்டது. மகளை மீட்க மேற்கொண்ட முயற்சியில் தந்தை இறந்து போனார். அவருடைய குடும்பம் அவருடைய வீட்டார்கள். சொந்த கிராமத்தை விட்டு ஓடிப்போனார்கள். உச்ச நீதிமன்றம் தீர்ப்பைப் பற்றிக் கேமட்டபோது சிறையிலிருந்து விடுவிக் கப்பட்டது என்பது நீதி கிடைத்துவிட்டது என்பது தகாது. கடந்த 11 ஆண்டுகளாக ஒவ்வொரு மணித்துளியிலும் நீதி புதைக்கப்பட் டது. அவர்கள் நித்தம் நித்தம் செத்துப் பிழைத்துக் கொண்டிருந்தார்கள்.

ஹையூம் மீதான குற்றச்சாட்டு என்னவெனில் காவல்துறையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட அந்த முஸ்லிம் இளைஞர்களிடமிருந்து கைப் பற்றப்பட்ட இரண்டு கடிதங்களையும், எழுதி யவர் அவர்தான் என்பதே! காவல்துறையின ரால் என்கவுண்டர் என்ற பெயரால் கொலை செய்யப்பட்ட அந்த முஸ்லிம் இளைஞர்கள், அக்ஷர்தாம் கோயில் மீது தற்கொலை படை தாக்குதலை நடத்தியவர்கள் என்பதே காவல் துறையினரின் ஜோடனை. கற்பனைக் கதை.

### தூங்க விடவில்லை

ஹையூம் கூறுகின்றார்... மூன்று நாட்கள் ஹையூம்−ஐ காவல்துறையினர் தூங்கிட அனுமதிக்கவில்லை. ஒரு கடிதத்தை தந்து அந்தக் கடிதத்தில் இருப்பதை வளைவு, நெளிவு, பிசுங்காமல் அப்படியே எழுதிக் தந்திட வேண்டும் எனக் கட்டாயப்படுத்தினார்கள். என்னை தூங்க விடாமல் இதைச் செய்திட வேண்டும் எனக் கொடுமைப்படுத்தினார்கள். என்னை துன்புறுத்தியதால் நான் அதேபோல் செய்திட வேண்டியவனானேன். பின்னர் காவல் துறையினர் நீதி மன்றத்தில் நான்தான் அந்த கடிதத்தை எழுதினேன் என வாதித்தனர். வாழ்க்கையைப் பாழாக்கினார்கள்.

### யார் தாக்குதலை நடத்தியது?

இப்படி அப்பாவிகள் பலர் தங்கள் வாழ்க் கையையும் தங்கள் குடும்பத்தின் வாழ்க்கையை யும் பறிகொடுத்துள்ளார்கள். பதினொரு ஆண்டு களுக்குப் பின்னால் அவர்கள் விடுவிக்கப்பட்டுள் ளார்கள். அவர்களுக்கும் அந்த அக்ஷர்தாம் கோயில் தாக்குதலுக்கும், எந்தச் சம்மந்தமு மில்லை என உச்ச நீதிமன்றம் உறுதியாகக் கூறிவிட்டது. இந்நிலையில் ஒரு கேள்வி நம் முன் அந்தத் தாக்குதலை நடத்தியது யார்?

பல தீவிரவாத தாக்குதல்கள் இவற்றில் மீண்டும் மீண்டும் முஸ்லிம்கள் கைது செய்யப் படுகின்றார்கள். எல்லாவகையான சித்திரவதை களுக்கும் உள்ளாக்கப்படுகின்றார்கள். பல ஆண்டுகள் சிறையிலேயே இருக்கின்றார்கள். பின்னர் “கீழ்” நீதிமன்றங்களால் அல்லது உயர் நீதிமன்றங்களால் அல்லது உச்ச நீதிமன்றத்தால் விடுதலைச் செய்யப்படுகின்றார்கள்.

### ஹரன் பாண்டியா

இதில் மிகவும் கோரமான வழக்கொன்று உண்டு. அது முன்னாள் குஜராத் உள்துறை அமைச்சர் ஹரன் பாண்டியாவின் கொலை வழக்கு. 2003 ஆம் ஆண்டு இவர் கொலை செய்யப்பட்டார். ஹரன் பாண்டியாவும் மோடியைப் போலவே ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க. போன்ற அமைப்புகளை வளர்த்தவர். மோடியை கேள்வி கேட்கவும், சவால் விடவும் தகுதிபெற்ற ஒரே ஆள். தன்னைப்போல் ஒருவர் ஆளுமையும் ஆற்றலும் பெற்றவராக இருப்பது மோடிக்குப் பிடிக்கவில்லை தீர்த்துக் கட்டிவிட்டார். அவர் ஹரன் பாண்டியா கொலை செய்யப்பட்டபோது அவருடைய தந்தை வெளிப்படையாகவே மோடியைக் குற்றம் சாட்டினார். (அடிக்குறிப்பு 5–ஐ பார்க்கவும்)

ஆனால் குஜராத் காவல்துறை ஹரன் பாண்டியாவைக் கொலை செய்ததாக பல முஸ்லிம்களைக் கைது செய்தது. கீழ் நீதிமன்றம் அத்தனை முஸ்லிம்களையும் குற்றத்தைச் செய்தவர்கள் எனக்கூறி தண்டனை வழங்கியது. ஆனால் குஜராத் உயர்நீதிமன்றம் அவர்கள் அத்தனை பேரையும் குற்றவாளிகள் அல்ல எனக் கூறி விடுதலை செய்தது. இதற்குள் எட்டு ஆண்டுகள் விரைந்து ஓடிவிட்டன.

இங்கே கேள்வி என்னவெனில் ஹரன் பாண்டியாவை யாரும் கொலை செய்ய வில்லையா? அவரைப் பிணமாக்கியது யார்?

### முஸ்லிம்கள் என்றால் பிணை இல்லை

அதேபோல் இந்தியாவின் பல நகரங்களில் குண்டுகள் வெடித்திருக்கின்றன. இவற்றில் எல்லாம் அப்பாவி முஸ்லிம்கள் கைது செய்யப் பட்டிருக்கின்றார்கள். எல்லா விதமான சித்திர வதைகளுக்கும் உள்ளாக்கப்பட்டிருக்கின்றார் கள். வாழ்நாளையும், குடும்பத்தையும் தொலைத்தபின் வெளியே விடப்பட்டிருக் கின்றார்கள். இதனிடையே அவர்களுக்குப் பிணை (எ) ஃபெயில் கூட கிடைக்கவில்லை. ஆனால் பல குண்டு வெடிப்புகளை நடத்திய இந்துத்துவ தீவிரவாதி சுவாமி அசிமானந்தா பிணை பெற்றார். அதற்கு நீதிமன்றம் சொன்ன பதில், அவர் குண்டு வைத்த நிகழ்வுகள் ஏராளம், ஏராளம், அவை அனைத்திலும் விசாரணை முடிய பல ஆண்டுகள் ஆகும். அதனால் அவரைப் பிணையில் விடுகின்றோம் என்பதே.

### கோவை குண்டு வெடிப்புகள்

இன்னொருவழக்கைப்பாருங்கள்1998–ஆம் பிப்ரவரி மாதம் கோயம்புத்தூரில் நடந்த குண்டு வெடிப்புகள். இதில் 65 பேர் இறந்தார்கள். இந்தக் குண்டு வெடிப்புகள், பாரதிய ஜனதா கட்சித் தலைவர்களுள் ஒருவரான எல்.கே. அத்வானி அவர்கள் கோயம்புத்தூருக்கு வர விருந்த நேரத்தில்தான் நிகழ்ந்தன. இந்த குண்டு வெடிப்புகள் நிகழ்ந்த நேரம் நாடு அடுத்த நடுவன் அரசை தேர்ந்தெடுத்திருந்த நேரத்தில் நடந்தது. முடிவில் பாரதீய ஜனதா கட்சிதான் ஆட்சியில் அமர்ந்தது.

இந்தக் குண்டு வெடிப்புகளில் குற்றம் சாட்டப்பட்டவர்களில் மிகவும் முக்கியமானவர் அப்துல் நாசர் மதானி. இவர் கேரள மாநிலத்தில் மிகவும் பிரபலமான தலைவர்களுள் ஒருவர். அவர் ஒன்பது ஆண்டுகள் சிறையிலிருந்தார். இதனிடையே அவர்மீது வெடிகுண்டை வீசினார்கள். அதில் அவர் தன் கால்களில் ஒன்றை இழந்தார். இதனால் அவர் சக்கர நாற்காலியில் மட்டுமே நகர முடிந்தவராக ஆனார். கோவை குண்டுவெடிப்பு வழக்கின் இறுதியில் அவர் விடுவிக்கப்பட்டார். கோயம்புத்தூர் குண்டு வெடிப்புகள் யார் சதியின் கீழ் நடத்தினார்கள் என்பது கண்டுபிடிக்கப்படவே இல்லை. அங்கே யாரும் செய்யவில்லை. அதனால் கோயம்புத் தூரில் குண்டுகளே வெடிக்கவில்லை என எடுத்துக்கொள்ளலாமா? கோவை குண்டு வெடிப்பு வழக்கில் விடுதலையான மதானியை வேறொரு வெடிகுண்டு வழக்கில் சேர்த்து விட்டார்கள் சிறையிலடைத்துவிட்டார்கள். இந்த முறை 2010–ல் பெங்களூரில் நடந்த குண்டு வெடிப்பைக் காரணம் காட்டினார்கள் (அடிக்குறிப்பு 6–ஐ பார்க்கவும்)

இந்த வழக்கிலுள்ள குற்றப் பத்திரிகையைப் படித்தவன் என்ற அளவிலும், குற்றவாளி தரப்பில் வைக்கப்படும் வாதங்களையும் படித்தவன் என்ற அளவிலும் நான் அறுதியிட்டுக்கு கூறுவேன், இந்த வழக்கிலும் அவர் விடுவிக்கப்படுவார்.

### அந்த மர்ம சக்திகள்

இங்கே நாம் கவனிக்க வேண்டியது என்ன வெனில் இந்த வெடிகுண்டு வழக்குகளி

ளெல்லாம் யாரும், குற்றவாளிகள் எனக் கண்டு பிடிக்கப்படவில்லை என்றால் இந்த குண்டு வெடிப்புகளுக்குப் பின்னால் யார், யார் இருக் கின்றார்கள்.

இந்தக் காலக்கட்டத்தில்தான் செய்திகளைச் சேகரிக்கும், பத்திரிகையாளர்களாகிய நாமும், மனித உரிமை ஆர்வலர்களும் நாட்டு நலனில் அக்கறையுள்ளவர்களும் ஒரு கேள்வியை முன் வைக்கின்றோம். அது இத்தனை குண்டுகளையும் வைத்து வெடிக்கச் செய்து அப்பாவி இந்துக் களையும் முஸ்லிம்களையும் கொலை செய்து கொண்டிருப்பவர்கள் யார்?

இந்தக் கேள்வியோடு நாம் இன்னொரு கேள்வியையும, முன் வைக்கின்றோம். அது, காவல்துறையின் பல்வேறு கரங்களும் இந்த குண்டு வெடிப்புகளை நடத்துகின்றனவா? இதில் இரகசியமாகச் செயல்படும் காவல்துறையின் உளவுத்துறை, யாருக்கும் பதில் சொல்லிட வேண்டாம் என்ற நிலையில் நம் நாட்டில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் மத்திய உளவுத் துறை இவைதான் இந்தக் குண்டு வெடிப்புகளை நடத்திக் கொண்டிருக்கின்றனவா?

இப்படி வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்வதன்மூலம், அவர்களால் லட்சக்கணக்கான இந்திய குடிமக்களை தொடர்ந்து பீதியிலேயே வைத்துக் கொண்டிருக்கலாம். இதனால் நாட்டில் கொண்டு வரப்படும், குரூரமான ஆட் தூக்கிச் சட்டத்தை இந்தக் குடிமக்கள் எதிர்க்க மாட்டார்கள். இந்த கொடுமையான சட்டங் களைப் பயன்படுத்தி அப்பாவி முஸ்லிம் இளை ஞர்களை ஆண்டாண்டு காலமாக சிறையில் வைத்திடலாம். இது சரியல்ல. திட்டமிட்ட ஓர் நீண்டகால சதி, முஸ்லிம்களை பூண்டோடு ஒழிக்கும் திட்டம்.

**பாதுகாப்பு வியாபாரம்**

நாட்டின் பாதுகாப்பு ஒரு பெரிய வியாபாரம். அது கோடிக்கணக்கான கோடி..?? மையமாகக் கொண்டது. (அடிக்குறிப்பு 7–ஐ பார்க்கவும்)

அமெரிக்காவில் காவல்துறையினருக்கும், பொதுமக்களுக்கும் இடையே ஏற்பட்ட ஆயுதங்கள் தரப்பட்டிருந்தது என்று பட்ட வர்த்தனமாகத் தெரியவந்தது. அதே போன்ற தொரு நடவடிக்கை இந்தியாவிலும் மேற்கொள் ளப்பட்டு வருகின்றது. இஸ்ரேலிய கம்பெனிகள், ஐரோப்பிய கம்பெனிகள், அமெரிக்க கம்பெனிகள் ஆகியவை தங்கள் விற்பனை பிரதிநிதிகளுடன் உள்நாட்டு பாதுகாப்பு தளவாடங்களை வாங்கிடச் செய்ய.

இந்தியாவின் பி & சி நகரங்கள் கூட (அடிக்குறிப்பு 8–ஐ பார்க்கவும்) பைகளுக்குள் இருப்பவற்றைக் கண்டறியும் கருவிகள் குடிமக் களின்உடல்களைச்சோதனைசெய்யும்கருவிகள், எக்ஸ்ரே என்ற ஊடுகதிர் சோதனை கருவிகள், CCTV போன்றவற்றை வாங்குகின்றன. மக்கள் அனைவரும்கண்காணிக்கப்படுகின்றனர். (அடிக் குறிப்பு 9–ஐ பார்க்கவும்) இவற்றை வாங்கிடும் கோடிக்கணக்கான ரூபாய்களுக்கு ஒப்பந்தம் விடப்படுகின்றது.

**குண்டு வெடிப்புகளைத் தடுக்க**

காவல்துறை, உளவுத்துறை, பாதுகாப்புப்



படையினர் இவர்களையெல்லாம் குண்டு வெடிப்பு விவகாரங்களில் ஒரு முழுமையான விசாரணைக்கு உட்படுத்திட வேண்டும். இப்படி ஒரு விசாரணைக்கு இவர்கள் உட்படுத்தப்பட வேண்டும் என்பதற்கான அழுத்தமான காரணங் களுள் ஒன்று. குஜராத் இல் நடந்தவை. இங்கே – குஜராத்தில் முஸ்லிம்களை என்கவுண்டர், எதிர் தாக்குதல் என்ற போர்வையில் கொலை செய் தார்கள். பின்னர் அத்தனையும் காவல்துறையின ரே திட்டமிட்டு செய்த கொலை என்று

நிரூபிக்கப்பட்டது. இந்த என்கவுண்டர் என்ற படுகொலைகளில்சமர்ப்பிக்கப்பட்ட மோடியின் வலது கரம் எனக் கருதப்படும், அமித்ஷாவின் பெயரும் இடம் பெற்றிருக்கின்றது.

மத்திய புலனாய்வுத்துறை CBI - Central Bureau Investigation தான் இந்த போலி என் கவுண்டர்களைப் புலனாய்வு செய்து வருகின் றது. இதில் இந்தப் புலனாய்வுத்துறை உளவுத் துறையிலுள்ள பல அலுவலர்களுடையப் பெயரைக் குறிப்பிட்டுள்ளது. இன்னும் இந்த வழக்குகள் முடியவில்லை. ஆனால் இந்த வழக்குகளின் சாட்சியங்கள் சூழ்நிலைகள் இவையெல்லாம் இந்த எதிர்தாக்குதல்கள் போலி யானவை என்பன நிரூபித்துவிட்டன. (பார்க்க அடிகுறிப்பு –10)

இதேபோல் இந்தியாவின் இதர பகுதி களில் நடந்த என்கவுண்டர்கள் என்ற படுகொலை களிலும், உளவுத்துறை, காவல்துறை இவற்றின் கைகள் அழுத்தமாக இருக்கின்றன. இதற்கான அத்தாட்சிகள் இருக்கின்றன. இவையும் உளவுத் துறை காவல்துறை, பாதுகாப்பு படையினர் இவற்றின் செயல்பாடுகளை – குண்டு வைப்பு களை, படுகொலைகளை ஒரு முழுமையான விசாரணைக்கு உட்படுத்தி வேண்டும் என்பதை உறுதி படுத்துகின்றன.

## குஜராத் காவல்துறையின் சதி

குஜராத் இல் 2002 ஆம் ஆண்டில் முஸ்லிம் களைக் கொன்றொழிக்கும் இனப்படுகொலை கள் நடந்தன. அதன்பின் குஜராத்–ஐ சார்ந்த காவல்துறையினர் தங்களுக்குள் ஓர் அணியை அமைத்துக்கொண்டு முஸ்லிம் தீவிரவாதிகளைத் தேடுகின்றோம் என்ற போர்வையில் அஹ்மதா பாத் – நகரிலுள்ள முஸ்லிம் இளைஞர்களைக் குறிவைத்துக் கொண்டே இருந்தனர். அஹ்மதாபாத் முஸ்லிம்கள் அதிகமாக வாழும் குஜராத்–இன் மிகப்பெரிய நகரமாகும். குஜ ராத் காவல்துறையின் இந்த அணி மோடியைக் கொலை செய்ய லஷ்கரே தொய்பா என்ற அமைப்பு முயற்சி செய்து ஆட்களை அனுப்பிக் கொண்டிருக்கின்றது என்றொரு பொய்யை பரப்பிக்கொண்டே இருந்த. இந்தப் பொய்யின் அடிப்படையில் பலரைக் கொலை செய்தார்கள்.

ஷம்ஸ் பத்தான் என்ற வழக்கறிஞர் இது போன்ற கொலைகளில் அரசுக்கு எதிராக வழக்காடிக் கொண்டிருந்தார். அன்று வரை 17 பேர் இப்படிக் கொலை செய்யப்பட்டிருந் தார்கள். கடைசியாக துல்சி பிரஜாபதி என்பவர் கொலை செய்யப்பட்டார். அந்நிலையில் என் கவுண்டர்கள் எல்லாமே குஜராத் காவல் துறை யினர் செய்த படுகொலைதாம் என்று வெளிச் சத்திற்கு வந்தது. (பார்க்க அடிக்குறிப்பு–11)

இவற்றுள் மிகவும் பிரபலமானது. இஷ்ரத் ஜஹான் கொலை வழக்கு, இந்தப் படுகொலை ஜூன்–2004 ஆம் ஆண்டு அஹ்மதாபாத்–இல் வைத்து நடந்தது. அவள் ஒரு காரில் இன்னும் மூன்று பேரோடு பயணம் செய்து கொண்டி ருந்தாள். அனைவரும் கொலை செய்யப்பட் டார்கள். இந்தக் கொலையைப் பற்றிய விசாரணை அதை போலி என்கவுண்டர் எதிர் தாக்குதல் என 2009 ஆம் ஆண்டில் அறிவித்தது.

பின்னர் இந்த வழக்கு குஜராத் உயர் நீதிமன்ற த்திற்குச் சென்றது. குஜராத் உயர்நீதி மன்றம், ஒரு சிறப்புப் புலனாய்வுக் குழுவை நியமித்தது. (SIT - Speical Investigation Team) இந்தச் சிறப்புப் புலனாய்வுக் குழுவும் அந்த என்கவுண்டர் என்ற எதிர் தாக்குதல் போலியானது என்று முடிவு செய்தது.

பின்னர் குற்றப்பத்திரிகைத் தாக்கல் செய்யும் பொறுப்பு சி.பி.ஐ. என்ற மத்தியப் புலனாய்வுத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டது. மத்தியப் புலனாய்வுத் துறையும் அவை அப்பட்டமான படுகொலைகள் என்றன.

## விடைதேடும் வினாக்கள்

இந்த உண்மைகளெல்லாம் நம்மை இப்படி கேட்க வைக்கின்றது. உண்மையிலேயே இந்தக் காவல்துறையினர்தாம் கொலை செய்கின்றார்கள் என்றால் பாகிஸ்தான்–லஷ்கரே தொய்பா என்பவையெல்லாம் நம்மவர்கள் விடும் புருடா தானே!

இங்கே இன்னொரு கேள்வியும் எழுகின்றது, இந்த தீவிரவாதிகள் ஏன் தங்களுக்கு அதிகமாக அநீதி இழைப்பவர்களைத் தாக்குவதில்லை.

டெல்லி காவல்துறையின் சிறப்புப் பிரிவு அப்பாவி முஸ்லிம்களைச் சிறையில் அடைக்க பல பொய் சாட்சியங்களை உருவாக்கி இருக் கின்றார்கள், எத்தனையோ பொய், ஆவணங் களை உருவாக்கி இருக்கின்றார்கள். இவர்கள்

மீதெல்லாம் வராத கோபம், ஏன் அப்பாவி மக்கள் மீது வருகின்றது.

உண்மையிலேயே தீவிரவாதிகள் அல்ல, இந்த தீவிரவாத தாக்குதல்களை நடத்துபவர்கள், மாறாக நமது அரசிடம் பணிபுரியம் சம்பளம் வாங்கும் இவர்கள்தாம். (இவையெல்லாம் பகுத் தறிவு நம்மிடம் கேட்கச் சொல்லும் கேள்விகள், அல்லாமல் யாரையும் யாரும் தாக்கிட வேண்டும் என்பதல்ல நமது நோக்கம்) முஸ்லிம்களைச் சிறையில் அடைக்க எப்படியெல்லாம் காவல் துறையினர் பொய் சாட்சியங்களை உருவாக்கு கிறார்கள் என்பதை ஒரு ஆய்வறிக்கையில் உலகறிய தந்துள்ளார்கள் ( பார்க்க அடிக் குறிப்பு – 12)

நீங்கள் மாவோயிஸ்ட்டுகள் என்ற கிளர்ச்சி யாளர்களின் பகுதியாகிய சத்தீஷ்கர் பகுதியில் பயணம் செய்தால், ஒன்றை அவசியம் கவனிக்கலாம். அங்குள்ள காவல் நிலையங்கள் பயங்கரமான பாதுகாப்பிற்குள் இருப்பதைக் காணலாம். பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பார்த்தால் அந்தக் காவல்துறையினர் ஓர் நோக்கத்திற்குள் இருப்பதைபோல் உணர்வீர்கள்.

ஆனால் டெல்லி காவல்துறையோ நாட்டின் இதரப் பகுதியிலுள்ள காவல்துறை யோ தங்களுக்குத் தீவிரவாதிகளிடமிருந்து பாதுகாப்பு வேண்டும் எனக் கருதவில்லை. காரணம் இங்கெல்லாம் இவர்கள்தாம் தீவிரவாத செயல்களின் காரிய கர்த்தாக்கள். அவர்களே அவர்களைத் தாக்கிக் கொள்ள மாட்டார்கள் என்பது தானே உண்மை.?

அடுத்து குண்டு வெடிப்புக்கள் நடக்கும் காலங்கள் – இரண்டு குண்டு வெடிப்புகளுக்கு இடையே நடக்கும் கால இடைவெளி இவற்றை யும் நாம் ஆய்வுக்கு உட்படுத்தியாக வேண்டும். இவற்றிலும் பல உண்மைகள் வெளிப்படுகின்றன. பல கேள்விகள் பிறக்கின்றன. இந்தியாவில் நடக்கும் குண்டு வெடிப்புகள் பல நகரங்களில் வருடத்திற்கு ஒரு முறை அல்லது இரண்டு வருடங்களுக்கு ஒருமுஜற நடக்கின்றன. இப்படி ஆண்டுக்கொரு முறை நடத்தப்படும் குண்டு வெடிப்புகளில் என்ன அரசியல் நோக்கம் இருக்க முடியும்? உண்மையிலேயே இந்தியாவில் தீவிர வாத குழுக்கள் இருந்தால் அவை துடிப்புடன் செயல்பட்டுக்கொண்டுமிருந்தால், அவை அடிக் கடி தீவிரவாத செயல்களில் ஈடுபட்டு தங்கள் தாக்கத்தை காட்டிட முயற்சி செய்யும்.

எடுத்துக்காட்டாக 1980 களில் பஞ்சாப் மாநிலத்தில் என்ன நடந்தது என்பதைப் பாருங் கள். பல உண்மைகள் புரியும். அப்போது 1980 களில் சீக்கியர்களில் பலர் காலிஸ்தான் என்றொரு தனி நாடு வேண்டும் எனக் கேட் டார்கள். காலிஸ்தானை ஸ்தாபிக்க தீவிரவாத தாக்குதல்களை நடத்தினார்கள். அவர்கள் தங்கள் தாக்குதல்களை தொடர்ந்து நடத்திக் கொண்டே இருந்தார்கள். அவர்கள் அரசின் அடையாளங்களைத் தான் தாக்கினார்கள். அல்லாமல் இங்கொன்றும் அங்கொன்றுமாக வெடி குண்டுகளை உருட்டி விட்டுக் கொண்டி ருக்க வில்லை. அப்பாவிகளின் பக்கம் திரும்பிட வில்லை.

இதில் மிகவும் குழப்பமானதும், குளறுபடி யானதும் என்னவெனில் முஸ்லிம் தீவிரவாதிகள் எனமுத்திரைக்குத்தப்படுபவர்கள்நடத்துவதாகச் சொல்லப்படும் குண்டு வெடிப்புகளின் நோக்கம் “இந்தியின் முஜாஹிதீன் என்ற அமைப்பினர் மீது குண்டு வெடிப்பு வழக்குகளை நடத்திடுவதன் நோக்கம் எனக் கூறப்படுவது. அவர்கள் 1992ஆம் ஆண்டில் பாபரி மஸ்ஜித் இடிக்கப்பட்டதற்குப் பழிவாங்கிட 2002–ல் ஆண்டில் குஜராத்–இல் முஸ்லிம்கள் கொலை செய்யப்பட்டதற்குப் பழிவாங்குவது அவ்வாறு செய்கின்றார்கள் (பார்க்க அடிக்குறிப்பு–13).

இவைதான் நோக்கம் என்றால் அந்த இந்தியன் முஜாஹிதீன் என்ற அமைப்புத்தான் அரசியல் நோக்கங்கள் அற்ற பழிவாங்குவதை இலட்சியமாகக் கொண்ட உலகின் ஒரே தீவிரவாத அமைப்பு.

இன்னும் சொன்னால் இந்த அமைப்பு மட்டுந்தான் உலகில் மட்டுமல்ல, வரலாற்றிலும் எல்லையோ – இட குறியீடோ இல்லாத ஒரே அமைப்பு.

உலகில் தீவிரவாதத்தை ஆய்வு செய்து கொண்டிருக்கும் ஆய்வாளர்கள் உங்களிடம் தீவிரவாதத்தைப் பற்றி இப்படிப் பாடம் சொல்லி தருவார்கள்.

1. தீவிரவாதிகளுக்கு திட்டவட்டமான அரசியல் நோக்கங்களும் இலட்சியங்களும் உண்டு.

2. அவர்கள் இயங்கும் மைய்ய இடம் என்று உண்டு. அவர்கள் ஆதிக்கம் செலுத்துமிடம் ஒன்று உண்டு.

3. அவர்கள் யாரை இலக்காக் கொண்டு தாக்குகின்றார்கள் என்பதையும் எளிதில் அடையாளங்கண்டு கொள்ளலாம்.

4. தொடராகத் தொடரும் தாக்குதல்கள் இந்த குணாதிசயங்கள் இலக்கையில் தமிழ் ஈழத்தை இலக்காகக் கொண்டு இயங்கிய எல்.டி.டி.இ. அமைப்பிலும் காணலாம்.

கொலம்பியாவில் FARC? என்ற அமைப்பில் காணலாம்.

இஸ்லாமிய அரசு என்ற சிரியாவின் அமைப்பில் காணலாம்.

ஆனால் இந்தியின் முஜாஹிதீன் என அறியப்படும் அமைப்பில் இவற்றுள் எதையும் காண முடியாது. இங்கே என்ன நடக்கின்றது என்றால், காவல் துறையினர் சில முஸ்லிம்களைக் கைது செய்வார்கள். பின்னர் அவர்கள் பழைய குண்டு வெடிப்புகள் சிலவற்றையும் இனிவரும் நாட்களில் நடக்கப்போவதாக கற்பனை செய்யப்படும் சில குண்டு வெடிப்புகளையும் சுமத்துவார்கள், பழிபோடுவார்கள், சித்திரவதைச் செய்வார்கள் சிறையில் அடைப்பார்கள்.

ஆனால் இதே காவல்துறையினர் மாவோயிஸ்டுகளால் இடைவிடாமல் தாக்கப்படுகின்றார்கள், கொல்லப்படுகின்றார்கள். இதே காவல் துறையினர் அங்கே பீதிவயப்பட்டு நிற்கின்றார்கள். இந்தப் பீதி 24 மணிநேரமும், பீடித்துக் கொண்டிருக்கின்றது காவல்துறையினரை!

இதே காவல்துறையினர் எந்தப் பதற்றமுமில்லாமல், மிகவும் திறமையாக முஸ்லிம் தீவிரவாதகளைக் கைது செய்து விடுகின்றார்கள். அங்கே துப்பாக்கிச் சண்டைகள் இல்லை, அதனால் இழப்புகள் இல்லை. (2009 இல் நடைபெற்ற பாட்லா கவுஸ் என்கவுண்டரை சிலர் இதற்குப் பதிலாகச் சொல்லுகின்றார்கள்.

ஆனால் பாட்லா கவுஸ் என்கவுண்டரை ஒருவித விலக்காக எடுத்துக்கொள்ள முடியாது. காரணம் அங்கே எந்தவொரு சுதந்திரமான விசாரணையும் மேற்கொள்ளப்படவில்லை. இப்படியொரு விசாரணை வேண்டும் என நாம் நீண்ட நாட்களாகக் கேட்டு வருகின்றோம்.

## அவசியம் வேண்டும் குழு விசாரணை

இதில் நாம் கவனிக்க வேண்டியது என்ன வெனில் நமது மத்திய உளவுத்துறையும், இன்னும் அதுபோன்ற அமைப்புகளும், தாங்கள் ஆடும் ஆட்டங்களுக்கு "யாரிடமும் பதில் சொல்லிட வேண்டாம்" தாங்கள் இந்த சதுராட்டங்களுக்கு அரசிடமிருந்து பெறும் பெரும் தொகைகளுக்கும் யாரிடமும் பதில் சொல்லிட வேண்டாம் என்ற அடிப்படையில் சர்வ அதிகாரத்தோடும் செயல்பட்டு வருகின்றார்கள்.

அமெரிக்காவிலிருக்கும் உளவுத்துறைக்கும் அதுபோன்ற துறைகளும் அமெரிக்காவின் நாடாளுமன்ற (American Congress) குழுக்களுக்கு பதில் சொல்லியாக வேண்டும்.

அமெரிக்காவில் பல்வேறு வழக்குகளில் இந்த உளவுத்துறையினரின் அநீதிகளும் அடாவடித்தனங்களும் வெளிச்சத்திற்கு வந்துள்ளன. ஓரிரு தனிமனிதர்கள் தொடர்ந்த வழக்குகளில் இவர்கள் கையும் களவுமாக சிக்கி இருக்கின்றார்கள்.

அதேபோல் காவல்துறை, உளவுத்துறை அவை போன்ற அமைப்புகள் இவற்றின் செயல்பாடுகளை இந்தியா முழுவதும், ஒரு புலனாய்வுக்கு உட்படுத்த வேண்டும். இந்த அமைப்புகள் எங்கெல்லாம் குண்டு வைத்தன என்பனவும் கண்டுபிடிக்கப்பட வேண்டும். இந்த குண்டு வெடிப்புகளில் தாம் இவர்கள் பல முஸ்லிம் களைக் கைது செய்து, சிறையிலடைத்து இருக்கின்றார்கள்.

சிறையிலடைக்கப்பட்ட அப்பாவி முஸ்லிம்கள் சிறையிலேயே அழிந்து போயிருக்கின்றார்கள். இதற்கு முடிவு கட்ட வேண்டும். இந்தியாவில் தீவிரவாத செயல்கள் முற்றாக நிறுத்தப்பட வேண்டும். அதற்கு உளவுத்துறைகளை முழுமையான விசாரணைக்கு உட்படுத்த வேண்டும்.

**(தெஹல்கா வார இதழில்
இடம் பெற்ற இந்தக் கட்டுரை
மில்லிகெஜட் என்ற ஆங்கில இதழில்
16-30 செப்டம்பர்-2014-ல்
இடம் பெற்றது.)**

**- தமிழில் மு. குலாம் முஹம்மத்**

# அடிக்குறிப்பு

*1)* அப்படியானால் காவல்துறையினரால் கொலை செய்யப்பட்ட அந்த இளைஞர்களும், அப்பாவிகள். ஆனால் உச்சநீதிமன்றம் இதைப்பற்றி எதுவும் சொல்லிடவில்லை. மாறாக சுப்ரீம் கோர்ட் கடிதங்களை நிராகரிப்பதற்கும் பொது அறிவையே பயன்படுத்தியது. இதைக்கூட செய்யாத “கீழ்” நீதிமன்ற நீதிபதியை கண்டிக்கவில்லை உச்ச நீதிமன்றம். அதேபோல் இப்படியெல்லாம் போலி ஆவணங்களைத் தயாரித்த விசாரணை அதிகாரிகளான அதாவது காவல்துறையினரை கண்டிக்கவில்லை உச்சநீதிமன்றம், தண்டிக்கவில்லை. இதுவே அப்பாவி முஸ்லிம்கள் கொலை செய்யப்பட்ட அத்தனை வழக்குகளிலும் நடந்தது நாடாளும் மன்ற தாக்குதலிலும் நடந்தது.

*2)* இப்படி அவர்களைக் கண்காணிப்பதன் உண்மையான நோக்கம் இந்த இளைஞர்களின் வாழ்க்கையை நாம் பாழாக்கி இருக்கின்றோம். இவர்கள் தங்களுக்கெதிராக திரும்பிவிடக்கூடாது, தங்கள் மீது வழக்குத் தொடர்ந்துவிடக்கூடாது என்பதையெல்லாம் அறிந்திடவும் வழக்குத் தொடர்வது போன்ற காரியங்களில் அவர்கள் ஈடுபடுவார்கள் என்றால் அதனை தடுத்திட வேண்டும் என்பதுதான். இதுபோல் தங்களால் வாழ்க்கை பாழாக்கப்பட்டவர்கள், வழக்குத் தொடர்வார்கள் என்றால் அவர்கள் வழக்குத் தொடருவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போதே வேறு வழக்குகளில் கோர்த்து சிறையில் அடைத்து விடுவார்கள். அப்படி வேறு வழக்குகள் கிடைக்கவில்லை என்றால் ஒரு பட்டாசை காவல்துறையே வெடிக்கச் செய்து இவர்களை அதில் இணைத்துவிடுவார்கள். இப்படியாக மக்கா மஸ்ஜித் குண்டு வெடிப்பில் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டவர்களை பின்னர் பல வழக்குகளில் சிக்க வைத்தார்கள்.

*3)* இந்தியாவில் நீதிமன்றங்கள், தொடர்ந்து செய்து கொண்டிருக்கும் அநீதிகளுள் ஒன்று இது. அதாவது அநியாயமாக அப்பாவி முஸ்லிம் களை வழக்குகளில் இணைக்கும் காவல்துறையினரை அதற்குத் துணையாக நிற்கும் உள்துறையை சட்ட நடவடிக்கைகளுக்கு, உள்ளாக்கி நீதிமன்றத்தில் நிறுத்துவதில்லை. இதனால்தான் காவல்துறையினர் தொடர்ந்து அநியாயங்களைச் செய்து கொண்டிருக்கின்றார்கள். தப்பித்துக்கொண்டே இருக்கின்றார்கள்.

இந்த நிலைக்கு மாறாக எந்த நீதிமன்றமாவது கண்ணை மூடிக்கொண்டு அப்பாவிகள் மீது பொய் வழக்குகளைப் போட்டு அவர்களின் வாழ்க்கையைப் பாழாக்கிடும், காவல்துறையினர் மீது அத்தோடு சம்மந்தப்பட்ட உள்துறை அதிகாரிகள் மீது நடவடிக்கை களைப் பரிந்துரைத்தால், அப்பாவிகள் சிக்க வைக்கப்படுவது பெருமள வில் தடைபடும். நாடாளுமன்ற தாக்குதல் முதல், அக்ஷர்தாம் தாக்குதல் வரை இதுதான் நீதிமன்றங்களின் போக்காக இருந்திருக்கின்றது.

அதாவது அப்பட்டமான அநீதிகளைச் செய்யும் காவல்துறையினர், அப்படியே விடப்பட்டு வடுகின்றனர். இதில் நமது வாசகர்கள் தெரிந்து கொள்ள வேண்டியது என்னவெனில் ஒருவரின் வாழ்க்கையை

பாழாக்கிடும் அளவில் அதிகாரிகள் பொய் வழக்குகள் போட்டால் அந்த அதிகாரி மீது இந்தியத் தண்டனைச் சட்டம் 195 பிரிவுகள் 194–199 வரையுள்ள பிரிவுகளின் கீழ் வழக்குத் தொடரலாம், தண்டிக்கலாம், இதை நாம் இதுவரை செய்ததில்லை.

4) அக்ஷர்தாம் கோயில் தாக்குதல் வழக்கில் கைது செய்யப்பட்ட அனைத்து அப்பாவி முஸ்லிம்களிடமும் நீங்கள் எந்த வழக்கில், உங்களை இணைத்துக்கொள்ள அதாவது குற்றத்தை ஒப்புக்கொள்ள விரும்புகின்றீர்கள் என்றொரு வினாவை வைத்துள்ளார்கள். இதிலிருந்து ஓர் உண்மை வெளி வருகின்றது. அது அத்தனையும் குஜராத் காவல் துறையின் ஏற்பாடு என்பதே! அவை, அதாவது குஜராத் காவல்துறை யினர்தாம், கோத்ராவை அக்ஷர்தாம் தாக்குதல், கரண்பாண்டியாவின் கொலை, ரெயில் எரிப்பு ஆகிய அனைத்தையும் ஏற்பாடு செய்திருக் கின்றார்கள்.

5) ஹரன் பாண்டியாவின் மரணத்தின்போது, பா.ஜ.க. அத்வாணி குஜ ராத் வந்திருந்தார், அவர் அப்போது உள்றை அமைச்சர் அவருடைய சட்டையைப் பிடித்து இழுத்தார் ஹிரன் பாண்டியாவின் மனைவி. என் கணவரின் மரணத்திற்கு மோடிதான் காரணம். அவர் மீது நடவடிக்கை எடுங்கள் எனப் பகிரங்கமாகவே கேட்டுக் கொண்டார். பின்னர் நடந்த குஜராத் தேர்தலில் மோடியை எதிர்த்து நின்றார். தன்னால் முடிந்தவரை மோடியை எதிர்த்தார். ஆனால் இந்த இந்துத்துவ பாசிசத்திற்கு எதிராக அவரால் எதுவும் செய்திட இயலவில்லை. இன்றும் எதிர்த்துக்கொண்டே இருக்கின்றார்.

6) கோவை குண்டு வெடிப்புகள் 1998, பிப்ரவரி 14, முஸ்லிம்களின் கைவண்ணந்தான் என்றே அனைவரும் நம்பி வந்தார்கள். அந்த பிரம்மையை தோழர் அஜித்ஷாகி அவர்கள்தாம் உடைத்தார்கள். அதுவும் நமது உளவுத்துறைக்கு எதிராக அவர் தயார் செய்த குற்றப் பத்திரிகையில், அதன்பின் அத்தனையையும் வெட்ட வெளிச்சமாக்கும் அளவில் முன்னாள் தமிழ்நாடு சட்ட மன்ற உறுப்பினர் ஜனாப். ஏ.வி. நாசர் அவர்கள் ஒரு நூலை இல்லை லட்சியத்தை வெளியிட்டார். அதில் மிகவும் தெள்ளத் தெளிவாக கோவை குண்டு வெடிப்புகளை வழி நடத்திய அதிகார வர்க்கத்தைச் சுட்டிக்காட்டுகின்றார். அந்த நூலை அனைவரும் வாங்கிப்படிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

நூல் வெளியீடு : ஆழி பப்ளிஷர்ஸ்,
1. ஓ, திலகர் தெரு, துண்டலம்,
அய்யப்பன்தாங்கல், சென்னை – 600 077.
பேசி : 98841 55289
பக்கங்கள் 128, விலை ரூ. 100 /–

இந்நூலுக்கு தோழர் பாரதிகிருஷ்ணகுமார் அவர்களும் தோழர் அ. மார்க்ஸ் அவர்களுக்கும் முறையே முன்னுரையும், அணிந்துரையும் வழங்கியுள்ளார்கள். அவற்றிலும் பல உண்மைகள் அமிழ்ந்துக் கிடக்கின்றன.

7) உளவுத்துறை அதனால் ஊட்டி வளர்க்கப்படும் இந்துத்துவ தீவிரவாத அமைப்புகள் இவற்றின் வழி நாடெங்கும் குண்டுகள் வெடிக்கச் செய்யப்படுகின்றன. இதன் வழி குடிமக்கள் அனைவர் கவனத்தையும் நாட்டின் உள் நாட்டுப் பாதுகாப்பின் பக்கம் திருப்ப முடிகின்றது. சதாசர்வகாலமும் ஒருவித அச்சத்தையும் பீதியையும் உருவாக்கிட முடிகின்றது. பின்னர் உள் நாட்டுப் பாதுகாப்பிற்காக ஆயுதங்கள், அறிவியல் தளவாடங்கள் ஆகியவற்றை வாங்குகின்றோம் என்றொரு பெரிய வியாபாரம் நடக்கின்றது. நமது ஆட்சியாளர்கள் கோடிக்கணக்கில் பணத்தை கமிஷனாக பெறுகின்றார்கள். நம் நாட்டு மக்களின் பொது நலனுக்காகப் பயன்பட்டிருக்க வேண்டிய கோடிக் கணக்கான பணம் அந்நிய நாடுகளுக்குத் தாரைவார்த்து தரப்படுகின்றது.

இரு பெரிய வியாபாரத்தை பற்றிய முழுமையான ஆய்வு ஒன்றை கஃப்காலேண்ட் "Kafkaland" என்ற நூலில் டெல்லி பல்கலைக் கழகப் பேராசிரியர் மனிஷா ஷேந்தி அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

அதில் டெல்லியில் நடைபெற்ற Homeland Security Fair - 2012-ஐ அதாவது உள்நாட்டுப் பாதுகாப்பு கண்காட்சி பற்றிக் குறிப்பிடுகின்றார். நோய்டா என்ற டெல்லிக்குப் பக்கத்திலுள்ள இடத்தில் நடந்த இந்தக் கண்காட்சி 40,000 நாற்பதாயிரம் சதுர மீட்டரில் நடைபெற்றிருக்கிறது. இதில் முன்னணியில் இஸ்ரேல் நாட்டு நிறுவனங்கள் தான் நின்றிருக் கின்றன. இவை காட்சிக்கு வைத்த உள் நாட்டுப் பாதுகாப்பு கருவிகளை CCTV போன்றவை நம் அரசு தனியார் நிறுவனங்களும் அதிக விலை தந்து வாங்கி இருக்கின்றன. இந்த இஸ்ரேல் நிறுவனத்திற்கு எந்த அளவுக்கு வியாபாரம் பெருகிப்போனது என்றால் இது குஜராத் அஹ்மதாபாத்தில் உள்நாட்டுப் பாதுகாப்புப் பொருள்களை தயாரிக்கும் ஒன்றையே தொடங்கி இருக்கின்றது (Source : Kafkaland page 149-155)

இந்த உள் நாட்டுப் பாதுகாப்பு பொருள்கள் விவகாரத்தில் ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகள் பலர் இந்த வியாபாரத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருக்கின்றார்கள். பல இராணுவ அதிகாரிகள் இதில் கொள்ளையடிக்கலாம் என விருப்ப ஓய்வு கொடுத்து பணி யிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்கிறார்கள். இதுபோன்ற பல அரிய தகவல்களை அறிந்திட படியுங்கள். Kalkaland by Manisha Sethi - Three Essa ys Collective - B - 957, Palam Vihar, Gurgaon 122 017. India.

8) இந்தியாவின் நகரங்கள் அவற்றின் வாழும் மக்களின் தார தம்மியங்களின் அடிப்படையில் அ, ஆ, இ எனத் தரம் பிரித்து வைத் திருக்கின்றார்கள். அதைத்தான் ஆசிரியர் இங்கே குறிப்பிடுகின்றார்.

9) CCTV என்பது Close Circuit Television என்பவை ஒருவகை டெலிவிஷன் மிஷின்கள். அதாவது தொலைகாட்சி பதிவுகள், இவை இன்று மக்கள் அதிகமாக நடமாடும் பகுதிகளில் வைக்கப்படுகின்றன.

10) ஷொராப்தீன் என்பவரை குஜராத் காவல்துறையினர் என்கவுண்டர் என்ற போர்வையில் கொலை செய்தார்கள். இதனை பிரஜாபதி என்ற ஷெராப்தீன் நண்பன் பார்த்துக் கொண்டிருந்தான். அதனால் அமித்

ஷாவின் ஆட்கள் பிரஜாபதியைக் கொலை செய்து விட்டார்கள். இந்த கொலை வழக்கில் அமித்ஷா ஒருவருடம் சிறையிலிருந்தான். இந்த வழக்கிலிருந்து வேண்டுமென்றே விடுவித்தவர் நீதிபதி சதாசிவம் என்பவர். இதற்கு கைமாறாக மோடி அரசு இவருக்கு கேரள மாநிலத்தின் கவர்னர் பதவியைக் கொடுத்தது.

*11) 2004 ஆம் 2014 ஆண்டுவரை 1654* பேர்கள் இதுபோன்ற போலி என்கவுண்டர்களில் கொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். MG: 16-20 Nov. 2016. இந்தத் தகவலை நமது நாடாளும் மன்றத்தில் எழுப்பப்பட்ட ஒரு கேள்விக்குப் பதிலாக தேசிய மனித உரிமை ஆணையம் National Human Rights Commission தந்தது. ஆங்கிலேயர்களிடமிருந்து விடுதலை – ஜனநாயகம் என்ற பெயரில் நம்மையே நாம் ஆளுகின்றோம் என்பதெல்லாம் பொய். நம்மையே நாம் கொலை செய்து கொண்டிருக்கின்றோம் என்பதே உண்மை.

*12)* மனீஷா சேத்தி அவர்கள் டெல்லியில் வீற்றிருக்கும் ஜாமிய்யா மில்லியா இஸ்லாமியா பல்கலைக் கழகத்தைச் சார்ந்த பேராசிரியர். இவர்கள் ஜாமியா ஆசிரியர்கள் குழுமத்தின் தலைவராக இருந்தவர்கள். (Jamia Teacher's Solidarity Association. RSA) – பாட்லாஹவுஸ் என்கவுண்டர் என்ற பிரசித்தப் பெற்ற டெல்லி போலீஸ்கள் செய்த படுகொலை வழக்கை அரசுக்கு எதிராகத் தலைமை ஏற்று நடத்தியவர். இவர்கள் இந்தியாவில் தீவிரவாதத்தின் பெயரால் என்ன நடந்து கொண்டிருக்கின்றது என்பதை கஃப்காலேண்ட் என்ற நூலில் விளக்க மாகக் கூறியுள்ளார்கள். ஆங்கிலம் தெரிந்தவர்கள் அதனை படிக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*13)* இந்தியன் முஜாஹிதீன் என்றொரு அமைப்பு இந்தியாவில் இருக்கின்றதா? என்ற வினா காலங்காலமாக கேட்கப்பட்டு வருகின்றது. இந்த வினாவை அன்றே இஸ்லாமிய அமைப்புகள், அன்றைய பிரதமர் மன்மோகன் சிங் அவர்களிடம் கேட்டார்கள். பதில் இல்லை. ஆக இந்தியன் முஜாஹிதீன் என்ற அமைப்பே நமது உளவுத்துறையினரின் கையிருப்பு வேலை.


**இப்போது பரபரப்பான விற்பனையில்**




விலை ரூ. 200 மட்டுமே




விலை ரூ. 225 மட்டுமே

**வேர்கள் பதிப்பகம்,**

52/1, மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை – 600 001. தொடர்புக்கு : 8148129887

# முஸ்லிம்களின் வீழ்ச்சியால் உலகம் இழந்ததென்ன?

தேசிய வெறியும் இன வெறியும், தமது இனமே மேலானது என்ற எண்ணமும் பூகோள அடிப்படையில் ஏற்றத்தாழ்வைக் கற்பிப்பதும், ஐரோப்பியர்களுக்கேயுரிய புத்தி. அது அவர்களின் உதிரத்தில் ஊடுருவி அவர்களின் இரண்டாவது இயல்பாகவே மாறிவிட்டிருந்தது என்பதையெல்லாம் முன்னர் நாம் கூறியிருக்கிறோம்


அபுல்ஹசன் அலீ நத்வீ

ஐரோப்பாவில் இப்படிப்பட்ட நிலை தொடர்ந்து கொண்டிருந்தபோதிலும் அவர்களின் இந்த சுபாவத்தை கிறிஸ்தவ மதம் அடக்கியே வைத்திருந்தது. ஏனெனில் கிறிஸ்தவம் என்பது அதில் மனிதக் கரங்களின் ஊடாடல் ஏற்பட்டுவிட்ட போதிலும் ஈஸா நபியின் அறப் போதனைகளின் மிச்சத்தின் அடையாளம் இல்லாமலில்லை.

பொதுவாகவே ஓர் இறை மார்க்கம் என்னதான் அது மனிதக் கரங்களால் மாற்றங்கள் தமக்கிடையே கற்பித்துக் கொண்டாலும் மனிதர்கள் அதில் இருப்பதில்லை. இன, மொழி, தேச ரீதியான பிளவுகள் பேதங்கள் அதில் இருப்பதில்லை.

எனவே கிறிஸ்துவம் முழு ஐரோப்பிய சமுதாயத்தையும் மதம் என்ற கொடியின் கீழ் திரட்டியது. கிறிஸ்துவ உலகத்தை ஒரே குடும்பமாக ஆக்கியது. பெரும்பாலான இனங்கள் தேவாலயங்களுக்குக் கட்டுப்பட்டே வாழ்ந்தன என்றும் இன வெறியும் தேசிய வாதமும் அவர்களை ஆட்டிப்படைத்ததால் நெடுங்காலத்துக்கு அதிலேயே அவர்கள் மூழ்கிவிட்டனர்.

ஆனால் மார்ட்டின் லூதர் (1483–1546) ரோம தேவாலயங்களுக்கு எதிரான சீர்த்திருத்தப் புரட்சியைத் தொடங்கியபோது ஜெர்மனியிடம் தனது இனம் உதவி தேடுவதை ஒரு முக்கிய



## ஐரோப்பா:

## தேவாலயங்களின் வீழ்ச்சியே..! இனவெறி வலிமை பெறக் காரணம்.!!

வேலையாக நினைத்தார் அதில் அவர் கணிசமான அளவு வெற்றியும் பெற்றார்.

இறுதியில் ரோம தேவாலயம் தோற்றது. உடைந்து சிதறியது. ஒருங்கிணைந்த சமுதாயங் கள் தனித்தனியாயின. அவற்றை ஒருங்கிணைக்க வழியே இல்லாமல் போனது.

சமுதாயங்களுக்கு மத்தியில் பிளவும் பிரிவும் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டேபோயின. இறுதியில் ஐரோப்பாவுக்குள்ளேயே கிறிஸ்துவம் பலமிழந்து போனதால் அது ஏற்படுத்தி வைத் திருந்த ஒற்றுமை சிதைந்தது. இன வெறியும் தேசிய வாதமும் வலிமை பெற்றன.

மதமும் இனவெறியும் ஒரு தராசின் எதிரெதிர் தட்டுக்களில் இருக்கும் இரு வேறு பொருள் போலாயின. ஒன்று உயர்ந்தால் மற்றொன்று தாழ்ந்தது. உண்மை என்னவென் றால் மதத்தின் தட்டு கனம் குறைந்து கொண்டே போனது. அதற்கு எதிரான தட்டு வலிமைப் பெற்றுக் கொண்டேயிருந்தது நாளுக்கு நாள்.

இந்த வரலாற்று உண்மையை அமெரிக்கா வுக்கான முன்னாள் பிரிட்டானியத் தூதர் ஆங்கில நாட்டின் பிரபலப் பிரமுகர் லார்ட் லூதர் அவர்கள் கி.பி. 1938 ஆம் ஆண்டு அலிகர் பல்கலைக் கழகத்தில் ஆற்றிய உரையில் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

“மார்ட்டின் லூதர் ஆரம்பித்த சீர்த்திருத்த இயக்கம் ஐரோப்பாவின் ஒற்றை மதம் ஒற்றைக் கலாச்சாரம் ஆகியவற்றைச் சிதைத்தது. இதனால் ஐரோப்பாக் கண்டமே பல பிராந்தியங்களாகப் பிளவுபட்டது. பல அரசுகள் தோன்றின. அவை தமக்கிடையே முட்டி மோதிக்கொண்டன. இது உலக அமைதிக்கே நிரந்தர சவாலாக ஆனது.”

இவ்வாறு கூறிய அவர், அங்கே மதம் வீழ்ந்து, நல்லொழுக்கம் சரிந்து, இனவெறியும் தேசிய வாதமும் மூர்க்கம் பெற்றதால் ஏற்பட்ட விளைவுகளையும் தன் உரையில் எடுத்துரைத்தார்.

“மனிதன் நல்லொழுக்க லட்சியத்தை அடைந்திட அவனுக்கு மதம் வழிகாட்ட வேண் டும். அதுவே மனித வாழ்வு அர்த்தமுள்ளதாக அமைந்திட மிக அவசியமாகவும் இருக்கிறது.”

“மதத்தின் செல்வாக்கும் அதிகாரமும் வீழ்ந்ததால் மேற்கத்திய உலகம் பல அரசியல் குழப்பங்களுக்கு ஆளாகியுள்ளது. அந்த அரசியல் குழப்பங்கள் அனைத்தும் இன வேற்றுமை உயர்வு, தாழ்வு என்ற வேற்றுமை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு உருவான அரசியல் குழுக்களால் வந்தன.”

“மேலும் மேற்கத்திய உலகம் உலகாதாய உயர்வே உயர்ந்த லட்சியம், உன்னத நோக்கம் என்று நம்புகிறது. அறிவியல் விஞ்ஞானத்தின் தாக்கமே இதற்குக் காரணம்”

“அது வாழ்க்கையின் சிக்கல்களையும் சிரமங்களையும் சுமைகளையும் அதிகப்படுத்திக் கொண்டே இருக்கிறது. இதன் விளைவாக ஐரோப்பாவால் ஆன்மாவுக்கும் மனித வாழ் வுக்கும் இடையே இணைப்பை ஏற்படுத்தவே முடியவில்லை. இந்த இணைப்புத்தான் இன வெறியிலிருந்து மனிதனுக்கு தாயகத்தைக் காப்பாற்ற முடியும். இந்த இன வெறியே இந்தக் காலக்கட்டத்தில் மனித குலத்தைத் தாக்கிய பேரிடி” (Source : Convocation address of lord lothian at muslim university aligrah)

**ஐரோப்பாவில் இனவெறியின் விநோதங்கள்**

கிறிஸ்தவ மதக்கட்டமைப்பு சிதைந்து ஐரோப்பாவில் இனவெறிக் கோஷம் மூர்க்க மடைந்ததால் ஏற்பட்ட முதல் விளைவு என்ன வென்றால் கிழக்குலக நாடுகள் அனைத்துக்கும் ஒற்றை எதிரியாக ஐரோப்பா ஆகிவிட்டது.

இனவெறி முழக்கம் மேற்குலகையும் கிழக்குலகையும் பிரிக்கின்ற கோடாகிவிட்டது. அல்லது ஐரோப்பா வேறு இதரக் கண்டங்கள் வேறு என்று பிரித்துவிட்டது என்று கூறலாம். ஆரியர்களையும் மனித குலத்தின் மற்ற இனங் களையும் பிரித்துக் காட்டும் கோடாக மாறி விட்டது எனலாம்.

மற்ற இனத்தவர்களைவிட பிறப்பால் இனத் தால் கலாச்சாரத்தால் நாகரீகத்தால் அறிவால் ஒழுக்கத்தால் நாங்களே உயர்ந்தவர்கள் என்று ஐரோப்பியர்கள் நம்பினர்.

நாங்களே அரசாளவும் தலைமையேற் கவும் பிறந்தவர்கள். இதர இனத்தவர்கள் அனைவரும் எங்களுக்குப் பணிந்திடவும் கட்டுப் படவும் பிறந்தவர்கள். நாங்கள் வாழ்வாங்கு வாழ வேண்டும். மற்றவர்கள் வீழ்ந்து மடிய வேண்டும் என்று நம்பினர்.

இதைத்தான் இதையேதான் கிரேக்கர்களும்

ரோமர்களும் தமது ஆட்சிக் காலத்தில் கடைப் பிடித்தனர். தாம் மட்டுமே நாகரீகமானவர்கள் என்று சொல்லிக் கொண்டனர். மற்றவையெல் லாம் மோசமானவை என்றனர்.

குறிப்பாக கிழக்கு அட்லாண்டிக் கடலைச் சுற்றியுள்ள நாகரீகங்களை 'காட்டு மிராண்டித் தனம்' என்றனர்.

இந்த இனவெறி சுய தம்பட்டம் ஆகிய வற்றின் மற்றொரு தீய விளைவு என்னவெனில் ஐரோப்பாவின் எல்லைகளுக்கு வெளியிலிருந்து வரும் அனைத்தும் அந்நியமானவை நமக்கு எதிரானவை என்ற கோட்பாடு வந்தது.

எனவே சில ஐரோப்பியக் குழுக்கள் கிறிஸ்தவ மதமும் ஜீஸஸ் (ஈஸா)வும் வெளி யிருந்து ஊடுருவியர்களே. வந்தேறிகளே. எனவே அவர்கள் (ஈஸாவும், கிறிஸ்தவமும்) நாடு கடத் தப்பட வேண்டும். அவை நமக்குச் சம்பந்தமில் லாதவை என்றனர்.

இதோ ஜெர்மானியப் பேராசிரியர்களுள் ஒருவரான பேராசிரியர் அதுர்ஜி கூறுவதைக் கேளுங்கள்...



"நாம் எதற்கு நம் பிள்ளைகளுக்கு அந்நிய சமுதாயத்தின் வரலாற்றை கற்பிக்க வேண்டும்? இப்ராஹீம் இஸ்ஹாக் (அலைஹிமா)வின் வரலாறுகளை ஏன் பாடமாக நடத்த வேண்டும்? தேவையில்லை. நம் கடவுளும் ஒரு ஜெர்மானி யராகத்தான் இருக்க வேண்டும்?" என்றார் அவர்.

"இறைத்தூதர் ஈஸா (அலை) இஸ்ரவேல் இனத்தவர் என்பதால் அவருக்கும் நமக்கும் சம்பந்தமில்லை" என்று வாதிக்கும் கூட்ட மொன்றும் ஜெர்மனியில் உதயமானது.

எனினும் அங்கு ஈஸா நபி மீது இடையறாத அன்பும் முடிவுறாத மரியாதையும் கொண்ட மக்களும் இருந்தனர். அவர்களெல்லாம் ஈஸா நபி இஸ்ரவேலர் அல்ல. அவர் ஒரு ஆரிய இனத் தவரே என்று நிரூபிக்க பெரும் பிரியத்தனம் செய்து கொண்டிருந்தனர்.

இதைப் பயன்படுத்தி ஜெர்மனியில் மற்றொரு கூட்டம் உருவானது. அது பண்டைய கால ஜெர்மானியர்கள் வணங்கிக் கொண்டிருந்த பழைய உள்நாட்டுக் கடவுள்களை (உள் இனக் கடவுள்களைக்) கண்டு பிடித்து அதன் வழி பாட்டுக்கு உயிரூட்ட முனைந்தனர்.

(சோவியத் யூனியன்) ரஷ்யா தனது பழைய விரோதியான ஜெர்மனியை விட இன துவேஷத்தில் தேசிய வாத வெறியில் சற்றும் சளைத்ததல்ல. நவீன உலகின் பெரும்பாலான பெரிய கண்டுபிடிப்புக்களைத் தந்த பெருமை ரஷ்யாவுக்கே உண்டு என்று ரஷ்யர்கள் நம்பினர்.

"உடல்களின் ஒருங்கிணைப்பைப் பற்றிய பிரத்தியோக விதிகளை வகுத்தவர் 'லாஃப்வாசிய' அல்ல. அதன் பெருமை ரஷ்ய அறிஞர் மீஷய்ல் லோமோதுகோப் அவர்களையே சாரும்" என்றனர்.

"உலகை ஒளிர வைத்த மின்சாரத்தைக் கண்டுபிடித்ததில் எந்தச் சிறப்புமில்லை. அதற்கு ஆறு ஆண்டுகளுக்கு முன்னரே ரஷ்யா விஞ் ஞானி 'லூரவ்ஜீன்' மின்சாரத்தைக் கண்டுபிடித்து விட்டார்" என்றனர்.

ரஷ்ய விஞ்ஞானி டெலிகிராப்-ஐ மோர் ஸூக்கு முன்னரே கண்டுபிடித்து விட்டதாக 'பராபித்' என்ற பத்திரிகை செய்தி வெளியிட்டது.

"மேலும் 'ச்சிப் சனு'க்கு முன்னரே ரஷ்யர்கள் புகை வண்டியை ஓட்டிக் காண்பித்து விட்டனர்" என்றும் கூறினர்.

இவ்வாறு வரலாற்றுக்கே சவால் விடும்படி யான தகவல்களை ரஷ்யர்கள் பரப்பினர். இதற்குப் பின்னணியிலிருப்பது என்ன?

ரஷ்யாவுக்கு மகத்துவம் சேர்ப்பதும் இன வெறியுமன்றி வேறெதுவுமில்லை.

– தொடரும்.

தமிழ் வடிவம் இல்யாஸ் ரியாஜி.

எது முதலில்?

# ஐயத்திற்கு இடமானவைகளை அணுகுவது எப்படி?



இமாம் யூசுப் அல்கர்தாவி

தடை செய்யப்பட்ட பாவங்களில் பெரும் பாவங்கள், சிறு பாவங்கள் உள்ளன என்பதை முன்னர் பார்த்தோம்...

இதன்பிறகு ஐயத்திற்கு இடமானவை என்று ஒன்று உண்டு. அவற்றைபற்றி இப்போது பார்ப்போம்..

இது ஹலாலா?... ஹராமா...? (தடை செய்யப்பட்டதா? அனுமதிக்கப்பட்டதா?) என்று பெரும்பாலானவர்களால் தெளிவாக அறிந்துகொள்ள முடியாதவைகளே ஐயத்திற்கிடமானவையாகும். இவை தெள்ளத் தெளிவாக உறுதியாக தடைசெய்யப்பட்டவைகளைப் போன்றவை அல்ல. அதையும் இதையும் ஒரே மாதிரிப் பார்க்கக் கூடாது.

நேரடியாகத் தடை செய்யப்பட்ட பாவங்களை விட ஐயத்திற்கிடமானவை தரத்தில் தாழ்ந்தவைதான்.

ஐயத்திற்கிடமானவற்றை ஹலாலா? என்று தன் ஆய்வின் வழியாக ஒருவர் கண்டறிய முயல்கிறார். முடிவில் இது ஹலால் என்றோ ஹராம் என்றோ ஒரு முடிவுக்கு வருகிறார் என்றால் தன் ஆய்வின் முடிவின் படியே அவர் செயல்பட வேண்டும்.

ஓர் ஆராய்ச்சியாளனுக்குரிய தகுதிகள் உடையவராக அவர் இருக்கும் பட்சத்தில் தன் ஆய்வின் முடிவின்படியே அவர் செயல்பட வேண்டும். பிறர் தம்மைப்பற்றி ஏதேனும் தவறாக நினைத்து விடுவார்களோ என்ற நினைப்பில் தம் ஆய்வின் முடிவை விட்டு இறங்கிவிட இவருக்கு அனுமதி இல்லை.

ஆய்வு செய்வதற் கான தகுதியுள்ளவர்கள் தமது ஆய்வின் முடிவின் படியே அல்லாஹ்வை வணங்க வேண்டும்.

அவரின் ஆய்வின் முடிவு தவறாக இருப்பினும் சரியே. ஏனென்றால் இதற்காக அவர் மன்னிக்கப்படுவார் என்பது மாத்திரமல்ல. ஆய்வு செய்ததற்காக ஒரு கூலி வழங்கப்படும். (ஆய்வு செய்து சரியான முடிவைக் கண்டறிந்தால் இரு கூலி வழங்கப்படும்)

குர்ஆனையும் சுன்னாவையும் சுயமாக ஆராய்ச்சி செய்திடும் தகுதி இல்லாததின் காரணமாக தகுதியுள்ள அறிஞர்களைப் பின்பற்றக் கூடியவர்கள் தன்னுடைய நம்பிக்கைக்குரிய மார்க்க அறிஞரைப் பின்பற்றலாம்.

அந்த அறிஞர்கள் மார்க்கப்பற்றும் மார்க்க அறிவும் தனக்கு திருப்தி அளிக்கும் வரை அவரையே பின்பற்றிக் கொண்டிருப்பது தவறல்ல, சரியானதே.

இது ஹாலாலா? ஹராமா? என்று எந்த முடிவுக்கும் யாரால் வர முடியவில்லையோ அவரைப் பொருத்தவரை அது ஐயத்திற்கிடமானவையே இருக்கும். இவர் தனது கண்ணியத்தையும் மார்க்கப்பற்றையும் இழக்காமலிருக்க வேண்டும். எனவே அதைச் செய்யக்கூடாது.

அண்ணல் நபி (ஸல்) கூறினார்கள் “நிச்சயமாக ஹலால் எது ஹராம் எது என்பது தெளிவாகிவிட்டது. இவ்விரண்டுக்குமிடையே ஐயத்திற்கிடமானவைகளும் உண்டு. பெரும்பாலானவர்கள் இவற்றை தெளிவாக அறிந்திருக்க மாட்டார்கள். எனவே யார் ஐயத்திற்கிடமானவற்றை விட்டு விட்டாரோ அவர் தன் கவுரவத்தையும் மார்க்கப்பற்றையும் பாதுகாத்துக்

கொண்டார். ஐயத்திற்கிடமானவற்றில்விழுபவர் ஹராமில் விழுந்து விடுவார். வேலியைச் சுற்றியே மேய்ந்து கொண்டிருப்பவர் வேலிக்குள்ளேயும் மேய்ந்து விடுவார் என்பதைப்போல" (அறிவிப் பாளர் நுஅமான் பின் பஷீர் (ரழி) நூல் – புகாரி முஸ்லிம்)

மார்க்கக் கல்வி கற்காதவர்கள் இவ்வாறான ஐயத்திற்கிடமான விஷயங்களில் நம்பகத் தன்மைமிக்க மார்க்க அறிஞரிடம் கேட்டு விளக்கம் தெரிந்து செயல்பட வேண்டும்.

அல்லாஹ் கூறுகிறான்....

நீங்கள் தெரியாதவர்களாக இருந்தால் விளக்கமுள்ளவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். (16:43)

நபி (ஸல்) கூறினார்கள் "அவர்களுக்குத் தெரியாவிட்டால் கேட்க வேண்டியதுதானே! அறியாமைக்குத் தீர்வு கேள்வி கேட்பதுதான்" (அறிவிப்பாளர் : ஜாபிர் (ரழி) நூல் : அபூதாவுத்)

இவ்வாறான ஐயத்திற்கிடமான விஷயங் களில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான முடிவுக்கே வருகின்றனர். அந்த அளவுக்கு மக்களிடையே இவ்விஷயத்தில் பெரும் கருத்து வேறுபாடு நிலவுகிறது.

இதற்குக் காரணம் ஒரு விஷயத்தை எல்லோரும் ஒரே மாதிரியே பார்ப்பதில்லை. ஒவ்வொருவம் ஒவ்வொரு விதமான பார்வை இருக்கிறது. அவரவர்களும் அவரவர்களின் சிந்தனைக்கும் பார்வைக்கும் தகுந்தாற்போல் முடிவெடுகின்றனர்.

இதேபோலத்தான் ஒவ்வொருவரின் சுபாவ மும் வேறுபடுகின்றன. முன்னெச்சரிக்கை உணர் வும் ஆளாளுக்கு வேறுபடுகின்றது. அதற்கேற்ற வாறு அவர்களின் முடிவும் அமைகிறது.

சிலர் மனக்குழப்பம் (வஸ்வஸா) உள்ளவர் களாக இருக்கின்றனர். ஐயத்திற்கிடமான விஷயங்களில் ஏதேனுமொரு சிறு மனக்குழப் பம் ஏற்பட்டால் கூட அதைப்பிடித்துக் கொள் கின்றனர். (அதுகூடாது அதுஹராம்என்கின்றனர்)

உதாரணத்திற்கு ஒன்றைப்பாருங்கள் மேற் கத்திய நாடுகளில் உணவுக்காக அறுக்கப்படும் இறைச்சிகளை எடுத்துக் கொள்ளுங்கள். ரொம்ப பலஹீனமான ஒரு காரணத்தைக் கூறி அவற்றின் மீது சந்தேகத்தைக் கிளப்புகின்றனர் அவர்கள்.

இப்படியெல்லாம் நடக்க வாய்ப்பே இல்லை என்பது மாதிரியான விஷயங்களைக் கூட நடக்க வாய்ப்புள்ள விஷயங்கள் தான் என்று கருதிக் குழம்புகின்றனர். (அதை இப்படி அறுத் திருப்பார்களோ அப்படி அறுத்திருப்பார்களோ என்றெல்லாம்வீண்கற்பனையாக) கேள்விகளைக் கேட்டுக் கொண்டே போகிறார்கள். இறுதியில் அல்லாஹ் தாராளமாக்கியுள்ளதைக் கூட தங்கள் மீது சிரமப்படுத்திக்கொள்கின்றனர்.

அல்லாஹ் கூறுகின்றான்...

ஓரிறை நம்பிக்கை கொண்டவர்களே..! சில விஷயங்களைப் பற்றி (அநாவசியமாக) கேள்வி கேட்காதீர்கள் (அவைப்பற்றி) உங்களுக்கு தெளிவுப் படுத்தப்படுமானால் உங்களுக்கு அது தீங்காகிவிடும் (5:101)

எனவே ஒரு முஸ்லிம் ரொம்ப துருவித் துருவி கேள்வி கேட்டுக் கொண்டிருக்க மாட்டான்.

**இதோ ஒரு நபி மொழியைப் பாருங்கள்...**

"ஒரு கூட்டம் எங்களுக்கு இறைச்சி கொண்டு வருகிறது. ஆனால் அவர்கள் (அந்தக் கால்நடையை அறுக்கும்போது) அதற்கு அல்லாஹ்வின் திருப்பெயர் கூறினார்களா இல்லையா? என்பது எங்களுக்குத் தெரியாது (நாங்கள் அதை சாப்பிடலாமா)" என்று நபி (ஸல்) அவர்களிடம் கேட்கப்பட்டது. அதற்கு "அல்லாஹ்வின் திருப்பெயர் கூறி அதைச் சாப்பிடுங்கள்" என்று பதில் கூறினார்கள். (அறிவிப்பாளர் : ஆயிஷா (ரழி) நூல் : புகாரி)

இமாம் இப்னு ஹஸ்ம் (ரஹ்) அவர்கள் இந்த நபி மொழியிலிருந்து ஒரு சட்டத்தை அகழ்ந்தெடுக்கிறார்கள். இப்படி : "நமக்குத் தெரியாதவை (நமக்கு அப்பால் நடந்தவை) பற்றி நாம் விசாரிக்கப்படமாட்டோம்"

(அதாவது என்ன நடந்தது என்று நமக்குத் தெரியாதவைப் பற்றி மறுமையில் அல்லாஹ் விசாரிக்க மாட்டான் என்று பொருள்)

இன்னொரு தகவலையும் பாருங்கள்... உமர் (ரழி)யவர்கள் ஒரு வழியில் சென்று கொண்டிருந்தார்கள். அப்பொழுது ஒரு வீட்டின் (மழை தண்ணீர் விழுவதற்காக வைக்கப் பட்டிருக்கும்) மடையிலிருந்து உமர் (ரழி)

மீது விழுந்தது. அப்போது அவர்களுடனிருந்த பயணத்தோழர் "மடையிலிருந்து கொட்டும் இந்த நீர் சுத்தமானதா அசுத்தமானதா ?" என்று வீட்டின் உரிமையாளரைக் கேட்டார்.

உடனே குறுக்கிட்ட உமர் (ரழி) "நீர் விழும் மடையின் உரிமையாளரே! இது சுத்தமான நீரா அசுத்தமான நீரா என்று எந்த விளக்கமும் எங்களுக்குச் சொல்லாதீர். ஏனெனில் ரொம்பச்சிரமம் எடுத்துக் கொள்வது விலக்கப்பட்டுள்ளது" என்று கூறினார்கள்.

(அதாவது இது மாதிரியான விஷயங்களைப்பற்றி ரொம்பச் சிந்திப்பதை நபி (ஸல்) அவர்கள் தடை செய்தார்கள் என்று பொருள்)

ஒருமுறை நபி (ஸல்) அவர்களிடம் ஒருவர் தனக்கு பள்ளிவாசலில் வைத்து அல்லது தொழுகையில் காற்றுப் பிரிந்ததைப் போன்ற ஓர் உணர்வு ஏற்படுவதைக் கூறி அதற்கு விளக்கம் கேட்டார், அதற்கு "(காற்றுப்பிரியும்) சப்தம் கேட்காவிட்டாலோ அல்லது துர்வாடை அடிக்காவிட்டாலோ (உளுச் செய்திட) செல்ல வேண்டியதில்லை' என்று நபி (ஸல்) கூறினார்கள்.

இது ஆதாரப்பூர்வமான ஹதீஸ்தான் (இதே கருத்தில் அபூஹுரைரா (ரழி) அறிவித்துள்ள நபி மொழியொன்று முஸ்லிம் என்ற நூலில் இடம் பெற்றுள்ளது)

இந்த நபிமொழி மூலம் ஒரு சட்ட விதியை மார்க்க அறிஞர்கள் அகழ்ந்தெடுத்துள்ளனர்.

"ஒரு சந்தேகத்துக்காக உறுதியானதை அகற்றிவிடக்கூடாது. சந்தேகத்தை தூக்கிப் போட்டுவிட்டு சந்தேகம் வருவதற்கு முன்னால் எது இருந்ததோ அதன்படி செயல்பட வேண்டிடும். இதுவே மனக் குழப்பத்தை அடியோடு அகற்றிடும் வழி" என்பதே அந்த சட்ட விதி.

இன்னொன்றையும் நீங்கள் கவனியுங்கள்...

ஒரு யூதர் நபி (ஸல்) அவர்களை விருந்துக்கு அழைத்தார். அவரின் அழைப்பை ஏற்று விருந்துக்குச் சென்ற பெருமானார் (ஸல்) இது ஹலாலான உணவா) இல்லையா? இந்தப் பாத்திரம் சுத்தமானதா? இல்லையா? என்றெல்லாம் அவரிடம் விசாரிக்காமலேயே சாப்பிட்டுவிட்டுத் திரும்பினார்கள்.

அது மாத்திரமல்ல, இறை மறுப்பாளர்கள் தயாரித்த ஆடைகளும் பாத்திரங்களும் பெருமானார் (ஸல்) அவர்களிடமும் நபித் தோழர்களிடமும் கொண்டு வரப்பட்டபோது அதை அணிந்திருக்கிறார்கள். பயன்படுத்தியிருக்கிறார்கள்.

போரிட்டு வென்றபின் கிடைக்கும் போர்ச் செல்வங்களிலுள்ள (மற்ற மதத்தவர்களின்) பாத்திரங்கள், ஆடைகள் உள்ளிட்டவற்றை பயன்படுத்தியிருக்கிறார்கள்.

இணை வைக்கும் பெண்ணொருத்தியின் தோல் பாத்திரத்திலிருந்த தண்ணீரை நபி (ஸல்) அவர்களும் முஸ்லிம்களும் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

(காண்க : புஹாரி எண். 344 மற்றும் ஜாமிவுல் உலூமி வல்ஹிகம், இப்னு ரஜப்.)

இவ்வாறு ஆதாரங்களின் அடிப்படையில் அனுமதி அளிக்கும் கருத்துக்கு மாறான கருத்துகளும் காணப்படுகின்றன.

இவர்கள் பின்வரும் சான்றைக் காட்டுகின்றனர்.

"மதுக்குடிக்கின்ற, பன்றி இறைச்சி சாப்பிடுகின்ற வேதக்காரர்களின் பாத்திரங்களைப் பயன்படுத்தலாமா?" என்று கேட்டபோது "வேறு பாத்திரங்கள் இல்லையென்றால் அவற்றை தண்ணீரால் கழுவிவிட்டு பிறகு அதில் சாப்பிடுங்கள்" என்று நபி (ஸல்) கூறினார்கள். (அறிவிப்பாளர் : அபூஸஅலபா அல்ஹுஷனீ (ரழி) (நூல் : புஹாரி முஸ்லிம்)

(இதனடிப்படையில் பார்த்தால், வேறு பாத்திரங்கள் இருக்கும் போது இதைப் பயன்படுத்தக்கூடாது. வேறு பாத்திரங்கள் இல்லாத போது கூட நன்றாக தண்ணீர் போட்டு கழுவிய பின்தானே பயன்படுத்த வேண்டும் என்கின்றனர்)

ஐயத்திற்கிடமானவைப் பற்றி விளக்கம் தர முன்வந்த இமாம் அஹ்மது (ரஹ்) அவர்கள் இப்படிச் சொன்னார்கள்.

"தெள்ளத் தெளிவாக தடுக்கப்பட்ட ஹராமுக்கும் தெள்ளத் தெளிவாக அனுமதிக்கப்பட்ட ஹலாலுக்கும் இடையே உள்ள ஒரு நிலைதான் இது. அதைவிட்டுவிட்டவர் தன் மார்க்கப் பற்றை பாதுகாத்துக் கொண்டார்"

ஒருமுறை அஹ்மது (ரஹ்) இப்படி விளக்கம்

தந்தார்கள்' "அதில் ஹலால் என்பதற்கான காரணமும் ஹராம் என்பதற்கான காரணமும் கலந்திருக்கின்றன"

அறிஞர் இப்னு ரஜப் (ரஹ்) கூறுகின்றார் "இதனை அடிப்படையாகக் கொண்டு வேறு சில கிளைச் சட்டங்கள் உருவாகின்றன"

"ஒருவருடைய (வருமானத்தில் செல்வத்தில் ஹராம் ஹலால் இரண்டும் கலந்திருந்தால் அவர் தரும் உணவை உண்ணலாமா?)" "அவருடைய செல்வத்தில் பெரும்பாலானவை ஹராம் என்றால் (சாப்பிடாமல்) தவிர்த்துக் கொள்ள வேண்டும்" என்கிறார்கள் இமாம் அஹ்மது (ரஹ்) அவர்கள்.

அவரது செல்வத்தில் ஹராம் மிகக்குறைவாக கலந்திருக்கிறது அல்லது அதை அறிந்துகொள்ள முடியவில்லை என்றால் என்ன செய்வது என்ற கேள்விக்கு நம் அறிஞர்களிடையே மாறுபட்ட கருத்து நிலவுகிறது.

சிலர் அவர்தம் பொருள்களை உண்பது பயன்படுத்துவது ஹராம் என்கின்றனர். சிலர் அது மக்ரூஹ் வெறுக்கத்தச்செயல் என்கின்றனர்.

அவரின் செல்வங்களில் மிகப் பெரும் பான்மையானவை ஹலால் என்றால் அவர் தரும் பொருள்களைப் பயன்படுத்தலாம், உண்ண லாம். அரசு தருகின்ற மானியங்களை வாங்கிக் கொள்ளலாமா? என்ற கேள்விக்கு அலீ (ரழி) அவர்கள் இப்படி பதில் கூறினார்கள். "பரவா யில்லை அது தவறல்ல, ஹராமான வருமானத் திலிருந்து தருவதைவிட அதிகமாக ஹலாலான வரவிலிருந்தே அரசு உங்களுக்கு அதை வழங்குகிறது"

மேலும் நபி (ஸல்) அவர்களும் அவர்களின் தோழர்களும் இணை வைப்பவர்களிடம் வேதக் காரர்களிடமும் கொடுக்கல் வாங்கல் செய்துள் ளனர். இத்தனைக்கும் இவர்களெல்லாம் முழுக்க முழுக்க ஹராம்களை விட்டு விலகியிருக்க மாட்டார்கள் என்று தெரிந்தே கொடுக்கல் வாங்கலில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

ஒரு விஷயத்தில் எந்த முடிவுக்கும் வர முடியாமல் குழப்பமாகவே இருந்தால் அது ஐயத்திற்கிடமானது. அதை விட்டு விடுவதே நல்லது.

இமாம் சுப்யான் அஸ்ஸவ்ரீ (ரஹ்) கூறினார் கள்... ஐயத்திற்கிடமானவை என்று ஒன்று இருப்பது எனக்கு ஆச்சரியமானதாகத் தோன்ற வில்லை. அதையெல்லாம் எப்படிவிட முடியும் என்பதே ஆச்சரியமாக இருக்கிறது.

இமாம் ஸுஹ்ரீ (ரஹ்) இமாம் மக்ஹூல் (ரஹ்) இருவரும் கூறுகின்றனர். இது ஹராம் தான் என்று தெள்ளத் தெளிவாகத் தெரியாதவரை அதை உண்பது தவறல்ல. இது ஹராம்தான் என்று தெளிவாகத் தெரியவில்லை. ஆனால் இது ஐயத்திற்கிடமானது என்று தெரிகிறது என்றால் அதையும் உண்பது தவறல்ல.

இமாம் அஹ்மது (ரஹ்) அவர்களும் இதே கருத்தையே கொண்டிருக்கிறார்கள்.

இப்னு மஹ்வூத் (ரழி) ஸல்மான் ஃபார்சீ (ரழி) உள்ளிட்ட நபித் தோழர்களும் ஐயத்திற்கிடமான வற்றை உண்ண அனுமதித்திருப்பதாக அறிவிப் புக்கள் உள்ளன.

இஸ்ஹாக் பின் ராஹவய்ஹி (ரஹ்) அவர் களும் இதை ஏற்றுக்கொள்கிறார்கள். ஹலாலான ஒரு பெரும் செல்வத்தில் சற்று ஹராம் கலந்துவிட்டால் என்ன செய்வது என்பதற்கு இமாம் அஹ்மது பின் ஹன்பல் (ரஹ்) கூறிய முடிவு "எந்த அளவுக்கு ஹராம் கலந்திருக்குமோ அந்த அளவை அப்புறப்படுத்திவிட்டு மீதியுள் ளதைப் புழங்கலாம்" என்றார்கள்.

"அதே நேரத்தில் அந்த செல்வமே குறை வானதுதான். அதில் ஹராம் கலந்துவிட்டால் அதைப் பயன்படுத்தாமல் விட்டு விடுங்கள். ஏனென்றால் இதைப் பயன்படுத்தினால் ஹராமிலிருந்து தப்பிக்க முடியாது" என்றும் கூறினார்கள்.

"இதைப் பயன்படுத்து ஹராமல்ல. தவிர்ப்பது நல்லது" என்கின்றனர் நம்முடைய சக அறிஞர்கள்.

பெரும் செல்வமோ சிறிய செல்வமோ அதில் ஹராம் கலந்திருப்பது உறுதியானால் ஹராமை வெளியேற்றிவிட்டு மீதியைப் பயன்படுத்தலாம் என்றும் நம் சமகால அறிஞர்கள் கூறுகின்றனர்.

இதே கருத்தையே ஹனஃபி மத்ஹபின் சட்ட அறிஞர்களும் இன்னும் சிலரும் கூறுகின்றனர். பிஷ்ருல் ஹாஃபீ போன்ற பேணுதல் மிக்க ஞானிகளும் இதையே கடைப்பிடித்து வந்தனர்.

இது ஹராம்தான் என்று தெளிவாகத் தெரியாத செல்வங்களைப் பயன்படுத்தலாம் என்பதே "ஸலாஃப்" எனப்படும் மூத்த முன்னோடி அறிஞர்களின் கருத்து. இமாம் ஸுஹ்ரீ (ரஹ்) இமாம் மக்ஹூப் (ரஹ்) இருவரும் இக்கருத்தையே கூறுவதாக முன்னர் கூறியிருந்தோம்.

ஃபுளைய் பின் இயாழ் (ரஹ்) அவர்களும் இக்கருத்தையே கூறியுள்ளார்கள்.

அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரழி)யிடம் ஒருவர் வந்து "எனக்கு ஒரு அண்டைவீட்டார் இருக்கிறார். வட்டியின் மூலம் வரும் வருமானத்தை பகிரங்கமாக உண்ணுகிறார். தீயவழியில் வரும் வருமானத்தை எந்தக் குற்ற உணர்வும் இல்லாமல் பயன்படுத்துகிறார். அவன் என்னை விருந்துக்கு அழைக்கிறார். நான் அந்த விருந்துக்கு செல்லலாமா?" என்று கேட்டார்.

அதற்கு "அவரின் அழைப்பை ஏற்று விருந்துக்கு செல்லுங்கள். ஏனெனில் உங்களின் மகிழ்ச்சிக்காக அது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பாவமெல்லாம் அவருக்குத்தான்" என்று இப்னு மஸ்ஊத் (ரழி) கூறினார்கள். (நூல் : முஸன்னஃப் அப்திர்ரஸ்ஸாக்)

மற்றோர் அறிவிப்பில் "என் அண்டை வீட்டார் என்னை விருந்துண்ண அழைக்கிறார். ஹராமான அல்லது தீயவழியிலான வருமானத்தை தவிர வேறெதுவும் அவருக்கு இல்லை என்பதை நான் அறிவேன். நான் என்ன செய்ய?" என்று கேட்டபோது "அவரின் அழைப்பை ஏற்றுக்கொள்ளுங்கள்" என்று பதிலளித்தார்கள் என்று காணப்படுகிறது.

இப்னு மஸ்ஊத் (ரழி) இப்படிக் கூறியதாக வந்திருக்கும் அறிவிப்பு சரியானதே என்றும் கூறும் இமாம் அஹ்மத் (ரஹ்) அவர்கள் "ஒரு மனிதன் செய்யும் பாவம் அவனது உள்ளத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் (நூல் : தப்ரான்) என்றும் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரழி) கூறியுள்ளார்களே!" என்று சொல்லித் தனக்கு இதில் மாற்றுக் கருத்து இருப்பதை வெளிப்படுத்தினார்கள்.

ஆக, எல்லா சூழ்நிலைகளையும் கருத்தில் கொண்டு பார்த்தால் இப்படி ஒரு முடிவுக்கு நம்மால் வர முடிகிறது. அது என்னவென்றால் ஐயத்திற்கிடமானவைகளை பெரும்பாலானவர்களால் (இது ஹலாலா, ஹராமா என்று) ஒரு முடிவுக்கும் வர முடிவதில்லை.

சிலரிடம் இதுபற்றிய கூடுதல் விளக்கம் மூலம் தெளிவும் இருப்பதால் அவர்கள் (இது ஹலால் என்றோ ஹராம் என்றோ) ஒரு முடிவுக்கு வந்து விடுகின்றனர்.

உண்மைதான், இது விஷயத்தில் எல்லோராலும் தெள்ளத் தெளிவான முடிவுக்கு வர முடியாது என்பதை நபி மொழியும் உறுதி செய்கிறது.

நபி (ஸல்) கூறினார்கள் : நிச்சயமாக ஹலால் எது ஹராம் எது என்பது தெளிவாகிவிட்டது. இவ்விரண்டுக்குமிடையே ஐயத்திற்கிடமானவையும் உண்டு. பெரும்பாலானவர்கள் இவற்றைத் தெளிவாக அறிந்திருக்க மாட்டார்கள்... (நூல் புஹாரீ, முஸ்லிம்)

(இந்த நபிமொழி முழுமையாக முன்னர் கூறப்பட்டிருக்கிறது. இதில், பெரும்பாலானவர்கள் இவற்றைத் தெளிவாக அறிந்திருக்க மாட்டார்கள் என்று கூறப்பட்டிருக்கிறது)

பெருமானாரின் (ஸல்) இவ்வாறு கூறியிருப்பதன் மூலம் 'சிலர் அவற்றை தெளிவாக அறிந்திருப்பார்கள்' என்று விளங்க முடிகிறது.



# கற்காலம் ஒரு வரலாற்றுப் பொய்

புகழ்பெற்ற பரினாமவியலாளரும் புதைபடிம இயல் ஆய்வாளருமான ஜே கௌல்ட் தன்னுடைய விமர்சனத்தில் இப்பெயரை “Just so Stories” பயன்படுத்தியுள்ளார். இப்பெயரை பிரிட்டன் எழுத்தாளரும், கவிஞருமான ருட்யார்ட் கிப்லிங் *(1865-1936) 1902-* இல் எழுதிய புத்தகத்தில் இருந்து கடன் பெற்றுள்ளார். இது குழந்தைகளுக்கான கதைப் புத்தகம். கிப்லிங் இப்புத்தகத்தில் உயிருள்ள பொருள்களின் உறுப்புகளும் பண்புகளும் எவ்வாறு உருப்பெற்றன என்பதற்கு கற்பனை கதைகளை கூறியுள்ளார்.

**உதாரணமாக யானையின் தும்பிக்கை குறித்து எழுதிய கதை :**

ரொம்ப நாள்களுக்கு முன்னாடி யானைக்கு தும்பிக்கையே இல்லையாம். கருமையான, புடைத்த மூக்கு மட்டும் இருந்ததாம். ஆனா இன்னொரு யானை இருந்ததாம். அது அந்த யானையோட குட்டி. அது எப்ப பார்த்தாலும் கேள்விக் கேட்டு கிட்டே இருக்குமாம். அது தூரமா போயிடுச்சாம். முதலையை பார்க்கிற துக்கு ஆற்றின் அருகில் முதலையை பார்த்துச் சாம். குட்டி யானை தன்னோட தலையை குனிந்து முதலைக்கிட்ட போன உடன் முதலை தன்னோட மூக்க வைச்சு யானையை புடிச்சி தாம். குட்டி யானை தன்னோட இடுப்பை பின்னாடி தள்ளி வைச்சு தன்னோட தலையை இழுத்துச்சாம். அப்படியே இழுக்க இழுக்க அதனோட மூக்கு நீண்டு போயிடுச்சாம்.

இந்த இலக்கியத்தை கௌல்ட் மற்றும் பிற பரிணாமவியல் அறிவியலாளர்கள் விமர்சனம் செய்துள்ளனர். அவ்விலக்கியத்தில் ஒரே மாதிரி கதைகள் இருப்பதாகவும், இக்கதைகளுக்கு உதவி செய்ய எந்த வித சான்றுகளும் இல்லை எனவும் விமர்சித்துள்ளனர். சமூகங்களின் வளர்ச்சிகளை பரிணாமத் தத்துவத்தின் அடிப்படையில் விளக்குபவர்களுக்கும் இதே விமர்சனம் பொருந்தும்.

கிப்லிங்கின் கதையைப் போன்றே மற்ற பரிணாம அறிவியலாளர்களும் முழுக்க முழுக்க கற்பனையை சார்ந்து இருக்கின்றார்கள். மனிதன் பண்டைய காலத்தில் முரட்டு கற்களை பயன்படுத்தினான். உறுமல் சப்தத்தை வெளிப் படுத்தினான். குகைகளில் வாழ்ந்தான். வேட்டை யாடி சேகரித்து உயிர் வாழ்ந்தான், பின்னர் படிப்படியாக வளர்ச்சியடைந்தான். அவனு டைய மூளைத் திறன் அதிகரிக்கவே சமூக உறவு களை வலுப்படுத்த தொடங்கினான். மேலே கூறிய கதைக்கும் யானைக்கு தும்பிக்கை வந்த கதைக்கும் எந்த வித வித்தியாசமும் இல்லை.

கௌல்ட் இந்த அறிவீனமான அணுகுமுறையை பின்வருமாறு விளக்குகிறார்.



இவை அனைத்தும் கதைகளே என்பது அறிவி யலாளர்கள் நன்கு அறிவார்கள். துரதிருஷ்டவச மாக இக்கதைகள் மிகவும் நேர்த்தியான இலக்கியமாக படைக்கப்பட்டுள்ளது. எனவே இவைகள் மிக அதிகமாக கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. அதன் பிறகு இவை உண்மை சம்பவங்கள் போன்று வெளியுலக இலக்கியத்தில் மாறுகிறது,

ஒரு கல். அதாவது அடியில் ஒரு கனமான கல் மேலே ஒரு கணம் குறைந்த கல்லை தாங்கும் வகையில் மிக நேர்த்தியாக வைக்கப்பட்டுள்ளது. கட்டமைப்பின் மேலே மத்தியில் அறுகோண வடிவ புகை போக்கியும் காணப்படுகிறது. இந்த புகை போக்கியின் மேலே நமது விருப்பத்திற்கு ஏற்றவாறு திறந்து மூட ஒரு மூடியும் காணப் படுகிறது.



நிச்சயமாக இந்த இராட்சத கட்டமைப்பை கட்டியவர்கள் பொறி யியலை நன்கு புரிந்தவர்களாகவும் கணக்கீடுகளை துல்லியமாக செய்பவர் களாகவும், சரியாக திட்டமிடுபவர்களா கவும், அதிக எடை கொண்ட கற்களை போக்குவரத்து மாற்றம் செய்பவர்களா கவும், தங்களுடைய கட்டிடங்களை எவ்வாறு சரியான முறையில் பயன் படுத்த வேண்டும் என்று அறிந்தவர் களா கவும் இருந்துள்ளனர்.

பரிணாமவியலாளர்களால் இவை எவ்வாறு எழுப்பப்பட்டன என்று கூறமுடியவில்லை. அவர்களின் கருத்துப்படி அக்கால மக்கள் இவ்வளவு பெரிய சின்னங்களை உருவாக்க இயலாதவர்கள்.

மேலும் இக்கதைகள் பரிணாமத் தத்துவத் தில் எதையும் நிரூபிக்கவில்லை என கௌல்ட் கூறுகிறார்.

## Newgrange:

டுப்லின் என்ற இடத்திற்கு (அயர்லாந்த்) அருகே காணப்படும் இந்த கல்லறை சின்னம் சுமார்3200BCE-ஆண்டில்கட்டப்பட்டுள்ளதாக கருதப்படுகிறது. எகிப்தியன், பாபிலோனியன் மற்றும் கர்டன் (Cretan) நாகரீகத்திற்கு முன்னரே இது கட்டப்பட்டுள்ளது. பிரசித்தி பெற்ற கற்கட்டமைப்பான Stonehenge கூட அப்பொழுது எழுப்பப் படவில்லை. Newgrange ஒரு கல்லறை மட்டுமல்ல. அதனை கட்டி எழுப் பியவர்கள் வானியலில் முழுமையான அறிவை பெற்றிருந்திருக்கிறார்கள். மேலும் கட்டட விய லிலும் பொறியியல் தொழில் நுட்பங்களிலும் தனித்ததொரு அறிவை கொண்டிருந்திருக் கிறார்கள்.

தலைசிறந்த கட்டடவியலாளர்கள் Newg range-ஐ தொழில் நுட்ப அதிசியம் என்கின்ற னர். உதாரணமாக, அவற்றில் அந்த கட்டமைப் பின் மேல் காணப்படும் கூரைகள் (மாடம்) ஒரு பொறியியல் அதிசியம். கீழே ஒரு கல் மேலே

இக்கட்டமைப்பில் காணப்படும் வானி யலை குறித்த பகுதிகள் வியப்பூட்டக்கூடியவை. குளிர்காலங்களில் இந்த இராட்சத சின்னங்களின் உள்ளே சூரிய ஒளி சென்று பிரகாசிக்குமாறு இவை கட்டமைக்கப்பட்டுள்ளது. வருடத்தின் குறுகிய நாளின் , பிற்பகல் முடிந்த அடுத்த கணத்தில், சூரிய ஒளியின் ஒரு பகுதி Newgrage கல்லறையில் பட்டு ஒளிர செய்கின்றன. இவ் விடத்தில் சூரிய ஒளியினால் ஏற்படும் விந்தை களை காணலாம். நுழைவாயிலில் காணப்படும் கூரையின் அடிப்பகுதியில் உள்ள மெல்லிய துவாரத்தின் வழியாக சூரிய ஒளி உள்ளே புகுந்து உள்அறையை ஒளிர செய்கின்றன.

எல்லா கற்தூண்களும் சூரிய ஒளியை உள்ளே அனுமதிக்கும் அளவுக்கு சாய்வாகவும், அவற்றை பிரதிபலிக்குமாறும் கட்டப்பட்டுள்ளது.

எனவே இதனை கட்டியவர்கள் பொறியிய லில் மட்டும் அறிவை பெற்றிருக்கவில்லை.

நாள்களின் நீளத்தையும், சூரியனின் சுழற்சியையும் கணக்கிடும் அளவிற்கு வானியலிலும் அறிவை பெற்றிருந்திருக்கின்றனர்.

அவ்விடத்தில் எழுப்பபட்டிருந்த எண்ணற்ற கற்களினாலான கட்டமைப்புகளில் இன்றும் காணப்படக்கூடிய ஒன்று தான் Newgrange. இந்த கட்டமைப்புகளை உற்று நோக்கினால் இதை எழுப்பியவர்கள் அறிவு மிகுந்தவர்களாகவும், உயர்ந்த தொழில்நுட்பங்களை பயன்படுத்த கூடியவர்களாகவும் இருந்திருக்கிறார்கள் என்ற முடிவுக்கு வரலாம். இவர்களின் வாழ்க்கை நடைமுறையை பற்றி என்ன விளக்கங்கள் நம்மால் கொடுக்க முடியும்?

இந்த கட்டமைப்பை எழுப்பியவர்கள் சொகுசான வாழ்க்கையையும், நாகரீக சுற்று புறங்களையும் கொண்டிருக்கலாம். அவர்கள் வானியல் நிகழ்வுகளை புரிந்து அதற்கேற்றவாறு வடிவமமைத்து இருப்பதால் அவர்களின் வாழ்க்கை முறையும் அதற்கேற்றவாறு நாகரீக மடைந்ததாகவே இருந்திருக்கும்.

சொகுசான வீடுகள், நன்கு பராமரிக்கப் பட்ட தோட்டங்கள், சிறந்த மருத்துவமனை களில் இருந்து சிகிச்சைகள், வணிகத்தில் ஈடுபாடு, கலை மற்றும் இலக்கியத்தில் கவனம், முக்கிய மான கலாச்சார பாரம்பரியங்கள் அடங்கிய கொண்டாட்டம் ஆகியவற்றை கொண்ட சமூகங்களே இம்மாதிரியான கற்களினால் ஆன நினைவு சின்னங்களை எழுப்பியிருக்கலாம். இந்த ஏற்றுக்கொள்ளத்தக்க விளக்கங்கள் அனைத்துமே தொல்பொருள் இயல் கண்டு பிடிப்பின் அடிப்படையிலும் வரலாற்று உண்மை நிகழ்வுகளின் அடிப்படையிலும் கூறப்பட்டவை.

**STONEHENGE:**

இந்த நினைவு சின்னம் இங்கிலாந்தில் உள்ளது. கிட்டதட்ட 30 பெரிய கற்தூண்கள் இங்கே வட்டவடிவமாக நிறுத்தி வைக்கப்பட் டுள்ளன. ஒவ்வொரு தூண்களும் சுமார் 4.5 மீட்டர் உயரமும் 25 டன் எடையும் கொண் டவை. இந்த நினைவு சின்னம் சிறந்த ஆராய்ச்சி யாளர்கள் பலரின் கவனத்தை ஈர்த்துள்ளது. இவை எதற்காக மற்றும் ஏன் எழுப்பப்பட்டுள்ளது என்பது தொடர்பாக அதிகமான கோட்பாடுகள் மொழியப்பட்டுள்ளன. இந்த கோட்பாடுகள் சரிதானா என்பது இங்கே முக்கியத்துவம் பெற வில்லை. மாறாக இந்த சின்னங்கள் மறுபடியும் மனித வரலாற்றில் பரிணாமம் என்ற கொள் கையை தவறு என்று நிரூபணம் செய்கிறது.

2800 BCE-யில் ஆரம்பித்து மூன்று கட்டமாக இவை கட்டப்பட்டுள்ளன என்று ஆராய்ச்சிகள் வெளிபடுத்தியுள்ளன. அதாவது இதற்கான கட்டமைப்பு பணி சுமார் 5000 வருடங்களுக்கு முன்னிருந்து தொடங்குகிறது. இதன் முதல் கட்டமாக, வாய்க்கால் வரப்பு களை வெட்டுதல், வெண்பாறைகளில் வட்ட வடிவ குழி தோண்டுதல் ஆகியன நடை பெற் றுள்ளன. இரண்டாம் கட்டமாக, நிலப்பரப்பின் மையப்பகுதியை சுற்றி இரண்டு வளையங்களில் சுமார் 80 நீலநிற கற்கள் வைக்கப்பட்டுள்ளன.

மேலும் இதற்கு வெளியே (HEEL STONE) குதிகற்களும் வைக்கப்பட்டுள்ளன.



அதன் அடுத்ததாக தொடர்ச்சி யான சன்னலின் மேற்பாகங்களுடன் வெளிப்புறத்தில் வட்டமாக ஒரு வகை சார்சண் கற்கள்(அரிப்பு சமவெளியில் நிலைத்த பாறை) பொருத்தப் பட்டுள்ளன.

இந்த நினைவு சின்னத்தில், குறிப்பிடத்தக்க அம்சம் என்னவெனில் நீலநிற கற்களின் பயன்பாடாகும். ஏனெனில் இக்கற்கள் சுற்று வட்டாரங் களில் கிடைப்பதற்கான ஆதாரமே இல்லை. சுமார் 380 கிலோ மீட்டர் (240 மைல்கள்) தொலைவில்

இருக்கும் பிரசெலி மலையில் இருந்து இக்கற்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. ஒருவேளை பரிணாமவியலாளர்கள் கூறுவது போல அக்கால மக்கள் மரங்கள் மற்றும் கற்களினாலான கருவி களை பயன்படுத்தி கொண்டு நாகரீக முதிர்ச்சி யற்ற வாழ்கையை வாழ்ந்திருந்தால், அவர்களால் எவ்வாறு STONEHENGE-இல் இருக்கும் கற்களை வெளியில் இருந்து கொண்டு வந்திருக்க இயலும்?

பண்டைய காலத்தில் பயன்படுத்தியிருக் கலாம் எனக் கருதப்படும் கருவிகளை மறு உருவாக்கம் செய்து, நீல நிற கற்களை STONE HENGE இருக்கு இடத்திற்கு கொண்டு வர ஆராச்சியாளர்களின் ஒரு குழு முயற்சிகள் மேற்கொண்டது.

மரத்தினால் ஆன வளைவு அச்சுகளையும், சக்கரங்களையும் இதற்காக பயன்படுத்தினர். ஆனால் அவர்களின் முயற்சிகள் வீணாகவே அமைந்தன. இது நீல நிற கற்களை STONE HENGE இருக்கும் இடத்திற்கு கொண்டு வர மேற்கொள்ளப்பட்ட ஒரு வகை சோதனை தான். மற்றும் சிலரும் இந்த முயற்சிகளை மேற் கொண்டனர். எனினும் இந்த முயற்சிகளில் ஒன்று கூட வெற்றி பெறவில்லை.

இங்கே கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய மற்றுமொரு உண்மை என்ன வெனில் (மேற்கொள்ளப்பட்ட) இந்த பரிசோதனையில் தற்கால தொழில்நுட்பமும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

கடற்படைகளுக்குரிய கப்பல் கட்டும் துறையில் தயாரிக்கப்பட்ட பொருள்களும், உயர்ந்த நுட்பங்களை கொண்ட தொழிற் சாலை களில் உருவாக்கப்பட்ட கயிறுகளும் விரிவான திட்டங்களோடும், கணக்கீடுகளோடும் இதில் பயன்படுத்தப்பட்டன. எனினும் அவர்கள் எந்த நேர்மறையான முடிவையும் எட்டவில்லை. இவ்வாறு இருந்த போதிலும் 5000 வருடத்திற்கு முந்தைய மக்கள் பல டன் எடை கொண்ட இக்கற்களை போக்குவரத்து செய்தும், புவியியல் நிலைகளை துல்லியமாக கணக்கிட்டும் அவற்றை வட்ட வடிவிலும் அமைத்துள்ளனர்.

**இன்ஷா அல்லாஹ் தொடரும்**

**- அபூஹாசின்**


# ஹிஜாமா (நபி வழி சிகிச்சை)

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் "நீங்கள் எவற்றால் சிகிச்சை பெறுகிறீர்களோ அவற்றிலெல்லாம் விட சிறந்தது இரத்தம் உறிஞ்சி (ஹிஜாமா) எடுப்பதாகும்" என்று கூறினாரர்கள்.

( முஸ்லிம் )

## அல்-கர்ளாவி அக்குபஞ்சர் & ஹிஜாமா கிளினிக்

இடம் : பாரத் நகர் 4வது வீதி, சாரமேடு, கரும்புக்கடை, கோவை -8.

கிளை : L.M.R. வீதி, சின்ன பள்ளிவாசல் எதிரில், கோட்டைமேடு, உக்கடம், கோவை -1.

**உடல் மற்றும் மனம் சம்மந்தமான அனைத்துப் பிரச்சனைகளுக்கும் ஹிஜாமா செய்யப்படும்.**

பெண்களுக்கு பெண் தெரஃபிஸ்ட் மூலம் சிகிச்சை அளிக்கப்படும்.

தொடர்புக்கு : எஸ்.உமர் M.DAT., : 96 55 811 811, 97 89 473 999



# பாபர் மசூதியில் ராமன் குதித்த வரலாறு..!

**அயோத்தி: இருண்ட இரவு**

வரலாற்றில் பல்வேறு சமூக காரணங்களால் தோற்றுவிக்கப்படும் பாரதூரமான முரண்பாடுகளை, குறிப்பிட்ட சமூகம் தீர்க்காத வரையில் அது ஆறாத வடுவாக மட்டுமல்ல உடலுக்கு கேடு விளைவிக்கும் ஆழமான புண்ணாகவும் அழுகிக் கொண்டிருக்கும்.

சுவாரஸ்யத்தை படைப்பதான முகாந்திரத்தில், திட்டமிட்டே அரசியல் நீக்கம் பெற்ற அல்லது மக்களுக்கு எதிரான அரசியலின் எழுத்துக்களால் மக்களை பாதிக்கும் சமூக பிரச்சினைகளை ஒருக்காலும் உள்ளன்போடு தொட முடிந்ததில்லை. மார்க்சிய / சமூகவியல் ஆய்வு நூல்களே அந்த பணியை நிறைவு செய்து வருகின்றன.

கிருஷ்ணா ஜா மற்றும் திரேந்திர கே. ஜா ஆகிய இரு பத்திரிக்கையாளர்களின் பெரு முயற்சியில்வெளிவந்துள்ள'அயோத்தி: இருண்ட இரவு' என்ற நூல் இந்த உண்மையை உணர்த்தும் உரைகல் எனலாம். பாபர் மசூதிக்குள் ராமன் தோன்றிய ரகசிய வரலாறை சரியாகச் சொன்னால் சதியை, ஒரு புனைவுக்குரிய நீரோட்டத்துடன் நமக்கு உரைக்கும் அதே நேரத்தில் அதோடு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளையும், மனிதர்களையும் அரசியல் துணிவோடு அடையாளம் காட்டுகிறது.

*1992*-ல் இடிக்கப்பட்ட பாபர் மசூதியின் கலவர விதை நாற்பத்தி மூன்று ஆண்டுகளுக்கு முன்பே ஊன்றப்பட்டது. *1949*-ம் வருடம் டிசம்பர் மாதம் *22*-ம் தேதி நள்ளிரவில் திருட்டுத்தனமாக பாபர் மசூதியின் சுற்று சுவரை ஏறிக் குதித்து, அதன் வாயில் கதவை உடைத்து குழந்தை ராமன் சிலை நிறுவப்பட்டது. ராமன் சிலையை மசூதிக்குள் கொண்டு ஓடியவர் ஒரு சாது. வைணவ அகோரியான அவரது பெயர் அபிராம் தாஸ்.

**'அயோத்தி: இருண்ட இரவு'** நூல் அபிராம் தாஸின் இறப்பிலிருந்து நம்மை பின்னோக்கி அழைத்து செல்கிறது. உணவுக்கே சிரமப்பட்ட தனது யதார்த்த நிலையிலிருந்து தப்பித்து, துறவு நிலை தரும் சில சௌகரியங்களுக்காக துறவியானவர் அபிராம் தாஸ். மசூதிக்குள் ராமன் சிலையை நிறுவிய அபிராம் தாஸுக்கு சில தனிப்பட்ட கணக்குகள் இருந்தன. பாபர் மசூதி இடிக்கப்பட்டு ராமன் கோயிலாக மாறினால் கிடைக்கும் காணிக்கையும், வருமானமும் பற்றியே அவரது சிந்தை சுழன்றது. இது அவரை மேலும் மேலும் இந்து மகா சபையின் திட்டத்துக்குள் உந்தித் தள்ளியது.

அபிராம் தாஸுடன் பாபர் மசூதிக்குள் நுழைய இருந்தவன் ராமச்சந்திர பரமஹன்ஸ் என்ற அயோத்தி நகர இந்து மகா சபை தலைவன். இறுதி நேரத்தில் அபிராம் தாஸை தனித்து விட்டு விட்டு அதே காலத்தில் கொல்கத்தாவில் நடந்த இந்து மகா சபை மாநாட்டிற்கு சென்று விட்டான். பரமஹன்ஸின் முடிவு அதிர்ச்சி அளித்தாலும், தனது ஒன்று விட்ட சகோதரரின்

துணையுடன் இந்த சதிகார பணியை செய்து முடித்தார், அபிராம் தாஸ்.

பாபர் மசூதி இடிப்பை போன்றே மசூதிக்குள் சிலையை நிறுவியதும் விரிந்த அரசியல் சதித் திட்டத்தின் பகுதியே. அதனை அபிராம் தாஸின் தனிப்பட்ட ஆதாய நோக்கத்தில் விளைந்தது என்று மட்டும் சொல்ல முடியாது. காந்தி கொலையால் முடங்கியிருந்த இந்து மகா சபை-ஆர்.எஸ்.எஸ் தனது எதிர்கால நடவடிக்கை களுக்கு மக்களின் அங்கீகாரம் தேவை; இல்லை யேல் தனிமைப்பட நேரும் என்ற ஆபத்தை உணர்ந்திருந்தது. அப்போது ஆர்.எஸ்.எஸ்-க்கு சொல்லிக்கொள்ளுமளவு பெரிய செல்வாக்கு கிடையாது.

என்ன செய்தாவது இந்துக்களை திரட்ட வேண்டிய பதட்டத்தில் இருந்தார்கள். தனது சதி நோக்கத்தை மக்களிடம் மறைக்கின்ற அதே நேரத்தில், அந்த சதியையே மாபெரும் பொற்கால மீட்பு நடவடிக்கையாக பேசுவதற்கு அவர்கள் கற்றுக் கொண்டார்கள். இது காந்தி கொலையிலிருந்து கற்றுக்கொண்ட பாடம் என்கிறார்கள் நூலாசிரியர்கள். காந்தி கொலை பகலில் செய்யப்பட்டது என்றால் பாபர் மசூதிக் குள் ராமன் சிலையை நிறுவும் குற்றச் செயல் இரவிலே நிகழ்த்தப்பட்டது.

பாபர் மசூதிக்குள் ராமன் சிலை நிறுவப்படு வதற்கு முன் உள்ள சூழல் பற்றிய நூலின் பதிவு முக்கியமானது. அது நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தலின் போது மோடியின் பிரச்சார உத்தியை பல வகைகளில் நினைவு படுத்தும் ஒன்று. பா.ஜ.க என்றொரு அரசியல் கட்சி அப்போது இல்லாத நிலையில் அந்த வெற்றிடத்தை காங்கிரசே பூர்த்தி செய்தது.

அயோத்திக்கு ஒரு இடைத்தேர்தல் வருகிறது. காங்கிரஸில் ஐக்கியமாகியிருந்த சோசலிஸ்ட்கள் தனி அணியாக செயல்பட முடியாது என்ற நிலைமை உருவானது. இதை பயன்படுத்திக் கொண்டு காங்கிரசின் வலதுசாரிப் பிரிவு, கட்சியில் புதிய விதிகளை ஏற்படுத்தி சோசலிஸ்ட்டுகளை வெளியேற்றினார்கள். இந்த சோசலிஸ்ட்டுகள் தன்மையில் இப்போதிருக்கும் சமூக நீதிக் கட்சிகளை ஒத்தவர்கள். ஆகையால் இவர்களது பெயரில் சோசலிசம் இருப்பதை வைத்து மட்டும் முடிவு செய்ய கூடாது. அதே நேரம் இந்த பெயரவளவு சோசலிசத்தை கூட இந்துமதவெறியர்கள் பொறுத்துக் கொள்ள வில்லை. சியாமா பிரசாத் முகர்ஜி (பின்னாளில் பா.ஜ.கவின் தாய் கட்சியான ஜன சங்கத்தை தோற்றுவித்தவர்), பட்டேல் ஆகியோரின் வெளிப்படையான ஆதரவோடும் நேருவின் மவுன ஒப்புதலோடும் காங்கிரசிலிருந்து சோச லிஸ்ட்கள் வெளியேற்றப்பட்டார்கள்.

**அபிராம் தாசுதிருட்டு ராமர் சிலை வழக்கில் முதல் குற்றவாளி !**

அப்படி வெளியேறியவர்கள் காங்கிரஸ் கட்சி மூலம் பெற்ற சட்டமன்ற/அரசியல் நிர்ணய சபை உறுப்பினர் பதவிகளை உதறினார்கள். அப்படி ஒரு சோசலிஸ்டின் முடிவால் அயோத்தி நகரம் அமைந்திருக்கும் பைசலாபாத்தில் தேர்தல் வந்தது. மீண்டும் போட்டியிட்ட அவர் பெயர் ஆச்சார்ய நரேந்திர தேவ். அவருக்கு எதிராக காங்கிரஸ் சார்பில் நிறுத்தப்பட்டவர் பாபா ராகவ தாஸ். இவர் உ.பியின் முதல்வராக இருந்த கோவிந்த வல்லப் பந்தின் ஆசி பெற்றவர். வல்லப பந்த் மோடியின் ஆதர்சமான வல்லபாய் படேலின் தீவிர ஆதரவாளர்.

இந்தியாவிலே நடந்த மதவெறி ஊட்டப் பட்ட தேர்தல் பிரச்சாரங்களில் இது முன்னோடி யானது என்று சொல்லலாம். இந்து உணர்வை ஊட்டி தேர்தலில் அறுவடையை செய்து கொள்ள முடியும் என்ற நம்பிக்கையை ஆர்.எஸ். எஸுக்கு தேர்தல் முடிவு அளித்தது. நரேந்திர தேவ் ஒரு நாத்திகர்; பாபா ராகவா தாஸ் இந்துக் களுக்கு ஆதரவானவர் என்று மக்களிடம் அன்றைய உ.பி காங்கிரஸ் பிரச்சாரத்தில் ஈடுபட் டது. பாபா ராகவ தாஸை வெளிப்படையாக ஆதரித்து இந்து மகா சபையும் தீவிர பிரச்சா ரத்தை மேற்கொண்டது. தேர்தலில் தேவ் வீழ்த்தப்பட்டார்.

வெற்றி பெற்ற பாபா ராகவதாஸ் தலைமை யில் அந்த வருட அனுமன் ஜென்ம உற்சவம் விமரிசையாக கொண்டாடப்படுகிறது. அங்கு ஒரு விசித்திரமான முடிவை அறிவித்தார் ராகவதாஸ். அது இந்து மகா சபை தயாரித்த அறிக்கை. ‘அனுமன் ஜென்ம உற்சவத்தை கொண்டாடிய அதே உற்சாகத்துடன் அந்த

வருட ராமன்-சீதை கல்யாண உற்சவத்தை கொண்டாடப் போகிறோம்' என்றார். இந்த அறிவிப்பின் முதல் பகுதியை விட அதன் அடுத்த பகுதி இந்து மகா சபையின் நோக்கத்தை அறியத் தருகிறது. 'ராமன்-சீதை கல்யாண உற்சவத்தை ஒன்பது நாட்கள் நடத்துவது என்றும், ஒன்பதாம் நாள் குழந்தை ராமனை அவன் 'பிறப்பிடத்துக்கு' செல்ல பக்தர்கள் அனைவரும் கேட்டுக் கொள்வது' என்றும் அறிவித்தார், ராகவ தாஸ். அதாவது ஒன்பதாம் நாள் இவர்கள் கேட்டுக் கொள்வதை அடுத்து ராமன் எழுந்து இவர்கள் கண்ணெதிரே தனது பிறந்த இடமான பாபர் மசூதிக்குள் சென்று அமர்வாராம். மக்கள் இப்படி வித்தியாசமான 'அற்புத நிகழ்வுக்காக' ஏங்க வைக்கப்பட்டார்கள். இந்த அற்புதத்தின் மறைவிலேயோ வெறி கொண்ட ஓநாய்கள் காத்துக் கொண்டிருந்தன.

ஒன்பதாம் நாள் திருவிழாவின் இறுதியில் அவர்கள் 'எதிர்பார்த்தது' போல எதுவும் நடக்க வில்லை. குழந்தை ராமன் தானாக மசூதிக்குள் சென்று அமர்ந்து விடுவான் என்பதை மக்கள் ஏமாந்தது போல தாமும் ஏமாற, ஆர்.எஸ்.எஸ் என்ன அசடுகளின் கூடாரமா? எனில், ஆர்.எஸ். எஸின் ஏமாற்றம் தான் என்ன? தமது வெறியூட்டும் நடவடிக்கைகளுக்கு பலியாகி கூட்டத்திலிருந்து யாராவது ஒருவர் ராமன் சிலையை எடுத்துக் கொண்டு மசூதிக்குள் ஓடுவார் என்ற ஆர்.எஸ். எஸின் எதிர்பார்ப்பு தான் உண்மையில் பொய்த்து போனது. நாடகத்தின் உச்சம் தானாக அரங்கேற மறுப்பதால் திருவிழாவை மேலும் நான்கு நாட்களுக்கு நீட்டித்தார்கள். ஏமாந்த மக்களுக்கு அன்னதானம் வழங்கி ஆற்றுபடுத்தினர். பதின்மூன்றாம் நாளும் இந்து மகா சபை 'எதிர்பார்த்தது' நடக்காமல் போகவே தமது திட்டத்தை வேறுவிதமாக நிறைவேற்ற துடித்தனர்.

இதற்காக ஒரு கூட்டத்தை ஜாம்பவன் கோட்டையில் கூட்டினர். கே.கே.நாயர், இந்து மகா சபை தலைவர்கள் கோபால் சிங் விஷாரத், ராமச்சந்திர பரமஹன்ஸ், அபிராம் தாஸ் மற்றும் சில சாதுக்கள் கலந்து கொண்ட இந்த கூட்டத் திலே தான் திருட்டுத்தனமாக மசூதிக்குள் சிலையை நிறுவும் திட்டத்தை தீட்டினர். பகலில் சிலையை வைத்தால் அரசு நிர்வாகத்துடன் தேவையற்ற மோதல் ஏற்படும் என்று கே.கே நாயர் எச்சரித்தார். எனவே திருட்டுத்தனமாக சிலையை இரவில் நிறுவினால் நிர்வாக ரீதியான ஒத்துழைப்பை அளிப்பதாக கே.கே. நாயர் உறுதி அளித்தார். கே.கே.நாயரின் இந்த ஆலோ சனையை கூட்டம் ஆமோதித்தது.

இவையெல்லாம் நூலாசிரியர்களின் வளமான கற்பனைகள் அல்ல. பல்வேறு ஆவணங் கள், கடிதங்கள் மற்றும் அபிராம் தாஸின் சீடர் சத்தியேந்திர தாஸ் முதற்கொண்டு இதில் நேரடியாக சம்பந்தப்பட்டவர்களே பின்னாளில் அளித்த வாக்குமூலங்களை அடிப்படையாக கொண்டவை. மசூதிக்குள் சிலையை நிறுவும் பொறுப்பு அபிராம் தாஸிடமும், ராமச்சந்திர பரமஹன்சிடமும் (மசூதிக்குள் சிலை நிறுவப் பட இருந்த கடைசி மணித்துளியில் அபிராம் தாஸை தனியே தவிக்க விட்டுவிட்டு ஓடியவர்) ஒப்படைக்கப்பட்டது.



இங்கு முக்கியமாக நாம் அறிந்து கொள்ள வேண்டிய இன்னொரு அம்சமும் இருக்கிறது. முதலில் ஒன்பது நாட்கள் என்று தீர்மானிக்கப் பட்டு பிறகு அற்புதம் நிகழ தவறியதால் பதின் மூன்று நாட்கள் வரை நீட்டிக்கப்பட்ட ராமன்-சீதை கல்யாணம் நடைபெற்ற ராம சபுத்ரா (மேடை) எனப்படுகின்ற கூரை வேயப்படாத மாடத்தின் பின்னணி குறித்த தகவல்களை நாம் பார்க்க வேண்டும்.

இது பாபர் மசூதி வளாகத்துக்குள்ளே அமைந்திருக்கிறது. 1857-ல் ஆங்கிலேயர்களுக்கு எதிராக இந்திய சிப்பாய்களின் கலகத்தை

நாமறிவோம். ஆங்கிலேய அரசை உ.பியின் மகந்துகள் (தலைமைப் பொறுப்பு வகிக்கும் அகோரிகள்) ஆதரித்து நின்றனர். அதற்கு கைம் மாறாக ஏராளமான நிலங்களை மகந்துகளுக்கு அளித்தனர், ஆங்கிலேயர்கள். ஒரு அகோரி, பாபர் மசூதியின் அருகாமையில் சிறிது நிலத்தை வரப்பிட்டு மேடை அமைத்தார். அந்த இடத்தை அவர் கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் அவருக்கு வழங்கியது ஆங்கிலேய அரசு. இப் படிப்பட்ட துரோகிகளாக இருக்கும் அகோரிகள் தான் இந்துமதவெறியர்களின் ஆன்மீக அடியாட் படையாக இன்றும் இருக்கிறார்கள்.

09-ayothi-akshaybramachari

**பாபர் மசூதி ஆக்கிரமிப்பை தொடர்ந்து எதிர்த்த காங்கிரசின் அக்ஷய் பிரம்மச்சாரி**

ஆங்கிலேயன் வழங்கிய இடத்தை வைத்து அங்கு தான் முதலில் ராமன் பிறந்தார் என கதை கட்டி கோயில் எழுப்ப முயன்றனர். அதற்கு பைசாபாத் மாவட்ட அதிகாரி கே.கே நாயர் அனுமதி அளித்தார். கே.கே. நாயரின் உதவி யாளர் குருத்தாட் சிங் இந்துக்களும், முஸ்லிம் களும் அருகருகே வழிபாடு செய்து கொள்ளட் டும் என்று அறிவித்தார். எனினும் பைசாபாத் துணை நிலை நீதிபதி இதற்கு அனுமதிக்கவில்லை. இந்த முதல் முயற்சியே விரிந்து பிறகு பாபர் மசூதியை கபளீகரம் செய்வது என்ற நிலைக்கு இந்துத்துவ சக்திகளின் கைகளுக்கு சென்றது.

பாபர் மசூதியை இரவில் காவல் காத்து வந்த போலீஸுக்கு கையூட்டு அளிக்கப்பட்டது. பிறகு சுவரில் தொத்தி ஏறிக் குதித்து அபிராம் தாஸ் மற்றும் அவரது ஒன்று விட்ட சகோதரர் (இந்து மகா சபையின் உள்ளூர் தலைவன் ராமச்சந்திர பரமஹன்ஸ் கடைசி நிமிடத்தில் பின் வாங்கியதால் அந்த இடத்தை நிரப்பியவர்) ஆகியோர் மசூதியின் பூட்டை உடைத்தனர். அங்கு அவர்களை எதிர்கொண்ட மௌல்வி இஸ்மாயிலை அடித்து துவைத்து துரத்தினர். பிறகு விடியும் வரை காத்திருந்தனர். விடியற் காலையில் ராமன் சிலைக்கு முன்னால் தீபத்தை ஏற்றினர். அயோத்தி காவல் நிலையத்தில் பதியப்பட்ட முதல் தகவல் அறிக்கையில் 'காலையில் மசூதிகுள்ளே ஒளி தெரிந்தது; அது பொன்னிறமாக இருந்தது' என்று காலையில் மசூதியின் பாதுகாப்பை ஏற்றிருந்த போலிஸ் காரர் விவரித்திருந்தார். அயோத்தியில் ராமன் 'தோன்றியதற்கு' இதனையே ஆதாரமாகக் காண்பிக்கத் தொடங்கினர், இந்துத்துவவாதிகள்.

ராமன் தோன்றிய அற்புதத்தை காண அயோத்தி மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் இருந்து மக்கள் வந்து பார்க்க விரிவான ஏற்பாடு களை இந்து மகா சபை செய்தது. மிகவும் தாமதமாக 23-ந் தேதி 10.30 மணிக்கு கே.கே நாயர் உ.பி அரசுக்கு அயோத்தி நிலைமை பற்றி அறிக்கை அளித்தார். அதில் 'சில இந்துக்கள் மசூதிக்குள் சிலையை நிறுவி விட்டார்கள். பூசைகள் செய்து சிலையை அகற்ற எந்த பூசாரியும் முன் வரவில்லை.

எனவே சிலையை அகற்ற முடியாது' என்று அறிக்கையில் தெரிவித்தார், நாயர். இதனை சான்றாதாரங்களுடன் நூலில் தந்துள்ளனர் நூலாசிரியர்கள்.

பிள்ளையார் பால் குடித்தார், மேரியம்மா அழுதார், சாயிபாபா காலெண்டரிலிருந்து விபூதி கொட்டுகிறது என்றெல்லாம் இன்றைக் கும் இத்தகைய அற்புதங்கள் ஆங்காங்கே கடைவிரிக்கப்படுகின்றன. உள்ளூர் அளவில் வசூல் செய்ய பயன்பட்ட இந்த மோடிமஸ்தான் வேலையைத்தான் இந்துமதவெறியர்கள் அயோத்தியில் செய்தனர்.

தமிழக மீனவர்கள் சிங்கள கடற்படையால் தாக்கப்படும் போதெல்லாம் மத்திய அரசுக்கு கடிதம் எழுதி வேண்டுகோள் விடுக்கும் கருணாநிதி, ஜெயலலிதாவை போல இந்தியப் பிரதமர் நேரு, உ.பியின் பிரதமர் ( இது பகடி அல்ல; அன்று மாகாணங்களின் தலைவர்கள் பிரதமர்கள் என்றே அழைக்கப்பட்டுள்ளனர் - இந்த குறிப்பும் நூலில் உள்ளது) கோவிந்த் வல்லப் பந்திற்கு கடிதங்கள் எழுதிக் கொண்டிருந்தார்.

ஆர்.எஸ்.எஸின் சூழ்ச்சிக்கு பலியாகி பாபர் மசூதி முன்பு குவிந்திருந்த மக்களை படையை அனுப்பி வெளியேற்றி விட்டு சிலையை அகற்று வதை எதிர்த்தார், மத்தியில் உள்துறை பொறுப்பை வகித்த வல்லபாய் பட்டேல். நடவடிக்கை எடுக்க முடியாத நேருவோ 'உ.பி காங்கிரசுக்குள் மதவாதம் புகுந்து விட்டது' என்று வருணித்தார். தன் கோபத்தை உ.பியின் பிரதமர் கோவிந்த் வல்லப் பந்திற்கு உணர்த்த அவரை சந்திக்க

பின்னாட்களில் மறுத்தார நேரு. இதைத் தாண்டி இவரால் ஒன்றும் செய்யமுடியவில்லை. இவரைத்தான் மதச்சார்பின்மையின் சிற்பி என்கிறார்கள்.

மதவெறி பிடித்தாட்டிய உ.பி. காங்கிரசில் அன்று எழுந்த நிதானக் குரல் அக்ஷய் பிரம்மச் சாரியினுடையது. பாபர் மசூதியின் அருகாமை யில் இருந்த ராம சபூத்ராவில் கோயில் கட்ட இந்து மதவெறியர்கள் முயன்ற போது அவர் களுக்கு எதிராக பைசாபாத் மாவட்ட அதிகாரி யான கே.கே. நாயரிடம் புகார் மனு அளித்தார். அடுத்த நாள் புகார் மனுவில் குறிப்பிட்டிருந்த வாசகங்களை சொல்லி சொல்லி அக்ஷய் பிரம்மச்சாரியை உதைத்துள்ளனர், இந்து மகா சபையினர். பாபர் மசூதியின் அருகாமையில் இருந்த கல்லறை தோட்டத்தை இந்து மத வெறியர்கள் சிதைத்த போதும் உடனடியாக அதனை அரசின் கவனத்துக்கு கொண்டு போனார், அக்ஷய் பிரம்மச்சாரி. அதன் பிறகே மசூதியை காவல் காக்க அரசு இரு காவலர்களை அனுப்பியது.

மசூதிக்குள் சிலையை வைத்த பிறகு கே.கே. நாயர் அதற்கு உடந்தையாக இருந்ததை அம்பலப் படுத்தி உ.பியின் உள்துறை அமைச்சராக இருந்த லால்பகதூர் சாஸ்திரிக்கு விடாமல் கடிதங்கள் எழுதிக் கொண்டிருந்தார். ஒரு கட்டத்தில் அயோத்தியில் இருந்தே துரத்தப்பட்டார் பிரம்மச்சாரி. என்றாலும் இந்து மகா சபையின் பல்வேறு நடவடிக்கைகளை தன்னந்தனியாக எதிர்த்தார். இறுதியில், மசூதியை கோயிலாக மாற்றும் முயற்சிக்கு எதிராக சாகும் வரை உண்ணாவிரதம் இருந்தார். இங்கு நான் குறிப்பிட்டிருக்கும் தகவல்கள் நூலை பற்றிய ஒரு பார்வை மட்டுமே.

தமது அளப்பரிய தகவல்களால் குறிப் பிட்ட அந்த காலகட்டத்தில் வாழ்ந்த ஒரு அனு பவத்தை நூலாசிரியர்கள் தருகிறார்கள் என்றால் அது மிகையில்லை. சாவர்க்கர், டி.ஜி. தேஷ் பாண்டே, மகந்த் திக் விஜய் நாத் உட்பட இந்து மகாசபை தலைவர்களின் எண்ண ஓட் டத்தையும், நடவடிக்கைகளையும் பல்வேறு ஆவணங்கள், ஆதாரச் சான்றுகள் மூலம் இந்தியாவின் இளைய தலைமுறை மதச்சார் பின்மையின் முக்கியத்துவத்தை எதிர்மறையில்



புரிந்து கொள்ள தந்து உதவியிருக்கிறார்கள், நூலாசிரியர்கள்.

பாபர் மசூதிக்குள் ராமன் சிலையை வைக்க தனது வலைபின்னலில் இருந்த கீழ்நிலை ஊழியர் களை கொண்டு தேர்ந்த திட்டமிடலுடன் செய்து முடித்த இந்து மகா சபை, அதே ஆண்டின் ராம நவமியை சிறப்பாக கொண்டாடியது. உ.பியின் மொரதாபாத்தில் பேசிய இந்து மகா சபையின் தலைவர் என்.பி காரே இவ்வாறு குறிப்பிட்டார். "காந்தி ஜெயந்திக்கு கூடியவர் கள் வெறும் இருநூறு பேர். ஆனால், இந்து மகா சபையின் கூட்டத்துக்கு இங்கு திரண்டிருப்போர் இருபதாயிரம் பேர்" (பக்க எண்: 159) என்றார்.

அக்ஷய் பிரம்மச்சாரி தனித்து போராடியதற்கும், இந்து மகா சபை தலைவரின் இந்த கூற்றுக்கும் இடையே இருக்கும் நெருங்கிய பிணைப்பில் காலம் உருண்டோடியது. இந்து மதவெறியை மாய்க்கும் போராட்டத்தை வலு விழக்க அன்று காங்கிரஸ் நேரடியாக ஒத்துழைத் தது; இன்று தனது பொருளாதார கொள்கைகளால் மறைமுக உதவியை செய்திருக்கிறது. காங்கிரஸ் வேறு பா.ஜ.க வேறல்ல என்ற உண்மையை மக்கள் உணரும் போது மட்டுமே இந்தியாவில் இந்துமதவெறி முற்றிலும் ஒழிக்கப்படும். அது வரை பார்ப்பனியத்திற்கு எதிரான போராட்டம் தொடர்ந்து நடப்பதற்கு கருத்தளவில் இந்நூல் உதவி செய்யும்.

புதிய கலாச்சாரம் இதழிலில் இதன் ஆங்கில நூல் அறிமுகக் கட்டுரையை பார்த்து விட்டு (இதை முன்னுரையில் புதிய ஜனநாயகம் இதழ் என்று தவறாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.) “விடியல் பதிப்பகம்” இதனை உரிய அனுமதி யுடன் தமிழாக்கி தந்திருக்கிறது. அதற்காக விடி யலுக்கு நன்றி. அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டிய அவசியமான நூல் இது.

**- உவைஸ்**

பகுதி-2

# நிர்வாக இயலின் தந்தை ஷெர்ஷா சூரி



ஜனவரி மாத தொடர்ச்சி...

1540ம் ஆண்டு தன்னை ஷெர்ஷா என்று அழைத்துக் கொண்ட ஷேர்கானிடம் மிகப்பெரியதொரு நிலப்பரப்பும் தன்னை எதிர்க்கும் எந்தவொரு பெரிய எதிரியும் இல்லையென்றதொரு ஒரு நிலையும் உருவானது.

வடக்கில் இமயம் தொடங்கி தெற்கில் வங்கக்கடலின் எல்லை வரையும் பீகாரில் தொடங்கி மேற்கில் அசாம் வரையும் ஷேர் கானின் ராஜ்ஜியம் விரிவடைந்திருந்தது. சுருக்க மாக சொல்வதென்றால் இன்று இந்துத்துவ வாதிகள் பாஷையில் ஒன்றுபட்ட இந்தியா, இமயம் முதல் குமரி வரை ஷேர்கான் ராஜ்ஜியம் பரவியிருந்தது என எடுத்து கொள்ளலாம்.(இந்த ஒன்றுபட்ட இந்தியா ஒரு முஸ்லிம் அரசரால் உருவாக்கப்பட்டது என்ற எண்ணமே இன்று அவர்களை பேச தூண்டிருக்கலாம். அந்த வகையில் இதற்கும் முன்னோடியாக ஷெர்ஷா இருந்திருகிறார்.)

மிகபழங்குடி இனமான பஷ்டு இனம் ஆப்கான் பாரம்பரியத்தை சேர்ந்தது. ஷெர்ஷாவுக்கு முன்பு வரை ஒடுக்கப்பட்ட ஓர் இனமாகவே இருந்து வந்தார்கள். இவர்களில் ஒருவர் கூட ராஜ்ஜியங்களுக்கு தலைவராக இருந்ததில்லை. ஷெர்ஷா ஆட்சிக்கு வந்ததும் தங்களது இனத் தில் இருந்து ஒரு பேரரசர் உருவானார் என்ற மகிழ்சசி அவர்களுக்கு. ஷெர்ஷாவும் சிறு வயதி லிருந்தே ஆப்கானியர்களின் சுதந்திர போராட்ட வரலாறுகளை படித்து விட்டு தான் தனது வீரத்தை மெருகேற்றினார் என்றதொரு குறிப்பும் உள்ளது. ஒடுக்கப்பட்ட பழங்குடி இனத்திலிருந்து வந்த ஒரு ஆட்சியாளர் எப்படி அனைவருக்கும் பொதுவான ஆட்சியாளராக இருப்பார் என்ற கருத்தை பொய்ப்பிக்கவைத்தார் ஷெர்ஷா.

**ஷெர்ஷாவின் ஆட்சியின் நிர்வாக சீர்திருத்தங்கள்:**

**நாணய நிர்வாக முறை**

ஷெர்ஷாவிற்கு முன்னர் ஆண்ட சில மன்னர் கள்கூட நாணயங்களில்தங்கள்உருவங்களையோ சின்னங்களையோ பயன்படுத்தி இருக்கிறார்கள். ஆனால் அந்த நாணயங்கள் ஒவ்வொரு சமஸ் தானத்துக்கு ஒன்றாக இருந்தது. அதாவது, உதாரணத்திற்கு தமிழ்நாடு சமஸ்தானத்தில் செல்லும் நாணயங்கள் அருகில் உள்ள கேரள சமஸ்தானத்தில் செல்லாது. ஆனால் இம்முறையை ஷெர்ஷா மாற்றினார்.

ஒட்டுமொத்த தன் பேரரசுக்கும் ஒரே நாணய பண்டமாற்று முறையை ஏற்படுத்தி ரூபாய் என்று பெயரிட்டு மக்களிடம் பரவச் செய்தார். அன்று வரை ஒவ்வொரு சமஸ்தானத்துக்கும் இடையில் பொருள்கள் மூலம் பண்டமாற்று முறை நடந்து கொண்டிருந்தது போய் நாணய முறை பண்டமாற்றம் மேற்கொள்ளப்பட்டது. இதன் மூலம் யாரும் எதிர்பார்க்காத அளவு அரசாங்க கருவூலம் நிறைந்தது. மக்களின் வாழ்வாதாரம் அடுத்த பரிணாமத்திற்கு நகர்ந்தது என்றும் கூட சொல்லலாம்.

ஷெர்ஷாவால் ரூபாய் என்று வழங்கப்பட்ட பெயரே இந்தியா, பாகிஸ்தான், வங்காளம், நேபாளம், இலங்கை, மாலத்தீவு, இந்தோ னேஷியா போன்ற நாடுகளிலும் மொரீஷியஸ், சியசெஸ் தீவுகளிலும் இன்றளவிலும் வழங்கப்

பட்டு வருகிறது.

**மத்திய - மாநில - மாவட்ட நிர்வாக முறை**

ஷெர்ஷா தனது ஆட்சிக்குட்பட்ட நிலப் பரப்பை 47 பிரிவுகளாக பிரித்தார். இன்றைய மொழியில் சொல்வதென்றால் 47 மாநிலங்களாக பிரித்தார். (சில வரலாற்றாசிரியர்கள் 66 பிரிவுகளாக பிரித்தார் எங்கின்றனர்). இதற்கு சர்க்கார் என்று பெயர். 47 சர்க்காராக பிரித்து ஒவ்வொரு பகுதியிலும் தனித்தனியாக எல்லை களை பிரித்து பர்கானாக்களை ஏற்படுத்தினார். பர்கானா என்பது இன்றைய மாவட்ட நிர்வாகத்தை ஒத்தது.

இந்த பர்கானாவை கண்காணிக்க ஷேக்தார்-இ-ஷேக்தாம், முன்சீப்-இ-முனிசிஃபான் என்ற பிரிவுகளை ஏற்படுத்தினார். இப்பிரிவு இன்றய தாசில்தார்களின் பதவிக்கு ஒத்துப்போகக் கூடியது. இப்பிரிவிலேயே ஷேக்தார்-இ-ஷேக்தாம் முதல் தர பணியாளராகவும்,முன்சீப்-இ-முனிசிஃபான் அடுத்த தரத்தில் உள்ளவர் களாகவும் இருந்தனர். இந்த பிரிக்கும் முறை களை ஷெர்ஷாவே நேரடியாக இருந்து நெறிப் படுத்தினார்.

ஒவ்வொரு பர்கானாக்களுக்கும் ஒரு ராணுவ அலுவலர், ஒரு கருவூல அதிகாரி, ஒரு நீதிபதி, இரண்டு கணக்காளர்கள் என ஒரு ஒழுங்கான கட்டமைக்கப்பட்ட ஒரு நிர்வாக முறையை அறிமுகப்படுத்தினார். ஷெர்ஷாவின் ஆட்சியில் மட்டும் ஒரு லட்சத்து முப்பதாயிரம் பர்கானாக்கள் இருந்ததென்றால் கற்பனை செய்து பாருங்கள் எத்தனை சிறப்பான நிர்வாக முறையை கையாண்டார் என்பது புரியும்.

**நிலவரி நிர்வாக முறை சீர்திருத்தங்கள்**

ஷெர்ஷாவிற்கு முன்னால் ஆட்சி செய்தவர் கள் அனைவரும் நிலவரி எனும் பெயரில் நடைபெற்ற நிர்வாகத்தால் மக்களின் சாபத்தை பெற்று வந்தனர்! மழை பெய்யாவிட்டாலும், வறட்சி ஏற்பட்டாலும், ஏன் தரிசு நிலமே நீங்கள் வைத்திருந்தாலும் அரசு சொல்லும் வரியை நீங்கள் கட்டிட வேண்டும் என்பதே ஷெர்ஷாவிற்கு முந்தைய ஆட்சியாளர்கள் செய்த வழிமுறை. ஒரு சில ஆட்சியாளர்களும் விதிவிலக்காகவும் இருந்தார்கள். வரி வாங்கு வதற்கு கூட நேரடி அரசாங்க அலுவலர்கள் வர மாட்டார்கள் இதற்கும் பல இடைத்தரகர்கள் இருப்பார்கள். அப்போது மற்ற வேலைகளைக் காட்டிலும் இந்த இடைத்தரகர் வேலைக்கே மவுசு அதிகமாம். வெள்ளையர்கள் ஆட்சியில் வரி வாங்கும் இடைத்தரகர்களாக செயல்பட்ட வர்கள் தான் இன்றைய ஜமீன்தார்கள்.

நிலம் யாருடையது என்று கேட்டால் இதோ அந்த சமூகத்தை சார்ந்த அந்த நபருடையது என்றே அன்றைய நிலத்திற்கான உரிமையாளர் களை அடையாளப்படுத்தினர். இந்த நிலம் இவருக்கானது தான் என்பதற்கு வாய்மொழியை தவிர வேறு சாட்சிகள் இல்லை. இதையெல்லாம் பற்றி எந்த கவலையுமில்லாமல் மன்னர்கள் ஆட்சி செய்வார்கள், கொள்ளை அடிப்பார்கள் அடுத்த மன்னனிடம் தோற்று வேறு இடம் தேடி ஓடுவார்கள். இதற்கு முற்றிலும் மாற்றாக ஒரு மன்னன் மக்களுக்காக மட்டுமே எனது ஆட்சி என்று பணியாற்றும் போது மக்கள் வாழ்வாதாரம் எப்படி மேம்படாமல் இருந்திட முடியும்?

ஷெர்ஷா முதலில் தனது ஆட்சிக்குட்பட்ட நிலங்களை அதன் தன்மைக்கேற்ப நான்கு வகைப்படுத்தி அதனடிப்படையில் வரி வசூல் செய்தார். மேலும், வளமான நிலத்தில் மூன்றில் ஒரு பங்கும் நடுத்தர நிலத்தில் நான்கில் ஒரு பங்கும் வரி என்று நிர்ணயித்தார்.

*1)* கேட்படாய் - இம்முறையில் அரசாங்க வரியை அறுவடையின் போதே அரசாங்க அலுவலர் மூன்றில் ஒரு பங்கை எடுத்துக் கொள்வார்.

*2)* லங்படாய் - அறுவடை செய்து களத்து களாக கட்டி வைக்கும் போது அரசாங்க அலுவலர் வரி வசூல் செய்து கொள்வார்.

*3)* ராசிப்படாய் - கதிர் அறுத்து கிடைத்த தானியத்தை நேரிடையாக வசூல் செய்து கொள்வார்கள்.

*4)* ஜமாய் - இதனை ஜப்தி என்றும் கூறுவார்கள் நிலத்தின் தன்மையை உணர்ந்து இவ்வளவு விளைச்சல் தரும் என்பதை கணித்து வரி வசூல் செய்து கொள்வார்கள்.

இந்த முறையை உற்று நோக்கும் போது இஸ்லாத்தில்ஜகாத்(ஏழைவரி) நிர்வாகமுறையை ஒத்திருக்கும் என்பது புரிய வரும்.

இதுவெல்லாம் போக மிக முக்கியமாக, நிலங்கள் இன்னாருடையது என்று பதிந்து பட்டாக்கள் கொடுக்கும் முறையை முதன் முதலில் ஏற்படுத்தினார்.



நிலத்திற்கு சொந்தமானவர்களுக்கு அந்த இடத்தை அளந்து ஒவ்வொருக்கும் சொந்தமானவர்களின் இடங்களையும் அவர்களது அடையாளங்களை வைத்து அரசாங்க பதிவேட்டிலும் பதிந்து நிலத்திற்குரியவரிடமும் அது அவருடைய நிலம் தான் என்பதற்கு அத்தாட்சியாக பத்திரங்கள் தரப்பட்டன.

இடைத்தரகர் எனும் பிரச்சனையை முற்றிலுமாக ஷெர்ஷா ஒழித்தார். வரி வாங்குவதற்கு நேரடியாக அரசாங்க அலுவலர்களே வருவார்கள். இடைத்தரகர்கள் இருந்தது தெரிந்தால் அவர்களுக்கு மிக கடுமையான தண்டனைகள் ஷெர்ஷாவின் ஆட்சியில் இருந்தது.(தண்டனை முறைகளை அடுத்து வரும் பிற்பகுதியில் பார்க்கலாம்.)

நிலவரி முறையில் அன்று ஷெர்ஷா ஏற்படுத்திய சீர்திருத்தங்களை அடிப்படையாக கொண்டு தான் ஆங்கிலேயர்கள் நிர்வாக முறைகளை கற்றுக் கொண்டார்கள்.

நமது பாடபுத்தகங்களிலும் இன்றைய நமது நிர்வாக முறைக்கு முன்னோர்களாக ஆங்கிலேயர் களே உள்ளனர். காரணம், ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தில் நடந்த நிர்வாக முறைகள் எல்லாம் ஆங்கிலேயர்களின் மொழியிலேயே பதிவு செய்யப்பட்டது.

ஆனால் ஷெர்ஷாவின் ஆட்சிக்காலத்தில் நிர்வாக மொழியாக இந்தியாவில் அதிகம் பேசப்பட்ட ஃபார்சி மொழியும் இந்துஸ்தானி மொழியுமே இருந்தன. நம் மனதில் ஏற்பட்ட மொழியின் மாற்றத்தாலும் ஆட்சியாளர்களின் துவேஷத்தாலும் ஷெர்ஷாவின் சாதனைகள் மறைக்கப்பட்டன.

**-தொடரும்**

**அபூ-சித்திக்.**







Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1, Mannady Street, Mannady, Chennai - 600 001.
Editor **M. GULAM MOHAMED,** Printed by M. Gulam Mohamed at **CHENNAI OFFSET PRINTERS,**
19/1, 21/2, Kitabath Khan Bhadhur Street, Chennai - 600 002.